# மன்னா

# “இயேசு உயிர்த்துவிட்டார், அவர் உரைத்ததுபோலவே உயிர்த்துவிட்டார்”

## என்று சீடர்கள் கூறிய அற்புதச் செய்தியை திருஅவை இன்று உலகெங்கும் எதிரொலிக்கிறது!

### ‘ஊருக்கும் உலகுக்கும்’ என்ற உயிர்ப்பு விழா சிறப்புச் செய்தியில் திருந்தந்தை பிரான்சிஸ்

உயிர்ப்புப் பெருவிழா ஞாயிறன்று நண்பகல் 12.00 மணிக்கு புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தின் மேல்மாடத்திலிருந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கிய செய்தியை 15ஆம் பக்கத்தில் காணலாம்.



### உயிர்ப்பு விழாச் சிறப்பிதழ்



“என்னை இப்படிப் பற்றிக்கொள்ளாதே, நான் என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை” (யோ 20:17)

‘மன்னா’ வாசகர்கள் அனைவருக்கும் உயிர்த்த ஆண்டவரின் இனிய நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம்.

**நிறைந்த ஆசீர்களுடன், அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார், ஆசிரியர் – மன்னா மற்றும் மன்னா பத்திரகை அலுவலகப் பணியாளர்கள்**

### துறவற வாழ்வில் பொன் விழாக் காணும் அருட்சகோதரி திரேசில்டா வாழ்த்துகிறோம்! இறையாசீர் வேண்டுகிறோம்!



அப்போஸ்தலிக்க கார்மேல் சபையைச் சேர்ந்தவரும் மன்னார் மறைமாவட்டத்தின் பள்ளிமுனைப் பங்கு மகளுமாகிய அருட்சகோதரி மேரி திரேசில்டா (அ.கா) அவர்கள் இம்மாதம் (ஏப்ரல்) 26ஆம் திகதி தனது துறவற வாழ்வில் 50 ஆண்டுகளை நிறைவுசெய்து பொன்விழாக் காண்கிறார்.

ஆழ்ந்த இறைபற்றும், பிறர்மேல் அன்பும், அக்கறையும் கொண்டு பல்வேறு பணித்தளங்களில் அர்ப்பணத்தோடு இவர் அரும்பணியாற்றியவர். பல ஏழை மற்றும் அனாதைப் பிள்ளைகளுக்கு வாழ்வு கொடுத்தவர். குருத்துவ துறவற அழைத்தல்களை ஊக்குவித்தவர். பணி ஆர்வமும் உத்வேகமும், மதிநுட்பமும் நிறைந்தவர். இத்தகைய மேலான சிறப்புக்களைக் கொண்ட அருட்சகோதரி திரேசில்டாவுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக பொன்விழா நல்வாழத்துக்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கிறது.

### ‘சிலுவையில் இரட்சணியம்’ உடக்குப் பாஸ்

#### பேசாலையில் நடந்தேறிய ஆண்டவரின் திருப்பாடுகளின் காட்சி



பேசாலைப் பங்கில் கடந்த ஏப்ரல் மாதம் 6ஆம் 7ஆம் திகதிகளில் பிராமாண்டமான முறையில் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி மேடையேற்றப்பட்டது. ‘உடக்குப் பாஸ்’ எனப்படும் பாரம்பரியக் கலை வடிவத்திலான இந்த அரங்க ஆற்றுகை பேசாலைக்கே உரிய தனித்துவமான கத்தோலிக்க கலை வடிவமாகத் திகழ்கின்றது.

பக்தி அருட்சியுடன் ஆற்றுகை செய்யப்பட்ட இந்நிகழ்வின் வெற்றிக்காக உழைத்த பங்குத்தந்தை பெனா அலெக்ஸ்சாண்டர் அடிகளார், உதவிப் பங்குத்தந்தை பெயிலன் குரூஸ் அடிகளார் ஆகியோருக்கும் மூத்த கலைஞர் திரு. சந்தியா மிராண்டா மற்றும் மிகுந்த ஊக்கத்தோடும், அர்ப்பணத்தோடும் பாடுபட்ட அனைத்துக் கலைஞர்கள், பங்கு மக்களுக்கும் மன்னார் மறைமாவட்டச் சமூகத்தின் சார்பாக மன்னா தனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றது. இந்நிகழ்வு தொடர்பான மேலதிக படங்களையும் விபரங்களையும் 15ஆம் பக்கத்தில் காணலாம்.

### ‘களங்கம் சுமந்த கல்வாரி நாயகன்’

#### நானாட்டானில் நடந்தேறிய இயேசுவின் கல்வாரிக் காவியம்



நானாட்டான் பங்கில் கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி நானாட்டான் ஆலய வளாகத்தில் ‘களங்கம் சுமந்த கல்வாரி நாயகன்’ என்ற பெயரில் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி சிறப்பாக ஆற்றுகை செய்யப்பட்டது. மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் இருந்து பெருமளவான மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்நிகழ்வின் வெற்றிக்கு உழைத்த நானாட்டான் பங்குத் தந்தை அருள்ராஜ் குரூஸ் அடிகளார் மற்றும் பங்கு மேய்ப்புப் பணிச் சபையினர், கலைஞர்களான கலாபூசணம் செ. மாசிலாமணி மற்றும் ஆசிரியர் ஞானம்மா உள்ளிட்ட அனைத்துக் கலைஞர்களுக்கும் பங்கு மக்களுக்கும் மன்னார் மறைமாவட்டச் சமூகத்தின் சார்பாக ‘மன்னா’ தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றது. இந்நிகழ்வு தொடர்பான மேலதிக படங்களை 15ஆம் பக்கத்தில் காணலாம்.

### மன்னா வாசகர்களின் அன்பான கவனத்திற்கு!

மன்னா பத்திரிகையை நேரடியாகப் பெறும் நீங்கள் பத்திரிகைக்குரிய பணத்தை காலம் தாமதிக்காமல் உங்கள் விநியோகஸ்தரிடம் வழங்கி ஒத்துழைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். பத்திரிகையை அச்சிடும் செலவு மற்றும் ஏனைய செலவுகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில் இப்பத்திரிகையின் விலையை அதிகரிக்காமல் கடந்த 6 வருடங்களாக ஒரே நிலையில் பேணி வருகின்றோம். எனவே இது விடயத்தில் உங்கள் அன்பான ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம்.

தபால் மூலம் பெறும் வாசகர்கள் கவனத்திற்கு! உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். நன்றி!

**- மன்னா நிர்வாகம்.**

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## நாமும் உயிர் பெறுவோம்!

### கல்லறையால் இயேசுவைக் கட்டுப்படுத்த முடியவில்லை

"மண்ணின்மீது மனிதனுக்காசை; மனிதன்மீது மண்ணுக்காசை; மண்தான் இறுதியில் ஜெயிக்கிறது" என்று பாடினார் கவிஞர் வைரமுத்து. மண் மனிதர்களை வெற்றிகொள்கிறது என்பது மனிதர்களைப் பொறுத்தவரை உண்மையாக இருக்கலாம். ஆனால் இயேசுவைப் பொறுத்தவரை அது உண்மையில்லை; கல்லறையால் இயேசுவைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஆயிரக்கணக்கான யூதர்களைக் கொன்ற கிட்லருடைய கல்லறை மூடியே கிடக்கிறது. உலகை வென்று வெற்றிக்கொடி நாட்டிய அலெக்சாண்டருடைய கல்லறையை யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. வெற்றிக்குமேல் வெற்றியைக் குவித்த நெப்போலியனின் கல்லறை கேட்பாரற்றுக் கிடக்கிறது. ஆனால் இயேசுவின் கல்லறை... அது வரலாற்றுக் கல்லறை!

யெருசலேமில் இயேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறை நுழைவாயிலில் ***"இவர் இங்கே இல்லை'*** என்ற வார்த்தைகள் இன்றும் பொறிக்கப்பட்டுள்ளன. இயேசுவின் காலியான கல்லறை புதிய நம்பிக்கையின் அடையாளமாகும். இருள் ஒருபோதும் ஒளியை வெற்றிகொள்ள முடியாது. தீமை ஒருபோதும் நன்மையை வெற்றிகொள்ள முடியாது. இயேசுவைச் சாவு தன் மடியில் வைத்திருக்க முடியவில்லை. சூரியனை திரைகொண்டு மூடமுடியுமா? இயேசு வெற்றி வீரராய், பெரும் சுடராய் உயிர்த்தெழுந்தார்.

ஆம், கல்லறை திறந்தது; காரிருள் மறைந்தது. கர்த்தர் இயேசு கன்ம வீரராய் உயிர்த்தெழுந்தார். சாவு வீழ்ந்தது; வாழ்வு வந்தது. மனுக்குலம் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் துள்ளிக் குதித்தது.

### இலட்சியங்களை அழிக்கமுடியாது

சாதாரணமானவர்களுக்கு வாழ்வு சாவில் முடியலாம். ஆனால் மாவீரர்களுக்கு, இலட்சியவாதிகளுக்கு சாவிலும் வாழ்வு தொடர்கிறது. இலட்சியவாதிகளை அழிக்கலாம்; ஆனால் அவர்களின் இலட்சியங்களை அழிக்கமுடியாது.

மத்திய அமெரிக்காவில் வாழ்ந்த அருட்தந்தை அய்வன் பெட்டன்கூட் 1976இல் கொலைசெய்யப்பட்டார். அவர் அங்கம் அங்கமாக அறுக்கப்பட்டு, "நீ ஏழைகளுக்காகப் போராடுவதை நிறுத்து" எனக் கோரப்பட்டார். உடலின் இறுதி அங்கம் அறுக்கப்பட்டு சாகும்வரை, "நான் கோதுமையாக சிதைகிறேன். மீண்டும் முளைப்பேன்" என்று கூறி இறந்தார்.

எல்சல்வதோர் நாட்டு ஆயர் ஒஸ்கார் றொமேரோ அவர்கள் "நான் இறந்தாலும் இந்நாட்டு மக்களில் மீண்டும் உயிர்ப்பேன்" என்ற உறுதியோடு இறந்தார்.

### இயேசுவின் உயிர்ப்பு விழா ஓர் வெற்றி விழா

கூட்டை உடைத்துக்கொண்டு குஞ்சுகள் வெளிவருவதுபோல, பாறையை உடைத்துக்கொண்டு இயேசு உயிர்த்தார். இயேசுவின் உயிர்ப்பு அவருடைய மானிப் பிறப்பிற்குக் கிடைத்த வெற்றி; உண்மைக்குக் கிடைத்த வெற்றி; நீதிக்குக் கிடைத்த வெற்றி.

உயிர்ப்பு விழா என்பது, கல்லறை பிளந்த விழா; பூமி அதிர்ந்த விழா; பாவம் தோற்ற விழா; மீட்பு மலர்ந்த விழா. இயேசுவின் உயிர்ப்பு சாவின் சக்திகளுக்கு முடிவு கட்டியது. சாத்தானின் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

"மரணமே உன் கூர் எங்கே? மரணமே உன் கொடுக்கு எங்கே?" எனக் கேட்டவர் சாவுக்கு சாவு மணி அடித்தவராக உயிர்த்துவிட்டார்.

### இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவத்தின் அத்திவாரம்

கிறிஸ்தவத்தின் அத்திவாரமாக, ஆணிவேராக இருப்பது இயேசுவின் உயிர்ப்பே. இயேசுவின் உயிர்ப்புத்தான் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை. இயேசுவின் உயிர்ப்புத்தான் கிறிஸ்தவ விசுவாசத்தின் மையம். இதைத்தான் பவுலடியார், "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் பொருளற்றதாகிவிடும்" (1 கொரி. 15: 14) என்கிறார்.

இயேசு கல்லறைக்குள் புதைக்கப்படவில்லை.
மாறாக விதைக்கப்பட்டார்!
இயேசுவின் அடக்கம் என்பது புதிய வாழ்வின் தொடக்கம்!
இயேசுவின் மரணம் என்பது புதிய வாழ்வின் ஜெனனம்!
இயேசுவின் இவ்வுலக முடிவு என்பது
மறுவுலக வாழ்வின் விடிவு!

### பாடுகளின் பின்னால் நமக்கும் உயிர்ப்பு உண்டு

இயேசுவின் பாடுகள் மற்றும் மரணத்தோடு அவருடைய வாழ்வு முற்றுப்பெறவில்லை. அவர் உயிர்த்தார். இதன் மூலம் பாடுகள் மரணத்திற்குப் பின்னால் வாழ்வு, உயிர்ப்பு உண்டு என்பதை நமக்கு எண்பித்தார். நம்முடைய நாளாந்த வாழ்க்கைத் துன்பங்கள், துயரங்கள் மட்டில் நாம் நம்பிக்கை இழக்கக்கூடாது; மனமுடைந்து போகக்கூடாது; விரக்தி அடையக்கூடாது. நமக்கும் வாழ்வு உண்டு; நமக்கும் உயிர்ப்பு உண்டு என்ற நம்பிக்கையை இயேசுவின் உயிர்ப்பு நமக்குத் தருகின்றது.

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,**
**அன்புடன் அருட்திரு. தமிழ் நேசன்,**
**மன்னா பதிப்பாசிரியர்**

## பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக ஜெனிவாவில் குரல் கொடுத்த
# இ. செபமாலை அடிகளார்



தோட்டவெளிப் பங்குத் தந்தையும், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவருமான அருட்பணியாளர் இம்மானுவேல் செபமாலை அவர்கள் அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மாநாட்டில் கலந்துகொண்டு தமிழ் மக்கள் சாார்பாக உரையாற்றினார்.

யு. என். எச். சி. ஆர் எனப்படும் ஐக்கிய நாடுகள் சபை உயர் ஸ்தானிகரின் அழைப்பின்பேரிலிலேயே இவர் அங்கு உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார்.

இவருடைய உரை அக்கூட்டத்தில் இருந்தவர்களின் வரவேற்பையும் கரகோசத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

காணாமலாக்கப்பட்டவர்கள் விவகாரம், அரசியற் கைதிகள் விவகாரம் போன்ற பாதிப்புற்ற மக்களின் நலன்களுக்காக தன்னை அர்ப்பணித்து பணியாற்றும் செபமாலை அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்டச் சமூகத்தின் செபங்களையும் வாழ்த்துக்களையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது.

## இளைஞர்களே!
## பிரான்சிஸ்கன் மறைபரப்பு அருட்சகோதரர்கள் துறவற சபை
## உங்களை அழைக்கிறது!

பிரான்சிஸ்கன் மறைபரப்பு துறவறசபை அருட்சகோதரர்கள் உலகெங்கும் பணிபுரிய உங்களை அழைக்கின்றார்கள்! மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடனோ அன்றேல் முகவரியுடனோ தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி எண்: 066-2223032

*அருட்சகோதரர் ஞா. மரியநாதன் (சி. எம். எஸ். எப்),*
*தேவ அழைத்தல் ஊக்குவிப்பாளர்,*
*(நாடு முழுவதற்கும்)*
*பிரான்சிஸ்கன் மறைபரப்பு அருட்சகோதரர்கள்,*
*இல: 116, விஹாரை வீதி,*
*மாத்தளை - 21000.*

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2017

### சித்திரை

02. தவக்கால நிதி சேகரிப்பு
07. பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலய பாத யாத்திரையும் திருப்பலியும்.
10. திருத்தைல மந்திரிப்பு கூட்டுத்திருப்பலி புனித செபஸ்தியார் பேராலயம் மாலை 5.00 மணி 7.30 மணி குருக்களுக்கான திருமணித்தியாலம் - ஆயர் இல்லம்.
14. புனித வெள்ளி உண்ணா நோன்பும், மாமிச தவிர்ப்பும், குருமடத்திற்கான நிதி சேகரிப்பும்.
16. உயிர்ப்பு ஞாயிறு.
- மன்னார் ஓய்வு நிலை ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்களின் பிறந்த தினம்.
23. புனித தோமையார் - கொவ்வங்குளம், நாகதாழ்வு, குமானயங்குளம்
- இறை இரக்கப் பெருவிழா - பம்பைமடு
25. புனித அந்தோனியார் விழா - தொங்குபாலம் (குஞ்சுக்குளம்)
30. மரிய மாதா - பெரிய நாவற்குளம்.


■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## உயர் கல்விக்கு தன்னை ஆயத்தம் செய்யும்
# அருட்பணியாளர் முரளி

## இவருடைய பன்முகப் பணிகளுக்காக நன்றி கூறுகின்றோம்!



மன்னார் மறைமாவட்ட ஆயரின் செயலராகக் கடமையாற்றிய அருட்பணியாளர் யூட்ஸ் முரளிதரன் அவர்கள் தனது உயர் கல்விக்கான முன்னாயத்த வகுப்புக்களில் பங்கெடுப்பதற்காக கம்பளையில் உள்ள இத்தாலி நாட்டு அருட்சகோதரிகளிடம் இத்தாலிய மொழியைக் கற்று வருகின்றார்.

உரோமையில் உள்ள ஊர்பானியா பல்கலைக்கழகத்தில் தன் உயர் கல்வியைப் பெறுவதற்கான அனுமதியைப் பெற்றுள்ள நிலையிலேயே இவர் இந்த இத்தாலிய வகுப்பில் பங்கெடுக்கின்றார்.


ஓய்வுபெற்ற ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் திடீர் சுகவீனமானபோது மிகவும் இக்கட்டான அந்த நாட்களில் முரளி அடிகளார் ஆயரை மிகுந்த அக்கறையோடும் அர்ப்பணிப்போடும் கவனித்து வந்தமைக்காக மன்னார் மறைமாவட்டம் அவருக்கு என்றும் நன்றியுடையதாக இருக்கும்.

அத்துடன் பல்லாண்டுகளாக தொடர்ந்துவந்த மாந்தை மாதா ஆலய விவகாரம் முடிவுக்கு வருவதற்கும் மடு அன்னையில் ஆரம்ப இரும்பிடமான அந்த இடத்தில் பிரமாண்டமான அழகான ஆலயம் அமைவதற்கும், மிகவும் சிறப்பான முறையில் ஆலய அபிசேக விழாவை நடத்துவதற்கும் அவர் ஆற்றிய பாரிய பங்களிப்பு என்றென்றும் நினைவுகூரத்தக்கது.

அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்றியதில் இருந்து புதுப்பொலிவுடன் பல வர்ணங்களில் 'பகிர்தல்' என்ற கருத்தில் அமைந்த 'SHARING' என்ற மறைமாவட்ட ஆங்கில செய்தி மடலின் ஆசிரியராகவும் சிறப்பாகப் பணியாற்றினார்.

முரளி அடிகளாரே, உங்கள் குறுகிய பணிக்காலத்தில் நிறைவான பல பணிகளைச் செய்து இறைவனுக்குப் புகழ் சேர்த்த உங்கள் உயர் கல்வி முயற்சிகள் இனிதே அமைய மன்னார் மறைமாவட்டத் திருச்சபைச் சமூகம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.

## கா.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற தலைமன்னார் மாணவன்



2016ஆம் ஆண்டு கா.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் தலைமன்னார் மேற்கு புனித லோறன்சியார் றோ.க.த.க பாடசாலை சார்பாக தோற்றிய மாணவ மாணவிகளில் ஜோசப் சுரேஸ்காந் சர்மிலன் சோசை என்பவர் 9A பெறுபேற்றை இப்பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாகப் பெற்று பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவரை ஆலய சபை, பாடசாலைச் சமூகம், விளையாட்டுக் கழகம் மற்றும் கிராம மக்கள் வாழ்த்திப் பாராட்டுகின்றனர். இவருடைய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அனைத்துத் தரப்பினரும் வாழ்த்துக்குரியவர்கள். இவருடைய வழியைப் பின்பற்றி ஏனைய மாணவர்களும் கல்வியில் சிறந்தோங்க மன்னா வாழ்த்தி நிற்கின்றது.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப்
பொருத்தமான
ஆக்கங்களை
சுருக்கமாகவும்,
இறுக்கமாகவும்
மன்னாவுக்கு
எழுதி
அனுப்புங்கள்.
தரம் கண்டு
பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# உண்மையான சமாதானம் என்பது நீதியிலிருந்து வெளிப்படுவதாகும்

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் உயிர்ப்பு விழாச் செய்தி – 2017



உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்குத் தோன்றி, சமாதானத்தை அவர்களுக்குக் கொடையாக அளித்தார். உண்மையான சமாதானம் என்பது நீதியிலிருந்து வெளிப்படுவதாகும். எம் நாட்டு மக்கள் நீதியையும், உண்மையையும் நிலைநாட்ட சரியான வழிகளைத் தேடுகின்ற இந்த நேரத்திலே நாம் கிறிஸ்துவின் உயிர்ப்பைக் கொண்டாடுகின்றோம்.

எம் தாய்நாட்டில் ஒற்றுமையையும், ஒப்புரவையும் மக்கள் மத்தியில் வலுவடையைச் செய்ய பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாம் ஒருவர் மற்றவரை மதித்து, எம் மத்தியில் காணப்படும் அற்ப வேறுபாடுகளைத் தவிர்த்து, மற்றவர்களுடைய மனிதாபிமானத்தைப் பாதுகாத்து மதிப்பளிக்கின்றபொழுதுதான் இவற்றைச் செய்ய முடியும். எனவே இப்பாஸ்கா விழாவிலே எமது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அமைதியையும் நீதியையும் கேட்டு மன்றாடுவோம் என இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் உயிர்ப்பு விழாச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செய்தியின் முழு வடிவத்தை 15ஆம் பக்கத்தில் காணலாம்.

## CIC சபை முதல்வர் - ஆயர் சந்திப்பு




அமல அன்னை அருட்சகோதரிகள் சபையின் (CIC) முதல்வர் (Superior General) அருட்சகோதரி சேவியர் அவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்தில் ஆயர் கிங்ஸ்லி ஆண்டகையைச் சந்தித்து கலந்துரையாடினார்.

## கார்மேல் மாகாண முதல்வர் - ஆயர் சந்திப்பு



அப்போஸ்தலிக்க கார்மேல் துறவற சபையின் இலங்கை மாகாண முதல்வர் அருட்சகோதரி ரூபிக்கா அவர்கள் கடந்த ஏப்ரல் 20ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்திற்கு வருகை தந்து ஆயர் கிங்ஸ்லி ஆண்டகையுடன் கலந்துரையாடினார்.

## ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் இளம் அமைதித் தூதர் மலாலா




சிறுமிகளின் கல்வியில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அமைதித் தூதராக, சிறார் உரிமை ஆர்வலரும், நோபெல் அமைதி ஆர்வலருமான மலாலா யூசாப் சாய் அவர்களை ஐ.நா.பொதுச் செயலர் நியமித்துள்ளார். நியு யோர்க் ஐ.நா. தலைமையகத்தில், அறங்காவலர் அவையில் கடந்த ஏப்ரல் 10ஆம் திகதி நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் இந்த நியமனத்தை மலாலாவுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஐ.நா. பொதுச் செயலர் அவர்கள், ''மலாலா மிகவும் கடினமான இடங்களைப் பார்வையிட்டுள்ளார். பல புலம்பெயர்ந்தவர் முகாம்களுக்குச் சென்றுள்ளார். மற்றும், லெபானின் பள்ளத்தாக்கில் மலாலா நிறுவனம் பள்ளிக்கூடம் நடத்துகின்றது'' என்று கூறினார்.

மலாலா அவர்கள் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் வரலாற்றில், முதன்முறையாக இளம் அமைதித் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், இது கூட்டெரெஸ் அவர்கள், ஐ.நா.பொதுச் செயலாளராகப் பணியேற்றபின் இடம்பெற்றுள்ள முதல் நியமனம் ஆகும். பள்ளிக்கூடம் சென்று திரும்புகையில் 2012ஆம் ஆண்டில் தலிபான்களால் சுடப்பட்டவர் மலாலா.

## தமிழ் மறைமாவட்டங்களின் குருமுதல்வர்கள் மடுவில் சந்திப்பு



யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய தமிழ் மறைமாவட்டங்களின் குருமுதல்வர்கள் கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி மடுவில் சந்தித்தனர். மேய்ப்புப்பணி சார்ந்த விடயங்களை கலந்துரையாடுவதற்காகவும், தமிழ் மறைமாவட்டங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

## அமைச்சர் ஜோண் மன்னார் வருகை



கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி அமைச்சர் ஜோண் அமரதுங்க அவர்கள் மன்னாருக்கு விஜயம் செய்து ஆயரைச் சந்தித்துடன் மாந்தைக்கு விஜயம் செய்து மாந்தை பங்குத்தந்தை அருட்திரு. சீமான் மரியதாசன் அடிகளாரையும் சந்தித்தார்.

## அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்கக்கோரி

# மன்னார் மறைமாவட்டத் திருச்சபை நடத்திய கவனயீர்ப்புப் போராட்டம்
















அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள முள்ளிக்குளம் உட்பட மக்கள் குடியிருப்புக் காணிகள், மற்றும் திருச்சபை சார்ந்த காணிகளை விடுவிக்கக்கோரி மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்டத் திருச்சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மக்கள் போராட்டத்தில் பெருந்தொகையான குருக்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு தங்கள் உணர்வுபூர்வமான எதிர்ப்பை அரசாங்கத்திற்கு வெளிப்படுத்தினர்.

அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலய வளாகத்தில் ஆரம்பமாகிய இப்பேரணி 11.00 மணியளவில் மன்னார் கச்சேரியை சென்றடைந்தது. அங்கு ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்று மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் மன்னார் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த யுத்த காலங்களில் மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் போன்ற மக்களின் குடியிருப்புக்களையும், ஏனைய காணிகளையும், மறைமாவட்டத்திற்குச் சொந்தமான காணிகளையும் அரசாங்கம் இராணுவத் தேவைக்கு என்று அபகரித்து வைத்துள்ள நிலையில் இவற்றை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ந்து அரசாங்கத்தை வலியுறுத்தி போராட்டங்களை நடாத்தி வந்துள்ளார்கள். புதிய அரசாங்கத்தில் மக்கள் நம்பிக்கை, தமது வாக்குகளை அளித்து அதனைத் தெரிவுசெய்து தமது பிரச்சினைகளுக்கு தீர்வு வரும் எனக் காத்திருந்தனர்.

நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரில் ஆட்சியமைத்த இந்த அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளில் பாராமுகமாய் தொடர்ந்து இருந்து வருகின்றது. குறிப்பாக அரச படைகளால் கையடக்கப்பட்ட மக்களின் காணிகளைக் கையளிக்காமல் மக்கள் வீதிகளிலும், காடு, கரம்பைகளிலும் தற்காலிகமாக குடியமரும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக முன்னெடுக்கப்பட்ட பல சாத்வீகப் போராட்டங்களையும் அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

### கவனயீர்ப்புப் பேரணியின்போது முழங்கிய கோசங்கள், எழுதப்பட்ட வாசகங்களில் சில:

1. ''எங்கள் சொந்த மண் எமக்கு மீண்டும் வேண்டும்''.
2. ''அரசே! அபகரித்திருக்கும் எங்கள் நிலத்தை எங்களிடம் மீண்டும் ஒப்படை''
3. ''நல்லாட்சி அரசே! எங்கள் பூர்வீக நிலத்தில் எம்மை வாழ விடு''
4. ''வளம் நிறைந்த எங்கள் நிலங்களும், வயல், மீன் துறையும் எமக்கு மீண்டும் வேண்டும்''.
5. ''நல்லாட்சி அரசே! எங்கள் வாழிடத்தில் மீண்டும் நாங்கள் வாழ்வதை உறுதிசெய்''
6. ''அரசே எமது நிலம் உங்கள் நிலம் அல்ல''.
7. ''நல்லாட்சி அரசே! முள்ளிக்குளம் கிராமத்தின் வரலாறு படைத்தவர்கள் நாங்கள்தான்''.
8. ''அரசே! நாங்கள் வழிபடுவதும், கல்வி கற்பதும், தொழில் செய்வதும் எங்கள் அடிப்படை உரிமையே''.

# சிறையில் பெரிய வியாழன் திருப்பலியை நிறைவேற்றி சிறைக் கைதிகளின் கால்களைக் கழுவிய திருத்தந்தை



இவ்வாண்டு ஏறத்தாழ 70 சிறைக்கைதிகள் வாழும் உரோமில் உள்ள பலியானோ சிறைக்குச் சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 3 பெண் கைதிகள், ஓர் இஸ்லாமியர், ஓர் அர்ஜென்டீனா நாட்டவர், ஓர் அல்பேனியார் உட்பட 12 சிறைக்கைதிகளின் காலடிகளைக் கழுவினார். இந்த 12 பேரில் இருவர் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளாவர். இங்குள்ள கைதிகளுக்கு திருப்பலி நிறைவேற்றி மறையுரையொன்றையும் திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கினார்.

புனித வியாழன் அன்று காலையில் வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் கர்தினால்கள், ஆயர்கள் மற்றும் அருள்பணியாளர்களுடன் புனித எண்ணெய் அர்ச்சிக்கும் திருப்பலியை நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மாலை உள்ளூர் நேரம் 3.00 மணிக்கு வத்திக்கான் சாந்தா மார்த்தா இல்லத்திலிருந்து புறப்பட்டு, உரோம் நகரிலிருந்து ஏறத்தாள 45 மைல் தொலைவிலிருக்கும் பலஸ்திரியா மறைமாவட்டத்தின் பலியானோ எனுமிடத்திலுள்ள தடுப்புக்காவல் மையத்திற்கு உள்ளூர் நேரம் மாலை 4.15 மணிக்குச் சென்றார்.

அங்குள்ள சிறைக் கைதிகளுடன் இயேசுவின் இறுதி உணவுத் திருப்பலியை நிறைவேற்றுவதே திருத்தந்தையின் திட்டம். கடந்த ஆண்டுகளிலும் வத்திக்கானுக்கு வெளியே உள்ள பல்வேறு மையங்களில் புனித வியாழன் இரவுணவுத் திருப்பலியை திருத்தந்தை பிரான்சிஸ் நிறைவேற்றியுள்ளார்.

2013ஆம் ஆண்டு தான் திருத்தந்தையாக பதவியேற்ற ஒன்பது நாட்களிலேயே சிறப்பித்த புனித வியாழன் திருப்பலியையும் உரோம் நகரின் இளையோர் சீர்திருத்தப்பள்ளியிலேயே நிறைவேற்றி, அங்குள்ள இளங்குற்றவாளிகள் 12 பேரின் காலடிகளைத் திருத்தந்தை கழுவினார். 2014ஆம் ஆண்டு நோயுற்றோர் மற்றும் முதியோரைப் பாராமரிக்கும் ஓர் இல்லத்திற்குச் சென்ற திருத்தந்தை அங்குள்ளோருடன் காலடிகளைக் கழுவும் சடங்கை நிறைவேற்றினார். 2015ஆம் ஆண்டு உரோம் நகரின் ரெபிபியா சிறைக்கைதிகளுடனும், கடந்த ஆண்டு Castrlnuovo di Porto எனுமிடத்தில் புலம்பெயர்ந்தோருடனும் இது நிறைவேற்றப்பட்டது.

# துயர் பகிர்கின்றோம்

**சில்வெஸ்ரர் அடிகளாரின் தந்தை (யாழ்ப்பாணம்)**

யாழ் மறைமாவட்டக் குருவும் பளை பங்குத்தந்தையுமாகிய அருட்தந்தை A.V. சில்வெஸ்ரர் தாஸ் அடிகளாரின் அன்புத்தந்தை அந்தோனிமுத்து அன்ரனி வின்சன் (துரைமணி) அவர்கள் கடந்த 03.03.2017 அன்று இறைவனடி சேர்ந்தார்.

**மகன் அடிகளாரின் தாயார் (யாழ்ப்பாணம்)**

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் பகுதித் தலைவராகப் பணியாற்றும் அருட்தந்தை மகன் அலோசியஸ் அவர்களின் அன்புத் தாயார் திருமதி மேரி மாகிறேற் அலோசியஸ் அவர்கள் கடந்த 21.03.2017 அன்று இறைவனடி சேர்ந்தார்.

**தயாபரன் அடிகளாரின் தந்தை (யாழ்ப்பாணம்)**

யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றும் அருட்தந்தை ஐ. பி. தயாபரன் அவர்களின் அன்புத் தந்தையார் திரு. செபஸ்ரி இருதயநாதர் அவர்கள் கடந்த 05.04.2017 அன்று இறைவனடி சேர்ந்தார்.

**றொபின்சன் அடிகளாரின் சகோதரி மற்றும் மச்சான் (யாழ்ப்பாணம்)**

யாழ் மறைமாவட்டக் குருவும் முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபருமான அருட்தந்தை றொபின்சன் யோசப் அவர்களின் அன்புச் சகோதரி மாகிறட் றோஸ் சுகந்தி மற்றும் அவரது கணவர் குணதாசன் கிறிஸ்ரி ஜோசப் ஆகியோர் கடந்த ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி அகால மரணமடைந்தனர்.

*தமது பாசத்துக்குரிய உறவுகளை இழந்து வாடும் எமது அன்புநிறைந்த குருக்களுக்கு மன்னார் மறைமாவட்டத்தின் ஆழ்ந்த அனுதாபங்களையும் செபங்களையும் மன்னா தெரிவிக்கின்றது. இவர்கள் அனைவரும் ஆண்டவரின் அமைதியில் இழைப்பாறுவார்களாக!*

## சிறந்த சமூக சேவையாளரான
# திரு. பி. சிந்தாத்துரை இறையடி
## அஞ்சலிகள்



மன்னார் மறைமாவட்டத்தின் சிறந்த பொதுநிலைத் தலைவர்களில் ஒருவரும், அர்ப்பணிப்புள்ள சமூக சேவையாளரும், துணிவுமிக்க மனித உரிமை ஆர்வலரும், தமிழுணர்வுமிக்க தமிழ்த் தேசியவாதியுமான திரு. பி. சிந்தாத்துரை அவர்கள் கடந்த ஏப்ரல் 17ஆம் திகதி அன்று இறைபதம் அடைந்தார்.

ஓய்வுபெற்ற அரச அதிகாரியாக விளங்கிய இவர், மன்னார் மாவட்டத்தின் பல்வேறு பொது அமைப்புக்களில் அங்கம் வகித்து பல காத்திரமான சமூக சேவைகளில் தன்னை ஈடுபடுத்தி வந்தவர். அதுமட்டுமன்றி சிறந்ததொரு கத்தோலிக்கராக வாழ்ந்து தான் சார்ந்துள்ள மன்னார் பங்குத் திருச்சபைக்கும், மன்னார் மறைமாவட்டத் திருச்சபைக்கும் பல அரிய பணிகளை ஆற்றியுள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவின் நீண்டகால அங்கத்தவராகவும், செயலாளராகவும், மன்னார் மாவட்ட ஓய்வூதியர்கள் சங்கத்தின் தலைவராகவும், மன்னார் மாவட்ட மரண விசாரணை அதிகாரியாகவும், மன்னார் தமிழ்ச் சங்கத்தின் உப தலைவர்களில் ஒருவராகவும், மன்னார் துயர் துடைப்புச் சங்கத்தின் உறுப்பினராகவும், மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியத்தின் செயலாளராகவும் இன்னும் பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சியின் நீண்ட கால - செயற்திறன் மிக்க உறுப்பினராகவும் இருந்து பல்வேறு நற்பணிகளை ஆற்றியவர். தன் உள்ளத்தில் சரியெனப்படுவதை தயங்காது எந்தவேளையிலும் துணிவோடு எடுத்துக் கூறும் (இறைவாக்கினருக்குரிய) பண்பைக் கொண்டவர்.

இவருடடைய பிரிவால் துயருறும் இவருடைய அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள் மற்றும் உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் மன்னார் மறைமாவட்ட சமூகம் சார்ந்த ஆழ்ந்த அனுதாபங்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது. பிறரன்புப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திய இந்த நல்ல பெருந்தகையின் ஆன்மா அமைதியில் இழைப்பாறுவதாக!

### நம்மட சின்னச் சுவாமிக்கும் மாற்றமா? எங்க பார்ப்பம்...?
# உதவிப் பங்குத்தந்தையர்களாகப் பணியாற்றும் இளம் குருக்களுக்கான புதிய நியமனங்கள்

மன்னார் மறைமாவட்டத்தில் உதவிப் பங்குத் தந்தையர்களாகப் பணியாற்றும் இளம் குருக்களுக்கான புதிய நியமனங்களை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் மேற்கொண்டுள்ளார். அதன் விபரம் வருமாறு:

1. அருட்பணி. அமல்றாஜ் குருஸ் வங்காலைப் பங்கில் இருந்து மன்னார் பேராலயத்திற்கு.
2. அருட்பணி. றொசான் செட்டிகுளம் பங்கில் இருந்து வங்காலைப் பங்கிற்கு.
3. அருட்பணி. பெய்லன் குரூஸ் - பேசாலைப் பங்கில் இருந்து வவுனியாப் பங்கிற்கு.
4. அருட்பணி. சாந்தன் சோசை - வவுனியாப் பங்கில் இருந்து பேசாலைப் பங்கிற்கு.
5. அருட்பணி. நீக்கிலஸ் மடுத்திருப்பதியிலிருந்து ஆயர் இல்லத்திற்கு.
   (ஆயரின் செயலாளராகவும், ஆயரின் வழிபாட்டு உதவியாளராகவும்)
6. அருட்பணி. தயாளன் கூஞ்ஞ - மன்னார் பேராலயத்தில் இருந்து மடுத்திருப்பதிக்கு.

புதிய பணித்தளங்களுக்கு நியமனம் பெற்றுள்ள இக்குருக்கள் மே மாதம் 3ஆம் திகதி தமது புதிய பணித்தளங்களைப் பொறுப்பெடுப்பர் என குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் மன்னாவுக்குத் தெரிவித்தார். இக்குருக்களுக்கு மன்னாவின் வாழ்த்துக்களும் செபங்களும்!

# அஞ்சலிகள்!
# சட்டத்தரணி புனிதநாயகத்தின் தந்தை இறைபதம்



மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியத்தின் தலைவரும்
யாழ் மற்றும் மன்னார் மறைமாவட்டங்களின் சட்ட ஆலோசகருமான திரு. அன்ரன் புனிதநாயகத்தின் அன்புத் தந்தையார் திரு. இ. தம்பியையா பத்திநாதர் அவர்கள் கடந்த மார்ச் 22ஆம் திகதி முல்லைத்தீவில் இறையடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆன்மா இறையடி சேரச் செபிப்பதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு மன்னார் மறைமாவட்டத்தின் அனுதாபங்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது.

### முள்ளிக்குள நிலவிடுவிப்பு தொடர்பாக
# மன்னார் ஆயர் இல்லப் பிரதிநிதிகள் வடமாகாண ஆளுனருடன் சந்திப்பு



கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி அன்று மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை, முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட்திரு. தவராசா, மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியத்தின் பிரதிநிதி திரு. கெனடி மற்றும் முள்ளிக்குள கிராமத்தின் பிரதிநிதிகள் இருவர் ஆகியோர் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண ஆளுனரை அவரது அலுவலகத்தில் சந்தித்து முள்ளிக்குள மக்களின் பிரச்சினைகள் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாக கலந்துரையாடினர்.

**அரச படைகளால் .....3ஆம் பக்கத் தொடர்**

இந்நிலையில்தான் அரசின் இந்த மக்கள் விரோதப் போக்கைக் கண்டிக்கும் வகையில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் தலைமையில் மறைமாவட்ட குருமுதல்வரின் முன்னெடுப்பில் மறைமாவட்டக் குருக்கள், கன்னியர்கள், அருட்சகோதரர்கள், பொது நிறுவனங்களில் அமைப்புக்கள், மனித உரிமை ஆர்வலர்கள், கத்தோலிக்க பொதுநிலைத் தலைவர்கள், அரசியல்வாதிகள், பொது மக்கள் எனப் பலரும் இணைந்து இப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டு தமது ஆதரவை வழங்கிய அனைவருக்கும் மன்னார் மறைமாவட்டத் திருச்சபை தனது நன்றிகளை தெரிவித்து நிற்கின்றது. மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து அரசாங்கம் இக்காணிகளை விடுவிக்காவிடில் மக்கள் போராட்டம் தொடரும் எனவும் இந்நிகழ்வின்போது சுட்டிக்காட்டப்பட்டது.


# மன்னா விநியோகஸ்தர்களே!
## மன்னா பத்திரிகையை விரைவாக விநியோகம் செய்யுங்கள்

**மன்னார் மறைமாவட்டச் செய்திகள்**

# மன்னார் மறைமாவட்ட முதியோர்களுக்கான தவக்காலத் தியானம்








மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சாமசத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட தவக்கால முன்னாயத்தத் தியானம் கடந்த 22.02.2017 புதன்கிழமை அன்று மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தின் 'இயேசுவே ஆண்டவர்' தியான மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகியது.

மன்னார் மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலிருந்தும் 336 அங்கத்தவர்கள் இதில் கலந்துகொண்டனர். தியானத்தை நெறிப்படுத்தியவர் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த அருட்தந்தை அல்பேட் அடிகளாவார். ஆன்மீக அருட்சிப் பாடல்களை இடை இடையே இன்னிசையாக வழங்கியவர் சகோதரர் சாஜஜோஸ் அவர்கள். அருட்பணி. எஸ். ஜெயபாலன் அடிகளாரின் அறிமுகத்தைத் தொடர்ந்து முதியோர் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. S.A மிராண்டா உரையாற்றினார். பின்னர் ஆன்மீக இயக்குனர் அருட்பணி. அல்பன் ராஜசிங்கம் அடிகளார் கருத்துரை வழங்கினார்.

நற்கருணை ஆசீர்வாதம் வழங்கப்பட்டு தியானம் முடிவுக்கு வந்தது. அனைவருக்கும் சிற்றூண்டி வழங்கப்பட்டது. உபதலைவர் திரு. அ. அந்தோனிமுத்து அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டது.

**தகவல்: திரு. எமில் குலாஸ்,**
**உறுப்பினர், முதியோர் சங்கங்களின் சமாசம்**

# குஞ்சுக்குளம் பங்கில் புதிய சிற்றாலயம்





குஞ்சுக்குளம் பங்கில் உள்ள நரிக்கழிஞ்சான் என்னும் இடத்தில் புனித பதுவை அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிற்றாலயம் ஒன்று மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகரால் அண்மையில் ஆசீர்வதித்து திறந்துவைக்கப்பட்டது.

குஞ்சுக்குளம் பங்குத்தந்தை அருட்பணி. அன்ரனி சோசை அடிகளார் இந்தக் கட்டிட நிர்மாணப் பணிகளையும், சிற்றாலயத் திறப்பு விழாவையும் சிறப்பாக முன்னின்று செயற்படுத்தியிருந்தார்.

# மாந்தையில் இடம்பெற்ற குணமாக்கல் வழிபாடு





மாந்தை மற்றும் ஆட்காட்டிவெளிப் பங்குகள் இணைந்து ஒழுங்குசெய்த தவக்கால விசேட குணமாக்கல் வழிபாடு மாந்தையில் இடம்பெற்றது. திருகோணமலை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் போல் றொபின்சன் இவ்வழிபாட்டை நெறிப்படுத்தினார். இந்நிகழ்வை மாந்தை பங்குத்தந்தை அருட்பணி. எஸ். சீமான் மரியதாசன், ஆட்காட்டிவெளிப் பங்குத்தந்தை அருட்பணி. டெஸ்மண்ட் ஆஞ்சலோ ஆகியோர் இணைந்து சிறப்பாக ஒழுங்குசெய்திருந்தனர்.

# பள்ளிமுனை புனித லூசியா முதியோர் சங்கத்தின் ஆன்மீகச் சுற்றுலா



பள்ளிமுனைப் பங்கின் புனித லூசியா முதியோர் சங்கத்தின் ஆன்மீகச் சுற்றுலா கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் ஆண்கள் 20 பேரும், பெண்கள் 31 பேருமாக 51 பேர்களுடன் ஆரம்பமானது.

கினிதுமை கல்வாரித் திருத்தலத்தில் சிலுவைப்பாதை மற்றும் திருப்பலியில் பங்குகொண்டோம். பின்னர் காலி கோட்டை, ரத்மலானை விமான நிலையம் போன்ற இடங்களைப் பார்வையிட்டோம். அன்று இரவு இறாகமை, தேவத்தை லங்காமாதா ஆலயத்தில் தங்கி இரவைக் கழித்தோம்.

அடுத்த நாள் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், கொட்டாஞ்சேனை புனித லூசியா தேவாலயம், சீதுவை கல்வாரி மையம், நீர்கொழும்பு கொட்டுவ என்னும் இடத்தில் உள்ள 'இறை இரக்க ஆண்டவர்' ஆலயம் போன்ற திருத்தலங்களைத் தரிசித்து செபித்து ஆறுதலும் அமைதியும் பெற்றோம்.

பிற்பாடு மாலை 6.00 மணியளவில் தலைவில்லு புனித அன்னம்மாள் ஆலயத்தை அடைந்து அங்கு இரவைக் கழித்தோம். அடுத்த நாள் ஞாயிறு தினம் திருப்பலியில் பங்குபற்றியபின் பகல் 12.00 மணிக்கு அநுராதபுரம் ஊடாக வந்து வரலாறு படைத்த கட்டிடங்களையும் பார்வையிட்டோம். பகல் 2.30 மணிக்கு பெரியகட்டு புனித அந்தோனியார் தேவாலயத்தைத் தரிசித்து செபித்துவிட்டு பிற்பகல் 4.00 மணியளவில் வீடு திரும்பினோம்.

**தகவல்: தலைவர், முதியோர் சங்கம், பள்ளிமுனை.**

# கொழும்பு சிறிய குருமடத்தினர் மன்னாருக்கு வருகை



கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புனித அலோசியஸ் சிறிய குருமடத்தைச் சேர்ந்த 142 மாணவர்கள் யாழ்ப்பாணம் சென்று திரும்பும் வழியில் மன்னார் மறைமாவட்டத்தைத் தரிசித்தனர். மன்னார் ஆயர் இல்லம், மன்னார் சிறிய குருமடம், மாந்தை மாதா ஆலயம் போன்ற இடங்களை அவர்கள் தரிசித்தனர். மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் இச்சிறிய குருமட மாணவர்களை ஆசீர்வதித்தார். மன்னார் சிறிய குருமடத்தில் இவர்களுக்கு மதிய விருந்து வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றுகின்ற இரண்டு புதிய தியாக்கோன்கள்



வின்சன்ரியன்ஸ் மிசனரி சபையின் தென்னிந்திய மாகாணத்தைச் சேர்ந்த இரண்டு தியாக்கோன்கள் தமது தியாக்கோன் பணிகளை மேற்கொள்வதற்காக மன்னார் மறைமாவட்டத்திற்கு வந்துள்ளனர். அருட்சகோதரர் மரிய கிளைனி மற்றும் பசில் கிளைனி ஆகிய இந்த இரட்டைச் சகோதரர்களில் மரியா மன்னார் பேராலயத்திலும், பசில் தேவன்பிட்டி பங்கிலும் பணியாற்றுகின்றனர்.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல்துறைத் தலைவர் - ஆயர் சந்திப்பு



ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல்துறைத் தலைவர் போல் கெப்ரின் அவர்கள் மன்னார் ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்து ஆயர் கிங்ஸ்லி ஆண்டகையைச் சந்தித்தார்.

நாட்டின் சமகால நிலவரங்கள் குறித்தும் சிறப்பாக முள்ளிக்குள விவகாரம் தொடர்பாகவும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது. இதன்போது குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளாரும் உடன் இருந்தார்.

# சுவிஸ் உயர் ஸ்தானிகர் - ஆயர் சந்திப்பு



சுவிஸ்சலாந்து நாட்டின் உயர் ஸ்தானிகர் மன்னார் ஆயர் இல்லத்திற்கு வருகை தந்து ஆயர் கிங்ஸ்லி ஆண்டகை அவர்களைச் சந்தித்து நாட்டின் சமகால நிலவரங்கள் தொடர்பாக கலந்துரையாடினார். இக்கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது என ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன.


**மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்**

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**- மன்னா நிர்வாகம்.**

புனித யோசவ்வாஸ் ஆண்டு சிறப்புக் கட்டுரை

அருட்பணி ச.வி.ப. மங்களராஜா, புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம்

# புனித ஜோசவ்வாஸ் அடிகளாரின் மறையறிவிப்பு முறைமை

சென்ற மாதத் தொடர்ச்சி

## மறைப்பணிப் பயணங்கள் - பணிகள் விளக்கம்

வாஸ் அடிகளாரது 24 வருட இலங்கை மறைப்பணிக் காலத்தில் அவர் எவ்வளவு தூரம் பயணித்திருப்பார் என்ற கேள்விக்கு விடை காணமுடியாது. அனேகமாக எல்லாப் பயணங்களையும் கால்நடையிலேயே மேற்கொண்டார். கண்டியில் இருந்த வேளைகளில் சில வேளைகளில் ஆற்றில் படகுகளில் பயணித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் முதலில் இருந்த 2½ வருடங்களில் சில்லாலை மூப்பரின் ஏற்பாட்டில் குடாநாட்டில் பச்சிலைப்பள்ளி. தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமத்தில் மற்ற இடங்கள், தீவுப்பகுதி எல்லா இடங்களுக்கும் கால்நடையில் சென்று வருவார். ஒல்லாந்தரின் கண்காணிப்பு தீவிரமாக இருந்தமையால் மாறுவேடத்தில்தான் சென்று வருவார். அவருக்குப்பின் அவருடைய சபைக்குருக்களும் அப்படியே செய்து வந்தார்கள். வடமராட்சியில் வதிரிப்பகுதியில் ஒரற்றோரியன் சபைக்குருக்களை பனாட்டுக்கூடையில் வைத்து ஒரு இடத்திலிருந்து மறைவாகக் கடத்தி வருவர் என்று ஞானப்பிரகாசர் சுவாமி குறிப்பிடுகின்றார். இலங்கைக்கு வரும்போதே வந்த கூலியாள் வேடம் அவருக்கு பிடித்ததொன்று, இயேசு தம்மை வெறுமையாக்கியதை இவ்வேடம் நினைவுபடுத்தியதாகக் குறிப்பிடுவார்.

வன்னியில் அவரது பயணங்கள் நீண்டவையாகவும் ஆபத்து நிறைந்தவையாகவுமிருந்தன. ஒல்லாந்தருடைய கண்காணிப்பு அவ்வளவாக இல்லாவிடினும் வன விலங்குகள், விஷ ஜந்துக்களின் ஆபத்துக்கள் அங்கிருந்தன. நீண்ட தூர மறைப்பயணங்கள் போகுமுன் வெகுநேரம் செபத்தில் ஈடுபட்ட பின்தான் புறப்படுவார். பயணம் பண்ணும்போது பூசைப்பெட்டி (பாரமான பூசைக்கல் உட்பட) மற்றும் பொருட்களைத் தாமே சுமப்பார். மற்றவரோடு செபமாலை ஓதியபடி பயணம் செய்வது வழக்கம் என்று பார்த்தோம். வருஷந்தோறும் மட்டக்களப்புத் துவக்கம் மாத்துறை மட்டுஞ் சுற்றி வளைத்துக் கிறிஸ்தவர்கள் வசிக்கிற சகல ஊர் கிராமஞ்சேரிகளுக்கும் நடந்து சமஸ்தரையும் பராமரித்து அந்தந்த ஸ்தலத்திற் தேவையாயிருக்கிறமட்டும் தாமதப்படுவார். யாதொரு ஸ்தலத்தில் ஒரேயொரு கிறிஸ்தவன் மட்டுமிருக்கிறதானாலும் போகாதிரார்…. தமது பிரசங்க விருத்தியைத் துவக்கவேண்டிய ஸ்தலத்திற்குச் சேர்ந்தபின் பயணத்தினால் இளைத்த சரீரத்துக்குச் சொற்ப இளைப்பாற்றியும் கொடாமற் தமது கடன் செபத்தைச் சொல்ல ஆரம்பித்து அதைத் தாம் முடிக்குமட்டும் சனங்களைக் கூடப்பண்ணுவார். அவர்கள் கூடினதன்பின் முதற் கன்னிசுத்த தேவமாதாவின் பிரார்த்தனை ஓதித் தேவதயவிலும் பயத்திலும் மனஸ்தாபங்களைப் படிப்பித்தும் விசுவாச நம்பிக்கை பக்தியென்கிற மூன்று தர்மங்களிலும் உச்சாரணங்களைப் பண்ணுவித்தும் பிற்பட பாவசங்கீர்த்தனங்களைக் கேட்பார்.

ஆயினும் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் வேறுவிதமாக, இரகசியமாகச்செயற்பட வேண்டியிருந்ததால் இராத்திரியிற் சிற்ப ஆகாரம் புசித்தபின் சொல்லப்பட்ட பிரகாரம் பாவசங்கீர்த்தனங்களைத்துவக்கி விடிய 3 மணி மட்டும் கேட்டுக்கொண்டிருப்பார். அதற்குப்பின் பூசை பண்ணியுஞ் சற்பிரசாதத்தைப் பகிர்ந்துங் கலியாணங்களை முடித்துஞ்சிற்ப நேரம் பிரசங்கம் பண்ணியும், அவ்விடத்தில் வேறேதேனுமில்லாதிருந்தால் முழு இராவும் கண்விழியாதவர்போல மறு ஸ்தலங்களுக்கு நடப்பார்.

முன்னர் போர்த்துக்கேயர் காலத்தில் இருந்த அமைப்பு (மூப்பு, அண்ணாவி, போன்றவைகள்) பயனுள்ளவையாக இருந்ததால் அதனைப் பேணி வந்தார். சகல கோவில்களிலுஞ் சிற்ப தேவஸ்தானங்களிலும் உபதேசிகளை வைத்து, ஞாயிறு திருநாட்களில் வேத இரகசியங்களையும் மந்திரங்களையும் படிப்பிக்கவும், பூசைத் தியானத்தையுஞ் சுவிசேஷத்தையும் வாசிக்கவும் கட்டளை பண்ணினதினால் ஒவ்வொரு கோவிலாலும் புறப்படுகிறபோது முன்சொல்லப்பட்ட நற்கிருத்தியங்கள் முடிந்தபின், பீடத்திற் செபித்து அதிற் காணிக்கையை வைத்து உபதேசி அதை எடுக்கச் சொல்லுவார். மிகுந்த கோவில்களின் அருகே கிறிஸ்தவர்களை அடக்கச்சவக்காலையையும் வைத்திருந்ததினால் அதில் மரித்தவர்களுடைய செபத்தைப் பண்ணி ஸ்தலத்தை ஆசீர்வதிப்பார். கோடை காலத்தில் அகோர காந்தலான வெயிலெறிக்கவும், மாரி காலத்திற் கனமழை வருஷிக்கவும் இதைதாங்கவும், அதை மறிக்கவும் ஒரு நாளும் குடையாகிலும் ஆலவட்டமாகிலும் பிடித்தவரல்ல. தூரப்பயணங்களிலும் பாதரட்சை தொடாமல் வெறுங்காலாய் நடந்து, கல்லுகளுக்கும், முள்ளுகளுக்கும் அதைப்பலியாக்குகிற பிரகாரம், தலையையும் தொப்பியில்லாமற் திறந்து வைத்து வெயிலிற் காயவும் மழையில் நனையவும் விடுவார்.

சகல ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடனுச்சவ நாட்களிலும் அந்தந்த நாடுகளுக்கடுத்த சுவிசேஷத்தை விரித்துரையாக்கினதன் பின் அதன் வாக்கியத்தைக் கொண்டு கேட்கிற சனங்களுடைய நடத்தைக்குப் பொருந்திய படிப்பினையைப் போதிப்பார். ஈறாந்தமாய் விசுவாசம், நம்பிக்கை, பக்தியென்கிற 3 தர்மங்களினுச்சாரணங்களைத் தாமும் பண்ணி மற்றவர்களையுஞ் சொல்லப்பண்ணுவார். மறுநாட்களில் விசுவாச இரகசியங்களை வெளியாக்குவார்.

கொடிய விலங்குகள் உள்ள காடுகள் ஊடே நடக்கும்போது மற்றவர்களை உறுதிப்படுத்தித் தாம் முன் செல்வார். மற்றவர்களைத் தமக்குப்பின் வர வேண்டுவார்.

மிகுந்த நடை காடுகளிலேதானே இராக்காலத்தில் தரிக்கச் சம்பவிக்கிறதனால் மற்றவர்களுக்கு இளைப்பாற்றியைக் கொடுக்க அவர் மாத்திரம் இராமுழுவதும் நித்திரையின்றி தியானத்தில் விழித்து தோழரைத் துஷ்ட மிருகங்களாற் காத்துக் கொண்டிருப்பார். மறுநாள் விடிந்ததின்பின், முந்தின பகலில் இளையாதவர் போலவும், இராத்திரியில் விழியாதவர் போலவும் கெட்டியாய் நடப்பார்....



அந்தரமான வழிகளிலும் சில காலம் பாவசங்கீர்த்தனம் பண்ணாத கிறீஸ்தவர்களைக் காண்பாராகில், நடுக்கானகத்திலேயென்றாலும், வனாந்தரத்திலேயென்றாலும் ஒரு துன்பமும் பாராமல் பயணத்தை நிற்பாட்டி, அவனவனுக்கான படிப்பினையைப் போதித்து ஆயத்தம்பண்ணிதன்பின் அவர்களுடைய பாவசங்கீர்த்தனங்களைக் கேட்பார். பின் விட்ட பயணத்தைத் தொடர்வார்.

வாஸ் அடிகள் கடினமான காட்டுப்பாதை வழியாகச் செல்லும்போது தமது பணியைப்பெற ஒருவர் விரும்புகிறார் என்றோ அல்லது ஒருவருக்குத் தேவைப்படுகிறது என்றோ அறிந்தால் அந்த மனிதர் சிலவேளை விரும்பாவிட்டாலும் அவரைத்தேடி 20-25 மைல் தேடிச்சென்று தமது வழமையான பாதைக்கு திரும்ப வேண்டியிருந்தாலும், காணாமல்போன ஆட்டைத் தேடிக்காடு, மேடு அலைந்து தேடிக்கண்டு பிடிக்கும் ஆயனைப்போலச் செயற்படுவது அவரது பணியின் சிறப்பம்சமாகும்.

## ஐரோப்பிய திருச்சபையில் இருந்து இலங்கைத் திருச்சபையாக மாறல்

போர்த்துக்கேயர் காலத்திலும் அவர்கள் 1658ல் இலங்கையிலிருந்து முற்றாக வெளியேறிய போதும் கத்தோலிக்க திருச்சபை குறிப்பாக வளர்ச்சியடைந்த நிலையிலிருந்தாலும் ஒரு ஐரோப்பிய திருச்சபையாகவேயிருந்தது. இதனால்தான் அவர்கள் வெளியேறியபின் மக்கள் பல்வேறு மூட நம்பிக்கைகளுக்குள்ளாயினர். நோய்கள், கொள்ளை நோய்கள் பரவும்போதும், தங்கள் அன்றாட பணிகளைச் செய்யும்போதும் குறிப்பாக வன்னிக்காடுகளில் பல அச்சுறுத்தும் பேய்கள் நடமாடுவதாக நம்பி வந்தனர். யானை பிடிப்பது போன்ற பணிகளிலீடுபடும்போது பல மூட நம்பிக்கைகளைக் கடைப்பிடித்தனர். பேய்களுக்கு பலி கொடுக்காமல் யானை பிடிக்க முடியாது என நம்பினர். அதுபோல சில பேய்களை சாந்திப்படுத்தாமல் கொள்ளை நோய்களைக் குணப்படுத்த முடியாது என்றும் நம்பினர்.

வாஸ் அடிகளார் காலத்தில் மன்னாருக்கு வந்து வன்னியில் பணியாற்றிவந்த பெட்றோ பெர்ராவோ (Pedro Ferrao) அடிகள் (மறை மாவட்டக்குருவாக வந்தவர், பின்னர் ஒரற்றோரியன் சபையில் சேர்ந்தவர்) மிகவும் சிரமப்பட்டு கடவுளில் நம்பிக்கை வைத்து யானை பிடிக்க மக்களை அனுப்பினார். அவர்களும் பேய்க்காரியம் செய்து யானை பிடிப்பவர்களிலும் பார்க்கக் கூடுதலான யானைகள் பிடிக்கத் தொடங்கினர். வாஸ் அடிகள் அடிக்கடி இவரையும் மற்றக்குருக்களையும் சந்தித்து உற்சாகப்படுத்தி வந்தார். (Antoninus, A.J.B., The Chronicle of the Sanctuary of Our Lady of Madhu, Jaffna, 1979, pp.45-47) நீண்ட நாள் கவனிப்பின்றி வாழ்ந்த மக்கள் விக்கிரக ஆராதனைகள் சென்றமையால் அடிக்கடி அவர்களைச் சந்தித்து சரியான பாதைக்கு கொண்டுவர வேண்டியிருந்தது.

1703ஆம் ஆண்டு பேட்றோ சல்டானா (Pedro Saldhana) அடிகள் வந்தபோது ஜூபிலி பலன் அறிவிப்பைக் கொண்டு வந்தார். அப்போது பறப்பாங்கண்டலில் எல்லாக்குருக்களும் பெரும் எண்ணிக்கையான மக்களும் கூடியிருந்தபோது இந்த ஜுபிலி பலன் அறிவிக்கப்பட்டு பலமணி நேரம் காத்திருந்து எல்லா மக்களும் பாவசங்கிர்த்தனம் செய்து, நற்கருணை உட்கொண்டனர்.

யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகள் வந்தபோது அவர் தயாரித்த பல மறைக்கல்வி, மற்றும் செப, ஞானவாசனை நூல்களால் மக்கள் பயன்பெற்றனர். பல்வேறு தேவைகளின்போதும் நோய்களின்போதும் வனவிலங்குகள் விச ஜந்துக்களினால் ஆபத்து வரும்போதும் இச்செபங்களை தமிழில் சொல்லி நம்பிக்கையுடன் செபித்து பயனடைந்தார்கள்.

வாஸ் அடிகள் ஒரு சுதேச திருச்சபையை உருவாக்க முதலில் அவர் மக்களுடைய உணவு, பழக்கவழக்கங்கள், இன்பதுன்பங்கள். நோய்நொடிகளுடன் இசைவாக்கம் பெற்றார். காட்டு வாழ்க்கையை அறியாத ஒருவர் பயங்கரக்காடுகளுடே முன்னே செல்ல மக்கள் பின்னே வருமளவிற்கு அவரது இசைவாக்கம் அமைந்திருந்ததெனலாம்.

மக்களின் ஆன்மீக தேவைகளில் மட்டுமின்றி மற்றத்தேவைகளையும் நிறைவு செய்ய முயல்வார். குறிப்பாக நோயுற்றபோது தம்மால் இயன்ற கைமருந்துகளை வழங்குவார். இவர் நோயுற்றிருந்த அனுபவத்துடன் சில்லாலையில் இருந்த 2 ½ வருட அனுபவம் இவரை சுதேச மருத்துவத்திலும் ஈடுபட வைத்தது எனலாம். 16ம் நூற்றாண்டின் இறுதியாண்டுகளில் நல்லூர் பகுதியில் கத்தோலிக்க சமயத்தை தழுவியிருந்த சில இந்து சுதேச மருத்துவ பாரம்பரியத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு அரசனால் நெருக்குவாரங்களுக்குட்பட்டனர். (அப்போது போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் இருந்தாலும் யாழ்ப்பாணம் 1622ல்தான் அவர்களது முழுக் கட்டுப்பாட்டுக்குள் வந்தது). மேற்படி குடும்பங்கள் கத்தோலிக்க சமயத்திற்கு பிரமாணிக்கமாக இருக்க விரும்பியதனால் பண்டத்தரிப்பிற்கு வந்து பின் சில்லாலையில் குடியேறினர் என்று வலுவான பாரம்பரியமொன்றுண்டு.

வாஸ் அடிகள் சில்லாலையில் இருந்தபோது இந்தக் குடும்பங்களுடன் நெருக்கமாக இருந்தமையால் இவர்களுடைய மருத்துவ முறைகளை அறிய முடிந்தது. அத்துடன் தமக்குத் தெரிந்த கோவா மருத்துவ முறைகளையும் இவர்களுடன் பகிரக்கூடியதாயிருந்தது. பிற்காலத்தில் மருத்துவத் தலைமுறையினர் மாதா மீதும் (மருந்து மாதா) தாங்கள் பெருமையோடு கொண்டாடும் ஜோசவ்வாஸ் அடிகள்மீதும் பற்றுதல் கொண்டிருந்தமையை நோக்கலாம். இதனால்தான் வாஸ் அடிகள் கோவாவுக்கு தமது சகசபையினருக்கு எழுதும்போது தமக்கு தேவையான செபமாலை, வரவணிக்கம் போன்றவற்றையும் சில மருந்துவகைகளையும் கேட்டு எழுதுவார். அவர்களும் அவற்றை அனுப்பிவைப்பர். எப்போதும் பூசைப்பெட்டியை எடுத்துச் செல்லும்போது அத்துடன் மருந்துப்பெட்டியையும் எடுத்துச் செல்லுவார். ஒரு கிராமத்தைச் சந்திக்கும்போது அங்கு பாவசங்கீர்த்தனம் திருப்பலி மற்றும் திருவருட்சாதனங்களை நிறைவேற்றியபின் அங்குள்ள நோயாளிகளைச் சந்தித்துத் தேவைப்படும்போது தம்மிடம் இருக்கும் மருந்துகளைக் கொடுத்து இதன் வழியாக நோய்கள் குணமாக, பேய்க்காரியம் செய்வதைத் தடுக்கவும் முடிந்தது. கண்டியரசன் 1701ஆம் ஆண்டு மருத்துவத்தில் ஆர்வம் கொண்டு போர்த்துக்கேய மொழியில் இருந்த ஒரு மருத்துவ நூலை சிங்களத்தில் மொழிபெயர்த்து தரும்படி கேட்டமை குறிப்பிடத்தக்கது.

வாஸ் அடிகள் எவ்வளவுக்கு ஒரு வீரம் செறிந்த சுதேச திருச்சபையை உருவாக்குவதில் வெற்றிகொண்டார் என்பது 1689 கிறிஸ்மஸ் தினத்தில் பிடிபட்ட டொன் பேட்றோ, டொன் மனுவல், மற்றும் 6 பொதுநிலையினர் வாஸ் அடிகளாரால் புத்துயிர் அளிக்கப்பட்ட தமது விசுவாசத்தைக் காக்க மறைசாட்சியானமை சான்றாகும். அது போலவே ஒரற்றோரியன் சபையினரின் 1717-1719 அறிக்கையின்படி மன்னாரில் மறைசாட்சியான யோசப் டயஸ் என்பவர் அந்தோனியோ லோப்பெஸ் என்று கல்வினிஸ்டாக மாறிய ஒருவரால் மறுதலிக்கப்பட்டு மறைசாட்சிகளானவை சில உதாரணங்களாகும்.

## முடிவுரை

உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள். நம்பிக்கைகொண்டு திருமுழுக்கு பெறுவோர் மீட்புப் பெறுவர்: நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்பு பெறுவர். நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அடையாளங்களைச் செய்வர். அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர், புதிய மொழிகளைப் பேசுவர், பாம்புகளைக் கையால் பிடிப்பர், கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்கு தீங்கிழைக்காது. அவர்கள் உடல்நலமற்றவர்மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர் என்று கூறினார்'' (மாற். 16:16-18)

புனித யோசப் வாஸ் அடிகளின் 24 வருட இலங்கைப் பணிவாழ்வு மேற்குறிப்பிட்ட இயேசுவின் வசனங்களை உள்வாங்கியதொன்றாக அமைந்திருந்தது. தம்மை அவர் முழுமையாக இப்பணிக்கு அர்ப்பணித்திருந்தார். 24 வருட இலங்கைப் பணிவாழ்வில் ஏறக்குறைய 10 வருடங்கள் தன்னந்தனியாக பல்வேறு நெருக்குவாரங்களின் மத்தியில் பணியாற்றினார். 10 வருடங்களின் பின் மற்ற ஒரற்றோரியன் சபைக்குருக்கள் படிப்படியாக இங்கு வரத்துவங்க அவர் விரும்பியிருந்தால் கோவா திரும்பியிருக்கலாம். அல்லது சற்று ஓய்வுக்காகவும், அழுத்தங்கள் இல்லாது சொற்ப காலம் அமைதியில் கழிக்கவும் கோவா சென்று வந்திருக்கலாம். இப்படி அவரது சபையைச் சார்ந்த சில குருக்கள் சென்றிருக்கின்றார்கள். இவ்வாறு சென்றிருந்தால் அவர் 75 அல்லது 80 வருட காலம் வாழ்ந்திருக்கலாம். எனினும் மற்றவர்கள்மீது எப்போதும் அக்கறை கொண்டிருந்தமையால் தாம் விலகிச்சென்றால் அல்லது சிறிதுகாலம் ஒதுக்கியிருந்தால் மற்றவர்களின் சுமை அதிகமாகும் என்று கருதியிருந்தார்.

ஒரு காலத்தில் 100க்கு மேற்பட்ட குருக்களும், சற்றதிகமான ஆலயங்களும் (பங்குகளும்) பல நூற்றுக்கணக்கான சிற்றாலயங்களும் 200,000க்கும் மேற்பட்ட கத்தோலிக்கரும் வாழ்ந்த இலங்கையில் 30 வருட இடைவெளிக்குப்பின் அடக்குமுறை கலாபனைகளுக்கு மத்தியில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் விலகிச்சென்று, அல்லது கல்வினிஸ்டுகளாக மாறி, ஆலயங்கள், பாடசாலைகள், மூடப்பட்டு அல்லது கல்வினிஸ்ட்செபக்கூடங்களாகவும், பாடசாலைகளாகவும் மாற்றப்பட்டு, மறைக்கல்வி மற்றும் பொது மறை நிகழ்வுகள் நின்றுபோனபின் தன்னந்தனியாக வந்து 10 வருடமும் பின் மற்றக்குருக்களுடன் இன்னும் 14 வருடங்களும் பணியாற்றி மீண்டும் 70,000 கத்தோலிக்கரை அவர்களைப் பராமரிக்க 10 குருக்களையும் 15 ஆலயங்களையும் (பங்குகளையும்) ஏற்படுத்தி நாடு முழுவதும் ஏறக்குறைய 400 சிற்றாலயங்களையும் ஏற்படுத்தினார் என்றால் இந்தக்கட்டமைப்பை இவ்வளவு கலாபனைகள் மத்தியில் இவராக ஏற்படுத்த எவ்வாறு முடிந்தது? இவரது எளிய, தாழ்ச்சியுள்ள வாழ்வும் இறை பராமரிப்பில் முழு நம்பிக்கை வைத்த பணியினால்தான் இது சாத்தியமானது எனலாம்.

**(இக்கட்டுரைத் தொடர் இத்துடன் நிறைவுபெறுகிறது)**

# மன்னார் மறைமாவட்டமும் தூய யோசவ்வாஸ் அடிகளாரும்

## கட்டுரைத் தொடர் – 3

**- அருள்தந்தை. ம. க. அருள்பிரகாசம் -**

## நானாட்டான்


நானாட்டான் பகுதிக்கு தூய யோசவ்வாஸ் அடிகளார் வந்து சென்றதற்கான அடையாளமாக கங்காணிதீவு புனித அடைக்கல அன்னை ஆலயத்தின் ஒரு கூரைச் சட்டத்தில் அவர் வந்த ஆண்டு எழுதப்பட்டிருந்ததாக அக்கிராம பெரியவர்களும் அருட்தந்தை பயஸ் அடிகளாரும் தெரிவித்தனர். பழைய ஆலயம் உடைக்கப்பட்டு தற்போது புதிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

## ஆத்திக்குழி

இக்கிராமத்தில் உள்ள புனித பிலிப் நேரியார் ஆலயம் ஒரற்ரோறியன் மறைபரப்பாளர்கள் காலத்தில் கட்டப்பட்ட ஆலயமாகும். இவ்வாலயத்தில் சில ஒரற்ரோறியன் குருக்கள் தங்கி பணியாற்றியதாக அக்கிராம மக்கள் தெரிவித்தனர். புனித யோசவ்வாஸ் அடிகளாரும் அவ்விடத்திற்குச் சென்று தங்கி பணியாற்றி இருப்பார் என்பதில் ஐயமில்லை.


## முத்தரிப்பு

முத்தரிப்புத்துறை புனித செபஸ்தியார் ஆலயம் ஒரற்ரோறியன் சபைக் குருக்களால் கட்டி பராமரிக்கப்பட்டு வந்த ஆலயமாகும். தற்போது புனித செங்கோல் மாதா ஆலயமாக விளங்குகின்றது.



பள்ளங் கண்டல், சிலாவத்துறை, அரிப்பு, நானாட்டான் பகுதிகளுக்கு யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் பொறுப்பாக இருந்த காலத்தில் யோசவ்வாஸ் அடிகளார் அரிப்புத்துறைக்கு வருகை தந்துள்ளார். அவர் வந்ததன் அடையாளமாக பொற்கேணிக்குப் போகும் பாதையில் போவஸ்ரா அமைப்பைக் கொண்ட சிலுவை ஒன்றும் அதனருகில் புனித அந்தோனியார் சுரூபமும் வைக்கப்பட்டுள்ளது. இறைமக்கள் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அங்கு சென்று வழிபட்டு வருகின்றனர். அவ்விடத்தில் மாதத்தில் ஒரு திருப்பலி நடைபெறுகின்றது. பேச முடியாதிருந்த ஒரு சிறுவனை பெற்றோர் ஆரம்பத்திலிருந்த சிலுவையடியில் கொண்டுவந்து செபித்தனர். அச்சிறுவன் அவ்விடத்தில் பேசத்தொடங்கினான். அதனால் ஆரம்பத்திலிருந்த அந்த சிலுவை வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்ட போதிலும் அதேமாதிரியான சிலுவை அவ்விடத்தில் அக்குடும்பத்தவர்களால் நாட்டப்பட்டுள்ளது.

## மடுக்கரை



மடுக்கரை என்ற புதிய கிராமமானது ஈழப் போரினால் இடம் பெயர்ந்த மக்களைக் குடியேற்றிய இடமாகும். இங்கு குடியேற்றப்பட்ட கத்தோலிக்க மக்கள் தமது பாதுகாவலராக புனித யோசவ்வாஸ் அடிகளாரைக் கொண்டுள்ளனர். 2000ஆம் ஆண்டில் இவ்வாலயம் கட்டப்பட்டது. இது அளவக்கைப் பங்கின் துணை ஆலயமாக விளங்குகின்றது. அருட்தந்தை பெனோ அடிகளாரால் கட்டப்பட்டு ஓய்வுபெற்ற ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையினால் அபிஷேகம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

## தேவன்பிட்டி



தேவன்பிட்டிப் பகுதியில் தூய யோசவ்வாஸ் அடிகளார் வந்து பணியாற்றியுள்ளார் என அக்கிராம மக்கள் நம்புகின்றனர். தேவன்பிட்டி கடற்பகுதியிலே ஒரு சிறிய தீவு உண்டு. சம்மனசு சுவாமி அவ்விடத்தில் தங்கியிருந்து வந்து தமது கிராமத்தில் பணியாற்றினார் என அக்கிராம மக்கள் நம்புகின்றனர். அவ்விடத்திற்கு வருடத்திற்கு ஒரு தடவை சென்று சம்மனசுக்கு திருவிழாத் திருப்பலி கொண்டாடி வருவது அக்கிராம மக்களின் பாரம்பரிய நிகழ்வாகும். நானும் ஒரு தடவை அத்திருவிழாவுக்குச் சென்று வந்தேன்.



தேவன்பிட்டி பாடசாலைக்கு அருகில் புனித யோசவ்வாஸ் அடிகளாருக்கு சிற்றாலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிழமையும் அங்கு திருப்பலி நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு வருடமும் தை மாதம் 16 ஆம் திகதி புனிதருக்குரிய திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## விடத்தல்த்தீவு



இக்கிராம மக்கள் தமது ஊரிலும் தமது முன்னோருக்கு தூய யோசவ்வாஸ் பணி புரிந்துள்ளார் என நம்புகின்றனர். அதன் அடையாளமாகத் தமது கிராமத்திலுள்ள பாடசாலைக்கு தூய யோசவ்வாஸ் மகாவித்தியாலயம் என பெயர் பொறித்துள்ளனர்.

## யோசப்வாஸ் நகர்



தூய யோசப்வாஸ் அடிகளார் அவர்கள் நீண்ட காலமாக மன்னார் மாந்தோட்டப் பகுதிகளில் பணியாற்றினார். விடத்தல்தீவிலும் அவர் வருகைதந்து தம் முன்னோருக்கு பணியாற்றினார் என அக்கிராம மக்கள் ஆழமாக விசுவசித்து வருகின்றனர். ஈழத்துக்கான யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து மன்னார்த்தீவுக்கு வந்த அம்மக்கள் தமக்குத் தரப்பட்ட அந்த புதிய குடியிருப்புப் பகுதியை 'யோசவ்வாஸ் நகர்' என அழைத்து வருகின்றனர். அவரது நினைவாக யோசவ்வாஸ் நகர் மன்னார்த்தீவில் தோட்டவெளிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. ஈழப்போரினால் பாதிக்கப்பட்ட 400 குடும்பங்கள் இவ்விடத்தில் குடியேற்றப்பட்டுள்ளனர். எல்லோரும் கத்தோலிக்கராவர். நற்கருணை ஆண்டவருக்கு என ஒரு கோவில் எழுப்பப்பட்டுள்ளது. தற்போது யோசவ்வாஸ் நகர் ஒரு புதிய பங்காகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## பெரிய கரிசல்



தூய யோசவ்வாஸ் அடிகளார் புத்தளம் கண்டி பிரதேசங்களில் பல்வேறு துன்பங்கள் துயரங்களின் மத்தியில் பணியாற்றிய பின்னர் நீர்கொழும்பிலிருந்து கடற்தொழிலாளிகளின் உதவியுடன் 1697 யூன் மாதம் மன்னார்த் தீவுக்கு வந்து மன்னார் நகரப்பகுதிகள், பெரியகரிசல், தலைமன்னார் பகுதிகளைக் பணியாற்றினார். பெரிய கரிசலில் அவர் நாட்டிய சிலுவை இன்றும் புனிதமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இது கோவாவிலுள்ள போஆ மலைக்குன்றில் இயேசு காட்சி கொடுத்த புதுமையான சிலுவையை ஒத்ததாக அமைந்துள்ளது. இறைமக்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சென்று அவ்விடத்தில் செபித்து வருகின்றனர். இங்கு பணியாற்றிய பின்னர் புனிதர் அவர்கள் எருக்கலம்பிட்டியூடாக நெடுந்தீவுக்குச் சென்றார்.

## செட்டிகுளம்



செட்டிகுளப் பகுதியில் ஒல்லாந்தரின் கலாபனை -யினால் அங்கும் இங்கும் அலைந்து திரிந்த கத்தோலிக்க மக்கள்மேலும் ஏனைய மக்கள்மேலும் கருசனையும் அன்பும் கொண்டு யோசப்வாஸ் அடிகளார் ஒரு பாலைமரப் பொந்தில் சிலுவை நாட்டி கொடிய விலங்குகளின் ஆபத்துக்களிலிருந்து மக்களைப் பாதுகாத்தார் என மக்கள் நீண்டகாலமாக விசுவசித்து வருகின்றனர். இவ்விடம் செட்டிகுளக் கத்தோலிக்கர்களால் நீண்டகாலமாக புனிதமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் இவ்விடத்தில் புனித யோசப்வாஸ் அடிகளாரின் விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இப்பிரதேச மக்களின் விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இது விளங்குகின்றது. யோசவ்வாஸ் அடிகளார் புனித நிலைக்கு உயர்த்தப்பட்ட பிற்பாடு அவ்விடத்தில் ஒரு சிற்றாலயம் அருட்தந்தை அலெக்ஸ்சாண்டர் சில்வா அவர்களால் கட்டப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு தை மாதம் 14ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையால் அபிசேகம் செய்து திறந்து வைக்கப்பட்டது. அத்தோடு செட்டிகுளப் பகுதியிலே பல இடங்களில் யோசப்வாஸ் அடிகளார் தங்கி பணியாற்றியதற்கான தடயங்கள் நிறையவே காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

செட்டிகுளப் பங்கு மக்கள் இன்றுவரை கத்தோலிக்க விசுவாசத்தில் நிலைத்து நிற்கின்றார்கள். இவ்விசுவாசம் புனித யோசப்வாஸ் அடிகளார் தூண்டிவிட்ட விசுவாசம் என்று சொன்னால் மிகையாகாது. செட்டிகுளமானது வவுனியா, மடு மற்றும் பண்டிவிரிச்சான் பங்குகளின்கீழ் நீண்டகாலமாக இயங்கிவந்த பின்னர் 1954ஆம் ஆண்டில் தனிப்பங்காக உருவெடுத்து இன்று 60வது ஆண்டு வைரவிழாவைக் கொண்டாடியுள்ளார்கள் என்றால் அது இறைவனின் அருட்செயலாகும்.

## முதலியார்குளம்



புனித யோசவ்வாஸ் அடிகளாரால் சிலுவை ஒன்று ஒரு பாலைமரத்திலே வைக்கப்பட்டது. அது தற்போது முதலியார் குளத்திலே வயல் பிரதேசமாகக் காணப் படுகின்றது. இவ்விடம் சூசைப்பிள்ளை (அருட்சகோதரி றோசாறி அவர்களின் முப்பாட்டனார்) என்பவருக்குரிய காணியாகும். அம்மரத்தை வெட்டாமல் இன்றுவரை அக்கிராம மக்கள் பாதுகாத்து வருகின்றனர். புனிதர் நாட்டிய சிலுவை அம்மரத்துக்குள் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர். விவசாய காலங்களில் மாத்திரம்தான் அவ்விடத்திற்கு மக்கள் சென்று பொங்கல் பொங்கி வழிபடுவர். இவ்விடம் கிராமத்திலிருந்து தூரமாக இருப்பதால் மக்கள் முதலியார்குளத்திலுள்ள குளக்கட்டில் காணப்படும் கூழாமரத்தடியில் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் சுரூபம் வைத்து வழிபட்டு வந்துள்ளனர். அம்மரமும் புனிதமாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

## முசல்குத்தி



இவ்விடம் முன்னைய காலத்தில் மக்கள் குடியிருந்த இடமாக விளங்கியது. தற்போது மக்கள் குடியிருப்பற்ற இடமாக விளங்குவதுடன் விவசாய நிலம் இருப்பதால் விவசாய காலத்தில் விவசாயிகள் வந்து விவசாயம் செய்வர். குளக்கட்டில் பெரிய ஆலமரப் பொந்தில் புனிதர் அவர்கள் சிலுவை வைத்துள்ளார். விவசாயிகள் வேளாண்மை செய்யும் காலத்தில் இங்கு வந்து பொங்கல் சமைத்து இறைவனை வழிபட்டு வருகின்றனர். இது ஒரு காட்டுப்பிரதேசமாக இருப்பதால் வேட்டைக்கு வருபவர்களும் இவ்விடத்திற்கு வந்து புனித யோசவ்வாஸ் அடிகளாரை நினைவுகூர்ந்து இறைவனை வழிபட்டுச் செல்வர். புனிதர் வைத்த சிலுவை அவ்விடத்தில் தற்போது காணப்படாவிட்டாலும் அங்கு வருபவர்கள் சிலுவைகள் கொண்டுவந்து வைத்து வழிபட்டு வருகின்றனர்.

(அடுத்த இதழிலும் தொடரும்)

# சிலைகளும் சிலைவழிபாடும்

## சுரூப வணக்கம் தொடர்பான சில விளக்கங்கள்

- அருட்தந்தை ஏ. பிலிப் (IVD) -

### சிலைகள்

வானகத் தந்தைக்கும், வார்த்தையாய் ஆனவருக்கும், தூய ஆவியாருக்கும் கல், களிமண், மரம், உலோகம் போன்ற படைக்கப்பட்ட பொருட்களால் உருவங்கள் செய்து, இவைதான் அவர்கள் என்று அடையாளப்படுத்துவதே சிலைகள். சிலைகள் அவசியமாக ஆள் உருவில் இருக்க வேண்டும் என்பது நியதி அல்ல எந்த உருவத்திலும் இவை இருக்கலாம்.

### சின்னங்கள்

இறந்தோரை அல்லது இருப்போரை நினைவுபடுத்த கல், களிமண், மரம், உலோகம் போன்றவற்றால் உருவாக்கப்படும் பொருட்களாக அல்லது எழுப்பப்படும் கட்டிடங்களாக அல்லது வரையப்படும் படங்களாக இச்சின்னங்கள் இருக்கின்றன.

### சின்னங்களே சுரூபங்கள்

மனிதரான இயேசுவையும், இவரின் தாயாரான மரியாவையும், ஏனைய புனிதர்களையும் அடையாளப்படுத்தும் உருவங்களை கத்தோலிக்கர்கள் சுரூபங்கள் அல்லது படங்கள் என்கிறார்கள். இவை புனிதர்களைக் கடவுள்கள் ஆக்கிய சிலைகள் அல்ல, மாறாக இவை இவர்களை நினைவுபடுத்தும் அடையாளச் சின்னங்கள் மட்டுமே.

### சிலைகளா? சின்னங்களா?

நம்மில் சிலர் மனிதரை அடையாளப்படுத்தும் சின்னங்களைச் சிலைகள் என்று அழைப்பதால், கடவுளை அடையாளப்படுத்தும் சிலைகளையும், மனிதரை அடையாளப்படுத்தும் சின்னங்களையும் ஒன்றாக்கி, எல்லாவற்றையுமே சிலைகளாக்கி, சிலைகளில் இருந்து சின்னங்களை வேறுபடுத்தத் தெரியாது தடுமாறுகிறோம்.

### இயேசுவுக்கு சிலையா? சின்னமா?

வார்த்தையானவர் மனிதரானார். மனிதராகுமுன் இருந்த வார்த்தையானவருக்குச் சிலையும் இல்லை, சின்னமும் இல்லை. மனிதரானபின் இவரை அடையாளப்படுத்தும் உருவங்கள் சின்னங்களாக மட்டுமே இருக்கின்றன. இவைகள் ஒருபோதும் சிலைகள் இல்லை.

### வானகத் தந்தையை நினைவூட்டும் அடையாளங்கள்

வானகத்தந்தை தொடக்கமும் முடிவும் இல்லாதிருக்கிறார் என்பதை நினைவூட்ட ஒரு முதிர்த்த வயதானவர் மேகங்களுக்குள் இருப்பதாக கற்பனைப் படம் வரைகிறார்கள். அல்லது இவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை வெளிப்படுத்த ஒற்றைக் கண்ணை வரைகிறார்கள். இவைகள் சிலைகளும் அல்ல சின்னங்களும் அல்ல வெறும் அடையாளங்கள் மட்டுமே.

### தூய ஆவியாரை நினைவூட்டும் அடையாளங்கள்

தூய அவியாரை அடையாளப்படுத்த ஒரு புறாவை வரைகிறார்கள். இயேசு திருமுழுக்குப் பெற்றபோது, தூய ஆவியார் இவர் மேல் ஒரு புறா வடிவில் இறங்கினார் என்பதால் இவரை புறாவின் உருவத்தில் அடையாளப்படுத்துகிறார்கள். இதைப்போன்று நெருப்பு, தண்ணீர், மேகம், காற்று, திருப்பொழிவுபெற்ற கரங்கள் என்று பல அடையாளங்கள் அவருக்கு இருக்கின்றன.

### கத்தோலிக்கரின் வழிபாடு

கத்தோலிக்கர்கள் மூவொரு இறைவனை மட்டுமே வழிபடுகிறார்கள். வானகத்தந்தையை மகிமைப்படுத்துவதே இவர்களின் இவ்வழிபாடு. இயேசு தம் பாடுகள், இறப்பு, உயிர்ப்பால் அவரை மகிமைப்படுத்துகிறார். இவரின் இப்புனித செயலில் பங்கெடுக்கத் தூய ஆவியார் கத்தோலிக்கரை இயேசுவோடு ஒன்றிணைக்கிறார். இதுவே கத்தோலிக்கரின் திருப்பலி என்ற திருவழிபாடு. இவர்களின் வழிபாட்டில் சிலைகள் எதுவும் இல்லை.

### கத்தோலிக்கர்களின் சுரூப வணக்கம்

மனிதரான இயேசுக்கு இவரின் தாயாரான மரியாவுக்கும், புனிதர்களுக்கும், மரியாதை செய்துதான் கத்தோலிக்கரின் திருச்சுரூப வணக்கம் திருச்சுரூபங்களுக்கு இவர்கள் செலுத்தும் வணக்கத்தை, புனிதர்களைக் கடவுள்களாக்கி அவர்களுக்குச் செலுத்தும் வழிபாடு என்று சொல்வது ஒருவரின் அறியாமையைக் குறிக்கிறது. புனிதர்களின் வணக்கத்தை வழிபாடு என்று சொல்வது முற்றிலும் தவறானது. புனிதர்களின் சுரூபங்கள் வணக்கத்துக்கு உரியவையே அன்றி வழிபாட்டுக்கு உரியவை அல்ல.

### கத்தோலிக்கர்கள் சிலைகளை வழிபடுகிறார்களா?

கத்தோலிக்கர்கள் வானகத் தந்தைக்கும், வார்த்தை ஆனவருக்கும், தூய ஆவியாருக்கும் சிலைகள் எழுப்பி அவற்றை வழிபடுவதில்லை.

### மோசேயின் காலத்தில் நிகழ்ந்த சிலை வழிபாடு

வானகத் தந்தையோடு பேச மோசே சீனாய் மலையின் உச்சிக்கு ஏறிச்சென்றார். இவரின் வருகை தாமதிக்கவே, மலையடிவாரத்தில் இருந்த மக்கள் (பெண்கள்) தங்கள் காது, கழுத்துகளில் இருந்த நகைகளைக் கழற்றி ஆரோனிடம்



கொடுத்து அவற்றை உருக்கி ஒரு மாட்டுக் கன்றை உருவாக்கினார்கள். காளை மாடுகளைக் கடவுள் என்று வழிபட்ட எகிப்தியரிடம் இருந்தே இஸ்ராயேலர் இதைப் பெற்றிருந்தார்கள். இதுவே தங்களை எகிப்தில் இருந்து அழைத்துவந்த கடவுள் என்று இதற்குப் பீடம் எழுப்பி, எரிபலிகள் செலுத்தினார்கள். இதனை அவர்கள் ஒரு விழாவாக, உண்டு குடித்துக் கும்மாளம் அடித்துக் கொண்டாடினார்கள். இஸ்ராயேலரின் இச்சிலை வழிபாட்டை விடுதலைப்பயண நூல் பதிவுசெய்துள்ளது. (வி.ப 32:2-7)

### எலியாவின் காலத்தில் நிகழ்ந்த சிலை வழிபாடு

தீர் சீதோன் நகர்களில் வாழ்ந்த கானனேயர் பாலுறவுக்கான கடவுளைச் சிலையாகச் செய்தார்கள். இதற்கு பாகால் என்று பெயரிட்டு வழிபட்டார்கள். அவர்களிடமிருந்தே இஸ்ராயேலரும் இச்சிலை வழிபாட்டை இறக்குமதி செய்தார்கள் (1அர.16:31). இறைவாக்கினர் எலியாவின் காலத்தில் இவர்களிடம் இச்சிலை வழிபாடு உச்சநிலை பெற்றிருந்தது. ஆகாஸ் அரசரின் ஆட்சிக் காலத்திலேயே எலியா இறைவாக்கினர் தோன்றினார்.

“ஆகாஸ் பாகால் என்ற பொய்த் தெய்வத்துக்கு சமாரியாவில் ஒரு பெரிய கோயில் எழுப்பி, அங்கே வைக்கப்பட்டிருந்த பாகாலின் சிலையை வழிபட வேண்டுமென மக்களை வற்புறுத்தி ஆணையிட்டான். இதனால் வானகத் தந்தையைப் பற்றிய எண்ணம் மக்களின் மனங்களில் இருந்து மங்கிப்போனது. சிலைவழிபாட்டை முறியடிக்க, பசி, கொலை, மிரட்டல் போன்ற துன்பங்கள் ஊடாகப் பயணித்த எலியா, பாகால் தெய்வத்தின் நூற்றுக்கணக்கிலான இறைவாக்கினர்களைப் பொய்யான போலிகளாக்கி, வானகத்தந்தை ஒருவரே உண்மையான கடவுள் என்பதை எண்பித்தார்” (1அர. 18:22-40).

### இவைகளும் சிலைகளா?

இஸ்ராயேலர் உருவாக்கிய தங்கக் கன்றும், பாகால் தேவதையும் சிலைகள்தான். இவற்றுக்கு இவர்கள் செய்த வழிபாடும் சிலைவழிபாடுதான். ஆனால் வானகத்தந்தையை நினைவூட்ட இவர்கள் பயன்படுத்திய பல பொருட்களையும், ஆற்றிய சில செயல்களையும், சிலைகள் என்றும் சிலைவழிபாடு என்றும் அழைக்கலாமா?

### கோல்

ஆரோனின் கோல் பாம்பாக மாறி, அவ்வாறு பாம்பாக மாறிய எகிப்திய மந்திரவாதிகளின் கோல்களை விழுங்கியது (வி.ப.7:8-12). மோசே, தன் கோலை நீட்ட செங்கடலின் நீர் பிரிந்து பாதை திறந்தது (வி.ப14:15-22). மோசே தன் கோலை பாறையில் அடிக்க தண்ணீர் வந்தது (வி.ப.17:6). மோசே, ஆரோன். இவர்களின் கோல்கள் சிலைகளா?

### வெண்கலப் பாம்பு

இஸ்ராயேலரில் தங்கள் முணுமுணுப்பால் பாலைவனத்தில் நச்சுப் பாம்புகளால் கடியுண்டு இறந்தார்கள். இருந்தோரைக் குணமாக்க வெண்கலப் பாம்பொன்றைச் செய்து, அதைக் கோலில் உயர்த்தி கடியுண்டவர்கள் பார்க்க வை என்று வானகத்தந்தை மோசேயிடம் சொன்னார். அதைப் பார்த்து கடியுண்ட எல்லோரும் குணமானார்கள் (எண்.7:9). மோசே உயர்த்திய வெண்கலப் பாம்பு சிலையா?

### பத்துக்கட்டளைப் பலகைகள்

மோசே வானகத் தந்தையை சீனாய் மலையில் சந்தித்தபோது, அவர் பத்துக்கட்டளைகளையும் இரு கற்பலகைகளில் எழுதிக் கொடுத்தார். அவர் அவற்றைத் தம் கைகளில் தாங்கியவாறு மலையில் இருந்து இறங்கி வந்தார் (வி.ப.34:29) இப்பத்துக் கட்டளைகள் எழுதப்பட்ட கற்பலகைகள் சிலைகளா?

### மன்னா

இஸ்ராயேலர் வனாந்தரத்தில் பசியால் வாடியபோது, வானகத் தந்தை அவர்களுக்கு மன்னாவைக் கொடுத்து அவர்களின் பசியை ஆற்றினார் (இ.ச.8:16). வானகத் தந்தை இவர்களுக்குக் கொடுத்த மன்னா சிலையா?

### வாக்குத்தத்தப் பேளை

இஸ்ராயேலர் தங்கத்தால் ஒரு பேழை செய்து அதனுள் பத்துக்கட்டளைப் பலகைகளையும், மன்னாவையும், ஆரோனின் கோலையும் வைத்து அதற்கென ஒரு கூடாரம் அமைத்து அப்பேழையை அதனுள் வைத்தார்கள் (எ.பி. 9:4-5). இந்த வாக்குத்தத்தப் பேழை சிலையா?

### பாஸ்கா விழா

ஆண்டுதோறும் தங்கள் எகிப்திய விடுதலையை நினைவூட்ட இஸ்ராயேலர் செம்மறி ஆட்டின் இறைச்சியையும், புளியாத அப்பத்தையும், கசப்பான கீரையையும், திராட்சை இரசத்தையும் உண்டு பாஸ்கா வழிபாடு செய்தார்கள் (இ.ச.16:1-4). வானகத்தந்தையின் நினைவாக இஸ்ராயேலர் இவ்விருந்தை உண்டு குடித்தது சிலை வழிபாடா?

### தூபம் காட்டுதல்

தாயகத்துள் இருந்த வாக்குத்தத்தப் பேழைக்கு தூபம் காட்ட லேவியின் வாரிசுகள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களின் வழிவந்தவரான சக்கரியா ஆலயத்துள் நுழைந்து பேழைக்குத் தூபம் காட்டினார். (லூக்.1:8-10) வாக்குத்தத்தப் பேழைக்குத் தூபம் காட்டியது சிலை வழிபாடா?

### திருவிவிலியம்

இறைவார்த்தையைத் தாங்கும் திருவிவிலியம் எழுதப்பட்ட மொழியும் காகிதமும் மனிதருடையது என்பதால் திருவிவிலியமும் ஒரு சிலையா?

### தேவநற்கருணை

இயேசுவின் உடலும் இரத்தமுமாக மாறும் அப்பமும் இரசமும் மனிதரின் உழைப்பால் உண்டான பொருட்கள் என்பதால் தேவநற்கருணையும் ஒரு சிலையா?

***“இவைகள் சிலைகளும் இல்லை, சிலைவழிபாடும் இல்லை. புனிதர்களின் சுரூபங்கள் சிலைகள் இல்லை என்பதால் அவைகளுக்குரிய வணக்கமும் சிலை வழிபாடு அற்றதாய் இருக்கிறது. திருவிவிலியத்திற்கும் தேவநற்கருணைக்கும் கத்தோலிக்கர் கொடுக்கும் இடம் சுரூபங்களுக்கு உயர்ந்ததாய் இருக்கிறது. எனவே கத்தோலிக்க திருச்சபையில் சிலைகளும், சிலை வழிபாடும் அறவே இல்லை.”***

## இக்காலச் சிலைகளும், சிலை வழிபாடும்

### தற்பெருமை

தற்பெருமை என்பது தன்னைவிட வேறு எவரும் பெரியவர் இல்லை என்ற நிலை. இந்த எண்ணத்தால் ஒருவர் தன்னைத் தானே கடவுளாக்கிக் கொள்கிறார். கடவுள் ஒருவர் இருந்தாலும் அவர் இவருக்குப் பயனற்றவர் ஆகிறார். தற்பெருமை இவருக்கு சிலை. தன்னைவிட வேறு எவரும் உயரக்கூடாது எனத் தடுப்பது இவரின் சிலைவழிபாடு.

### பணம்

பணம் ஒருவரின் வாழ்வுக்கு இன்றியமையாத தேவை. இதுவே இவரின் ஒரே தேவையாகிவிட்டால் பணமே இவரின் வாழ்வாகிறது. மனதில் எடுக்கும் இந்த முடிவால் இவர் கடவுளையும் காசுக்கு வாங்கி விற்க இயலுமானவராய் ஆகிறார். பணமே இவரின் சிலை. அதைத் தேடும் தவறான வழிகள் இவரின் சிலை வழிபாடு.

### அதிகாரம்

பணி என்ற போலி முகமூடியை அணிந்துகொண்டு ஒருவர் அதிகாரத்தை இறுகக் கட்டிப்பிடிக்கும்போது, பதவிமோகம் தரும் அதிகாரம் இவரின் சிலை. இவ்வதிகாரத்தை மற்றவர்கள்மேல் செலுத்தி அவர்களை அடிபணிய வைப்பதில் எழும் இன்பம் இவரின் சிலைவழிபாடு.

### பெயர்புகழ்

தன்னை மற்றவர்கள் பெரியவர், அறிவாளி, ஆற்றல் உள்ளவர், உயர் குடியினர், வல்லவர் என்று தன் பெயர் புகழை உயர்த்துவதே இவரின் சிலை. தான் செய்தது எல்லாவற்றிலும் தன் பெயரைப் பொறிக்க எடுக்கும் இவரின் முயற்சிகள் எல்லாம் இவரின் சிலைவழிபாடு.

### காமம்

காமமே வாழ்வு என்னும் ஒருவருக்கு காமம் இவரின் சிலை. இதை இடைவிடாது அனுபவிக்கும் போக்கு, இவரின் சிலை வழிபாடு.

### உணவு

அளவுக்கு அதிகமான உணவுப் பிரியம் ஒருவருக்குச் சிலை ஆகலாம். அதிகம் உண்ண ஆசைப்படுவது இவரின் சிலை வழிபாடாகலாம்.

***“கல்லைக் கடவுளாக்கினால் அது சிலை, மாறாக கல்லிலே கடவுளைக் கண்டால் அது சின்னம். கல்லை வழிபட்டால் அது சிலை வழிபாடு, மாறாக கல்லில் காணும் கடவுளை வழிபட்டால் அது கடவுள் வழிபாடு.”***


## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவைச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். நன்றி!

- மன்னா நிர்வாகம்.

# உயிர்ப்பு விழாச் சிறப்பிதழ்

# உயிர்த்த வாழ்வை வாழ்வோம்

– மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை – மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் –

### முன்னுரை

கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரியவர்களே! உங்கள் அனைவருக்கும் "உயிர்ப்பு விழா" வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கிறிஸ்து உயிர்த்தார். மரணத்தை வென்றார். ஆனந்தமுடனே அல்லேலூயா பாடி அகமகிழ்ந்திடுவோம்.

தவக்காலத்தின் தொடக்க நாளன்றே உயிர்ப்பு விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என்ற எதிர்நோக்கோடு தவக்கால யாத்திரையைத் தொடங்கினோம். அர்த்தமுள்ள எமது தவக்கால யாத்திரை இன்று பாஸ்கா விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாட வழிவகுத்தது. உயிர்ப்பின் மகிமையை, மறையுண்மையை, மகத்துவத்தை அழமாக உணர்ந்தால்தான் நாமும் உயிர்த்த வாழ்வை எதிர்நோக்குடன் வாழ்ந்து கிறிஸ்துவின் வெற்றியில் பங்குபெற முடியும்.

### உயிர்ப்பு நம்பிக்கை

இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பே கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை அடித்தளம். கிறிஸ்தவ நம்பிக்கையின் ஊற்றும் நிலைத்த சக்தியுமாகத் திகழ்கின்றது. கிறிஸ்தவர்களின் அடிப்படை நம்பிக்கைகளுள் முக்கியமானது இறந்து உயிர்த்தலாகும். நம்முடைய நம்பிக்கை அறிக்கையில் மிகவும் முக்கியமானதாக இருப்பது இறந்த மூன்றாம் நாள் இயேசு உயிர்த்தார் என்பதே.

புனித பவுலடியார் உயிர்ப்புமீது உறுதியான நம்பிக்கை கொண்டிருந்ததுடன் உயிர்ப்பே கிறிஸ்தவர்களின், கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையான மறைபொருள் என்பதையும் மிக ஆழமாக வலியுறுத்தியுள்ளார். இவர் உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்றவர்களைப் பார்த்து. "இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார் என அறிவிக்கப்பட்டிருக்க உங்களுள் சிலர் இறந்தேர் உயிர்த்தெழுவதில்லை எனச் சொல்வது ஏன்? இறந்தோர் உயிர்த்தெழமாட்டார் எனில் கிறிஸ்துவும் உயிருடன் எழுப்பப்படவில்லை என்றாகிவிடும். கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" என்று கூறி உயிர்ப்புப் பற்றிய உண்மையை விளக்குகிறார்.

### உயிர்ப்பைப் புரிந்துகொள்வது எப்படி?

யோவான் நற்செய்தியாளர் இரு பொருள்படும் ஒரு சொல்லைச் செல்லி உயிர்ப்பின் உண்மையைப் புரியவைக்கின்றார். (உ+ம்) மானிட மகன் உயர்த்தப்பட வேண்டும் என்று கூறும்போது 'உயர்த்தப்படுதல்' எனும் சொல், இயேசு சிலுவையில் உயர்த்தப்படுதலையும் அவரது உயிர்த்தெழுதலையும் குறிக்கிறது. (உ+ம்) கோதுமை மணி மண்ணில் மடிதல் என்று கூறுகையில் கோதுமை மணியின் இறப்பையும் குறிக்கின்றது. அதேவேளையில் வேறு பல கோதுமை மணிகள் உருவாகப் பலனளிக்கின்றது. மண்ணில் மடிதல் அதன் இறப்பைக் குறித்தாலும், அதன் வழியாக அதற்குக் கிடைக்கும் புதிய பிறப்பையும், பலனளிக்கும் தன்மையையும் வெளிப்படுத்துகின்றது.



(உ+ம்) பாஸ்கா – கடத்தல் என்ற வார்த்தை உயிரோடு இருக்கும் நிலையிலிருந்து இறப்பு நிலையை அடைவதைக் குறிக்கிறது. வேறொரு விதமாகப் புரிந்துகொண்டால், நிலையற்ற வாழ்விலிருந்து நிலையான வாழ்வுக்குக் கடந்து செல்வதைக் குறிக்கின்றது. இயேசு இறப்பைக் கடந்துவிட்டார்; இறப்பை வெற்றிகொண்டார். மேலும், இதனைப் புரிந்துகொள்ளப் புனித பவுல் பயன்படுத்தும் வார்த்தைகளைப் பார்ப்போம்.

- அழிவுக்குரியதாய் இருந்தது அழியாததாய் உயிர்பெற்றெழுகிறது.
- மதிப்பற்றதாய் இருந்தது மாண்புக்குரியதாய் உயிர்ப்பெற்றெழுகிறது.
- வலுவற்றதாய் இருந்தது வல்லமையுள்ளதாய் உயிர் பெற்றெழுகிறது.
- ஊனியல்பு கொண்டதாய் இருந்தது ஆவிக்குரிய உடலாய் உயிர்பெற்றெழுகின்றது.
- ஊனியல்பு கொண்ட உடல், இச்சைகளால் ஆட்கொள்ளப்பட்டிருக்கும் ஆவிக்குரிய உடல் அனைத்தையும் கடந்த நிலையில் இருக்கும்.

### உயிர்த்த வாழ்வை வாழ்வது எவ்வாறு?

'இதோ நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்' (தி வெ 21:5) என்ற ஆண்டவரின் வார்த்தையை நம்பி, எதிர்நோக்கோடு வாழ்வது.

விசுவாசிகளாகிய நாம் உயிர்ப்பை நம்புகிறோம். இயேசுவே உயிர்ப்பும், உயிரும். அவர் நம்மைப் புதுப்பிக்க, உயிர்ப்பிக்க இறந்தவர். இறப்பதற்காகப் பிறந்தவர். கிறிஸ்துவின் புதுப்படைப்பு அவரது உயிர்ப்பில் ஆரம்பிக்கிறது. அது படிப்படியாக எம்மை மாற்றுகின்றது. "தாழ்வுக்குரிய எம் உடலை மாட்சிக்குரிய தம் உடலில் சாயலாக உருமாற்றுவார்' (பிலி 3:20-21) என்கிறார் புனித பவுல். பவுலின் பார்வையில் நாம் புதுப்படைப்புக்களாய் வாழ வேண்டும் என்பதே கடவுளின் திருவுளம் (உரோ 6:4).

இப்புதுப்படைப்பின் ஆரம்பம் கிறிஸ்துவோடு இணைந்திருப்பது (2கொரி 5:17) என்கிறார் புனித பவுல். கிறிஸ்துவோடு இணைந்திருப்பது என்பது அவரது பாடுகளின், மரணத்தில் பங்குகொள்வதாகும். ஊனியல்புடைய மனிதர் இறை மாட்சியை உரிமைப் பேறாக அடைய முடியாது. எனவே அவ்வூனியல்புடைய நாம் இறக்க வேண்டும். 'திருமுழுக்கில் அவரோடு இறந்து அவரோடு அடக்கம் செய்யப்பட்ட நாம், அவரோடு உயிர்த்தெழுவோம்' என்கிறார் புனித பவுல் (உரே 6:8, கலா 2:19, 6:14, பிலி 3:8-11, கொலோ 2:12, 3:1-14).

ஆவிக்குரிய இயல்பு கொண்ட நாம் உயர்த்தப்பட்டவர்களாயின் ஏன் இன்னும் ஊனியல்பின் இச்சைகளுடன் பேராடுகிறோம்? ஊனியல்பில் வாழ்ந்து நேரத்தை வீணாக்குகிறோம்? உயர்த்தப்பட்ட ஆண்டவரை உற்றுநோக்குவதற்குப் பதிலாக ஏன் எம்மையும் எம்மைச் சுற்றியுள்ளவர்களையும் நோக்கி செலவிடுகிறோம்? "நீங்கள் கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுந்தவர்களானால் மேலுலகைச் சார்ந்தவற்றை நாடுங்கள்" (கொலோ 3:1) என்கிறார் புனித பவுல். ஆண்டவரை உற்றுநோக்குவதை மட்டும் தேர்ந்துகொண்டால், இப்போது நாம் ஊனியல்பிலிருந்து, ஆவிக்குரிய இயல்புக்கு நகர்ந்து செல்லலாம். புகழ்ச்சியும், ஆராதனையும் நிறைந்த வாழ்வு வாழ்ந்தால், கடவுளிடம் சரணடைந்து வாழ்வு வாழ்ந்தால், தூய ஆவியால் வழிநடத்தப்பட்டு ஆவிக்குள் வாழ்ந்தால் இவ்வுலகில் வாழும்போதே உயிர்த்த வாழ்வை வாழமுடியும். இத்தகைய வாழ்வை நாம் புனிதர்களிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்.

வேதனைகள், கலாபனைகள், சிலுவைகள் - சாபங்கள் அல்ல. கடவுளின் தண்டனையும் அல்ல மாறாக, கடவுள் எம்மைப் புனிதமாக்கும், புதுப்படைப்பாக்கும், உருவமாற்றும் ஊடகங்கள் என்பதை ஏற்று வாழக் கற்றுக்கொண்டால் உயிர்த்த வாழ்வை வாழ்கிறோம். எமது வாழ்வு எப்போதும் ஏதேன் தோட்டமாகாது. மாறாக, கெத்சமனி தோட்டங்கள் வழியாகவும் நடக்க வேண்டி வரும் என உணர்ந்தால் உயிர்த்த வாழ்வை வாழ்வோம்.

உயிர்ப்பு நம்பிக்கை இல்லையாயின் மனித வாழ்விற்கு இலக்கோ, நோக்கமோ இன்றி அர்த்தமற்றுப் போகும். உயிர்ப்பு நிலைவாழ்வு என்னும் மறுமை பற்றிய அதிசயமே, இம்மை வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகிறது.

# இந்தப் புழுதியும் புத்துயிர் பெறும்

அஸ்தமனம் சூரியனுக்கு வீழ்ச்சி அல்ல, கல்வாரி மரணம் இயேசுவுக்கு தோல்வி அல்ல, தோல்விக்குப் பிறகு வெற்றி. இயேசுவைப் பெறுத்தவரை தோல்வியே வெற்றி

வாழப்பிறந்தவர்கள் மனிதர்கள். இயேசு சாவதற்கென்றே பிறந்தவர் அன்றோ? இயேசுவின் மரணம்தான் இயேசுவின் மனிதப் பிறப்பின் நோக்கம் என்றால் இலட்சியத்தின் நிறைவேற்றம் எப்படித் தோல்வியாக இருக்க முடியும்? இந்த வெற்றிக்கு இறைவன் கொடுத்த வடிவம்தான் இயேசுவின் உயிர்ப்பு. இயேசுவின் உயிர்ப்பே அலகையின்மீதும், பாவத்தின்மீதும் அதன் விளைவான நோவு, சாவின்மீதும் கொண்ட வெற்றி. இது இயேசுவோடு மட்டும் முடிந்துவிட்டது என்றால் அது வரலாற்று நிகழ்வாகவே இருக்கும். இறைதந்தை இயேசுவில் பெற்ற வெற்றியை ஒவ்வொருவர் வாழ்விலும் காண வேண்டுமென்று விரும்புகிறார்.

நமது வாழ்விலும், நாம் சார்ந்த சமுதாயத்திலும் இயேசுவின் உயிர்ப்பு வெளிப்பட வேண்டும். இயேசுவின் உயிர்ப்பு எல்லா மக்களுக்கும் உயிரும் உயிர்ப்பும் ஆகும்.

1980ஆம் ஆண்டு பங்குனி 24ஆம் நாள் திருப்பலி நிறைவேற்றிக்கொண்டிருந்த எல்சால்வதோர் நாட்டுப் பேராயர் ஆஸ்கார் ரொமேரோ, தான் கொலை செய்யப்படுமுன் சொன்னார், "இறப்பதற்கு நான் அஞ்சவில்லை. இறப்பது நானாக இருக்க, உயிர்ப்பது சரித்திரமாகவும், சமுதாயமாகவும் இருக்கப்போகிறது என்று மகிழ்ச்சி அடைகின்றேன். "அவர்கள் என் உடலைக் கொல்ல முடியுமே தவிர என் குரலை அடக்கி விடமுடியாது" என்றார் அந்த பேராயர். ஆகவே இயேசுவின் உயிர்ப்பு நம்மிலும் சமுதாயத்திலும் வெளிப்பட வேண்டும்.

கி.பி நான்காம் நூற்றாண்டுவரை திருச்சபை கொண்டாடிய ஒரே விழா உயிர்ப்பு விழாவாகும். இன்று நாம் நினைவுகூரும் விழாக்களில் முதன்மையானதும், முக்கியமானதும் இயேசுவின் உயிர்ப்பு விழாவே. ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் இயேசு உயிர்ப்பதில்லை.

- சண்டையும், சச்சரவும் மறைந்து சமாதானம் பிறக்கின்றபோதெல்லாம் அங்கே இயேசு உயிர்க்கின்றார்.
- பகைமை மடிந்து அன்பும், அமைதியும் தளிர்க்கின்றபோதெல்லாம் அங்கே இயேசு உயிர்க்கின்றார்.
- அழுத ஏழையின் கவலை தீர்ந்து கண்ணீர் உலரும் போதெல்லாம் அங்கே இயேசு உயிர்க்கின்றார்.
- துன்புற்ற மக்கள் ஒன்றுதிரண்டு நம்பிக்கையோடு உரிமைக்குரல் உயர்த்தும்போதெல்லாம் வெற்றி வீரராய் அங்கே இயேசு உயிர்க்கின்றார்.

ஆகவே உயிர்த்த இயேசுவை மீண்டும் நம் பாவங்களால் இறக்கச் செய்யாமல் பார்த்துக் கொள்வோமா?



## இயேசு உயிர்த்து விட்டார்,

### நமது வாழ்வுக்கும் உறுதி தந்துவிட்டார்.

01. பொய்யைவிட உண்மை மேலானது என்பதை இயேசுவின் உயிர்ப்பு எண்பிக்கிறது.
02. தீமையை விட நன்மை உறுதியானது என்பதை இயேசுவின் உயிர்ப்பு எடுத்தியம்புகிறது.
03. பகைமையை விட அன்பு, மன்னிப்பு உயர்ந்தது என்பதை இயேசுவின் உயிர்ப்பு உணர்த்துகின்றது.
04. சாவை விட வாழ்வு சக்தியானது என்பதை இயேசுவின் உயிர்ப்பு உறுதி செய்கின்றது.

இயேசுவின் உயிர்ப்பு நமக்கு அனுபவமாகட்டும்.



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 62

# மைத்திரி மாமாவுக்கு வரைந்த மடலில் வடமாகாண மாமாக்களும் அடக்கம் !

### ‘இருக்கும் இடத்தில் இருந்துகொண்டால்...’

கிரேக்க மெய்யியலாளரான டயோஜினியஸ் மிகவும் ஏழையானவர். எனினும் அரசனின் ஆதரவையும் சலுகைகளையும் நாடாதவர். இதனால், பாணையும் பருப்பையும் உணவாக உண்டு வந்தார். அதேவேளை, அரிஸ்டிப்பஸ் என்ற மெய்யியலாளர் அரசனுக்குப் புகழ்பாடி அவனது தயவை நாடி அறுசுவை உணவை உண்டு மகிழ்ந்தார். ஒருநாள் டயோஜினியஸ், அரிஸ்டிப்பஸ்சை விருந்துக்கு அழைத்திருந்தார். ஏழையான டயோஜினியஸ் பரிமாறிய பாணையும் பருப்பையும் பார்த்து, “அரசனை நீ அனுசரித்துப்போகக் கற்றுக்கொள்! இல்லையென்றால், இப்படித்தான், பாணையும் பருப்பையும்தான் தின்று வாழவேண்டிவரும்!” என்றான்.

அரிஸ்டிப்பஸின் கருத்தால் டயோஜினியஸ் கவலைப்பட்டார். சில நாள்கள் கழித்து அரிஸ்டிப்பஸ் வீட்டுக்கு டயோஜினியஸ் சென்றிருந்தார். அரசன் மரியாதை இல்லாமல் தன்னை நடத்திவிட்டதாக மனவேதனையில் இருந்தார் அரிஸ்டிப்பஸ். அப்போது டயோஜினியஸ் அரிஸ்டிப்பஸ்சைப் பார்த்து, “நண்பா, பாணையும் பருப்பையும் தின்னக் கற்றுக்கொள்! இல்லையென்றால், இப்படித்தான், அரசனிடம் மானம்கெட்டு வயிறு வளர்க்க வேண்டிவரும்!” என்றார் அமைதியாக.

மேற்சொன்ன சம்பவத்தில் இருந்து கற்றுக்கொள்ள நிறையப் பாடங்கள் உண்டு. இன்றைய சூழலில் அரிஸ்டிப்பஸ் போன்று அரச சலுகைகளைப் பெற்று அதாவது பெரிய மாமாக்களின் சலுகைகளை சிறிய மாமாக்கள் பெற ஆசைப்பட்டால், வாழ்க்கை நடத்த முயன்றால் மானம்கெட்டு வாழவேண்டிய நிலைதான் வரும்! டயோஜினியஸ் போன்று நமது கடமைகளைச் செய்து தயவுகளை நாடாது வாழ்ந்தால் தங்கள் மரியாதையை காத்துக்கொண்டு சுய மரியாதையோடு வாழ முடியும்.

### மைத்திரி மாமாவுக்கு!

மாண்புமிகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வடக்கிலிருந்து தன் தந்தையின் வருகைக்காக ஏங்கித் தவிக்கும் ஒரு சிறுமியின் கவிதை அல்லது கவிதை நயத்தைக் கொண்ட கடிதம் ஒன்றினை என்னுடைய மின்னஞ்சலுக்கு யாரோ ஒரு நல்ல மனிதர் சில நாள்களுக்குமுன் அனுப்பி வைத்திருந்தார். அக்கவிதை அல்லது கடிதம், பலரையும் அதிர வைத்திருக்கிறது, ...மேலும் அதிர வைக்கும் என்பதில் இம்மியளவும் சந்தேகமில்லை. அதேவேளை, அச்சிறுமி, இன்றைய நம் நாட்டுத் தலைவர்களுக்கு, குறிப்பாக வடகிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு சொல்லவினையும் செய்தியில் பல பொருள் இருப்பதாகவே தெரிகிறது. அந்தச் சிறுமியின் ஏக்கம் வருமாறு:

“ஜனாதிபதி அங்கிள்! நீங்கள் ரொம்ப நல்லவர் என்று சுமந்திரன் மாமா கூறுகின்றார். நீங்கள் ரொம்ப எளிமையானவர் என்று சம்பந்தர் தாத்தா கூறுகின்றார். உங்களைக் கொல்ல வந்தவரையே நீங்கள் மன்னித்து விடுதலை செய்ததாக பத்திரிகை மாமாக்கள் கூறுகின்றனர்.

அதுமட்டுமன்றி நீங்கள் உங்கள் வீட்டுச் சாப்பாட்டை உங்கள் கையாலே சாப்பிடுகின்றீர்களாம். உங்கள் கைகால்களை உங்கள் கையால் கழுவுவதைக்கூட பெருமையாகச் சொல்லுவார்கள்போல் இருக்கு.

இந்தளவு நல்லவரான, எளிமையானவரான, அன்பு உள்ளம் கொண்ட நீங்கள் ஏன் அப்பாவை மட்டும் எனக்குக் காட்ட மறுக்கின்றீர்கள்? நான் பிறந்தது முதல் என் அப்பாவின் முகத்தைப் பார்க்கவில்லை. நான் அம்மாவின் வயிற்றில் இருந்தபோது அப்பாவை ராணுவம் பிடித்துச் சென்றதாக அம்மா கூறுகின்றா. சம்பந்தர் தாத்தாவின் மகள் அவருடன் கூட இருந்து ஒவ்வொரு நாளும் தன் தந்தையைப் பார்க்கிறார். சுமந்திரன் மாமாவின் பிள்ளைகள் அவருடன் ஒன்றாகக் கூடத் திரிந்து மகிழ்கிறார்கள். மாவை சேனாதிராசா மாமா தன் பிள்ளைகளை லண்டனில் சந்தோசமாக வைத்திருக்கின்றார். சரவணபவன் மாமாவின் மகள் பிறந்த நாளுக்கு நீங்களே வந்து கேக் ஊட்டுகின்றீர்கள். சிறிதரன் மாமா தன் பிள்ளைகளை யாழ்ப்பாணத்தில் வைத்துப் படிப்பிக்கின்றார்.

நானும் அவர்களது பிள்ளைகள்போல் என் அப்பாவுடன் சேர்ந்து இருக்க விரும்புகின்றேன். நானும் என் அப்பாவின் கை பிடித்து பாடசாலை செல்ல விரும்புகின்றேன். நானும் அப்பாவின் முதுகில் ஏறி உப்பு மூட்டை விளையாட்டு விளையாட விரும்புகின்றேன். என் விருப்பத்தை நிறைவேற்றுவீர்களா மாமா?






நான் என்ன தவறு செய்தேன். எனக்கு மட்டும் ஏன் இந்தத் தண்டனை? தமிழ் இனத்தில் பிறந்தது என் குற்றமா?”

### அடிப்படைப் பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகள் அவசியமானது

மேற்சொன்ன சிறுமியின் ஏக்கப் பெருமூச்சுக்கு மைத்திரி மாமா மட்டுமல்ல, சம்மந்தன் தாத்தா தொடக்கம் சாந்தி மாமி வரை பதில் சொல்லியே ஆகவேண்டும். ஏனெனில் மைத்திரி மாமா என்றால் என்ன, வடகிழக்கு மாமாக்கள் என்றால் என்ன, இவர்கள் எல்லாரும் தங்கள் வாக்குகளைப் பெறுவதற்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களை காலக்கிரமத்தில் கண்டுபிடித்துத் தருவது, இராணுவ வசமுள்ள பொது மக்களுக்குரிய வாழ்விடங்களைப் பெற்றுக்கொடுக்க ஆவன செய்வது, அரசியல் கைதிகளை விடுவிப்பது போன்ற பல வாக்குறுதிகளை அளித்தே வாக்குகளைத் திரட்டிக்கொண்டார்கள். தேர்தல் காலங்களில் இவர்கள் மேடைகளில் பேசியதைக் கேட்டால் தாங்கள்தான் பேசியிருக்கிறார்கள் என்று இவர்களே இப்போது நம்ப மாட்டார்கள். அவ்வளவிற்கு ஆக்குரோசமான பேச்சுக்களாக இருந்ததோடு, பல வாக்குறுதிகளும் வழங்கப்பட்டுள்ளன!

இன்று, மேற்கூறப்பட்ட மிகவும் நாள்பட்ட அடிப்படையான பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தரவேண்டி பாதிக்கப்பட்டவர்கள் கவனயீர்ப்புப் போராட்டங்களை பகலிரவு பாராது வாரங்களைக் கடந்து மாதக்கணக்கில் முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் அவ்வப்போது நேரத்திற்கு ஏற்றாற்போல் அறிக்கைகளை விடுவதோடும், பேட்டிகளை வழங்குவதோடும், பேச்சுக்களை நடத்துவதோடும் தங்களது வேலை முடிந்து விடுவதுபோல நமது மாமாக்கள் இப்போது நடந்துகொள்கிறார்கள். மேலும், இவர்களின் நடவடிக்கைகளைப் பார்க்கிறபோது தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பகிர்ந்து ஆங்காங்கே கொடுப்பதோடு, அழைக்கப்படும் விழாக்களிலும் பொது நிகழ்வுகளிலும் பங்கெடுப்பதோடு தங்கள் மக்கள் பணி நிறைவடைகிறது என எண்ணிக் கொள்கிறார்கள்போல இருக்கிறது!

மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற அங்கத்தவர்களாக இருந்தாலென்ன, மாகாணசபை, பிரதேசசபை உறுப்பினர்களாக இருந்தாலென்ன, இவர்கள் அனைவரும் மக்களின் நியாயமான ஏக்கங்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் பதில் நிறுத்தவேண்டியவர்கள் என்பதை இவர்கள் இலேசாக மறந்துபோக முடியாது. எனவேதான், விழுப்புண் அடைந்திருக்கும் காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவ ஆக்கிரமிப்புக்குள் உள்ள மக்களின் வாழ்விடங்கள் போன்ற மிகவும் அவசரமான பிரச்சினைகளுக்காவது ஆக்கபூர்வமான செயற்திட்டங்கள் வகுத்து அவற்றுக்குத் தீர்வு காண்பது மிக அவசரமானது.

இவ்விடத்தில் நம்மூர் பெரிய கடைக்காரர் ஒருவருக்கு நடந்த சம்பவம் ஒன்றினை நம் மக்கள் பிரதிநிதிகள் ஞாபத்தில் வைத்திருப்பது நல்லது. காரணம் சில ‘உலக நியதி’கள் அனைவருக்கும் ‘நடந்தே தீரும்!’, ‘வந்தே ஆகும்!’ என்பதால்தான்! இதற்கு விதிவிலக்காக யாரும் இருக்கமுடியாது என்பதை மக்களின் பிரதிநிதிகள் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

### உலக நியதி !

நம் கிராமம் ஒன்றில் ராமசாமி என்ற விவசாயி வாழ்ந்து வந்தான். அவன் வீட்டுத் தோட்டத்தில் கொஞ்ச முருங்கை மரங்களை நட்டுவைத்தான். வாரம் ஒரு முறை முருங்கைக் காய்களைப் பறித்து, எடுத்துக்கொண்டு ஐந்து கிலோமீட்டருக்கு அப்பால் இருக்கும் ஒரு பெரிய கடைக்காரனிடம் விற்றுவிட்டு வருவது வழக்கம். முருங்கைக் காயைக் கொடுத்துவிட்டு பணத்திற்குப் பதிலாக தன் குடும்பத்திற்குத் தேவையான அரிசி, மா, சீனி, சவுக்காரம் போன்ற பொருள்களை வாங்கிக்கொண்டு வருவான். ராமசாமி கொண்டுவரும் முருங்கைக் காய்களின் சுவை அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால் ராமசாமி கொண்டுவரும் முருங்கைக் காய்கள் உடனடியாகவே விற்பனையாகிவிடுவதால் ராமசாமி எவ்வளவு கொண்டுவந்தாலும் கடைக்காரன் எடுத்துக்கொள்வான்.

இதனைப் பயன்படுத்தி ராமசாமி கொண்டுவரும் முருங்கைக் காய்களோடு மற்ற முருங்கைக் காய்களைக் கலந்து கடைக்காரனும் நல்ல லாபம் ஈட்டிவந்தான். பல ஆண்டுகளாக ராமசாமி முருங்கைக்காய் கொண்டு வருவதால் கடைக்காரன் அதனை நிறுத்துப் பார்ப்பதில்லை. ராமசாமி சொல்கிற நிறையை அப்படியே நம்பி அதற்கு ஈடான தன் பொருட்களைக் கொடுத்துவிடுவான் அக்கடைக்காரன். காரணம், ராமசாமியின் நேர்மையையும் நாணயத்தையும் கடைக்காரன் மட்டுமல்ல எல்லாரும் அறிந்திருந்தனர்.

ஒரு நாள் ராமசாமி பத்து கிலோ முருங்கைக் காயை கொடுத்துவிட்டு அதற்கான பொருட்களை வாங்கிக்கொண்டு வீடு சென்றுவிட்டான். சிறிது நேரத்தில், பத்து கிலோ முருங்கைக்காய் மொத்தமாய் வேண்டும் என்று ஒருவன் வந்தான். அவனுக்காக, கடைக்காரன், ராமசாமி பத்துக் கிலோ எனக் கொண்டுவந்த முருங்கைக் காய்களை நிறுக்க அதில் ஒன்பது கிலோ மட்டுமே இருந்தது! அதிர்ந்து போனான் கடைக்காரன். “ராமசாமிமீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தேன், இவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகத்தை செய்துவிட்டானே! இத்தனை ஆண்டுகளாக இப்படி முட்டாள்தனமாக நிறை குறைவான முருங்கைக் காயை வாங்கி ஏமாந்து இருக்கிறேனே!” என மனம் நொந்துகொண்டான் கடைக்காரன். “அடுத்த முறை ராமசாமி வரும்போது ஒரு பாடம் படிப்பிக்கிறேன்!” எனக் கடுங் கோபத்தில் இருந்தார் அக்கடைக்காரன்!

சில நாள்கள் கழித்து ராமசாமி மிகவும் சந்தோசமாக வந்தான்! நல்ல விளைச்சல் என்பதால் நிறைய முருங்கைக்காய் கொண்டு வந்திருந்தான். ‘கையும் மெய்யுமாகப் பிடிக்கவேண்டும்!’ என்ற எண்ணத்தில், “எத்தனை கிலோ?” என்று கடைக்காரன் கேட்க, “பத்து கிலோ” என்றான் ராமசாமி. உடனே கடைக்காரர், ராமசாமி முன்னாலேயே நிறையைப் பார்க்க ஒன்பது கிலோதான் இருந்தது! வந்த கோபத்தில் கடைக்காரர் ராமசாமியைத் தாறுமாறாய்த் தாக்கினான்! “இத்தனை வருசமா இப்படித்தான் ஏமாத்திக்கிட்டு இருக்கிறியா? கிராமத்துக்காரங்க ஏமாத்த மாட்டாங்கண்ணு நம்பிக்கையிலதான், நிறுக்காம அப்படியே வாங்கினன்! இப்பிடி ஏமாத்திப் போட்டியே! சீச்சீ... நீ எல்லா ஒரு மனிசனா!” என தாறுமாறாகத் திட்டித்தொலைத்தான் கடைக்காரன். தலைகுனிந்து, நிலைகுலைந்து நின்றான் ராமசாமி.

### பேராசை பெரும் நட்டம்

“ஐயா... என்ன மன்னிச்சிடுங்க, நான் ரொம்ப ஏழை! தராசு வாங்குற அளவுக்கு என்கிட்ட பணம் இல்ல... ஒவ்வொரு முறையும் நீங்க கொடுக்கிற ஒரு கிலோ பருப்பை ஒரு தட்டுலயும், இன்னொரு தட்டுல முருங்கைக் காயையும் வச்சுதான் எடைபோட்டு கொண்டு வருவேன். இதைத் தவிர வேற எதுவும் தெரியாதைய்யா!” என்று கண்ணீர்விட்டு அழுதான் ராமசாமி. கடைக்காரருக்கு செருப்பால் அடித்ததுபோல் இருந்தது! தான் செய்த துரோகம் தனக்கே வந்ததை உணர்ந்தான்! இத்தனை ஆண்டுகளாக ராமசாமியை ஏமாற்ற நினைத்த கடைக்காரன் அவனுக்கே தெரியாமல் ஏமாந்துகொண்டுதான் இருந்திருக்கிறார் என்பது தெளிவானது! இதுதான் உலக நியதி என்பதை உணர்ந்தவனாக பேச்சற்றவனாக வாயடைத்து நின்றான் அப்பெரிய கடைக்காரன்.

### தூய்மை அரசியல்!

நேர்மையும் செயற்திறனும் கொண்ட தூய்மையான அரசியலையே இந்த நாட்டின் இளைஞர் தலைமுறை உள்ளிட்ட அனைத்து மக்களும் எதிர்பார்க்கின்றனர் என்றும், ஊழலை மோசடிகளை மேற்கொண்டு அரச வளங்களையும் பொதுமக்களின் சொத்துக்களையும் முறையற்ற வகையில் பயன்படுத்தி, தமது சட்டைப்பைகளை நிரப்பிக்கொள்ள எந்தவொரு அரசியல்வாதிக்கும் இடமில்லை என்றும், அவ்வாறு செயற்பட்டால் அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாய் இருப்பினும் அவர்களுக்கெதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்கு நான் ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பனிரெண்டாயிரம் இளைஞர் யுவதியர் பங்குகொண்ட சுதந்திரக் கட்சியின் இளையோர் ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் 02.04.2017அன்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 07.04.2017 அன்று பாராளுமன்றத்தில் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் அநுதாப பிரேரணையில் கலந்து உரையாற்றும்போது, “...தற்போது அரசியலுக்கு வருகிறவர்கள் பணம் சம்பாதிப்பவர்களாகவும் அரச சொத்துக்களைத் துஸ்பிரயோகம் செய்து ஊழல் செய்யக்கூடியவர்களாகவும் உள்ளனர்...” எனக் குறிப்பிட்டுள்ளார் ஜனாதிபதி. மேற்கூறப்பட்ட கூற்றுக்களை வைத்து நோக்கும்போது விளங்கும் விடயம் ஒன்று என்னவென்றால் தூய்மையான அரசியல் நடத்தவேண்டும் என்று சொல்பவர்கள்தான் சாக்கடை அரசியலையும் நடத்துகிறார்கள் அல்லது நடத்தத் துணைபோகிறார்கள் என்பதுதான்! காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் விடுதலை, மக்களின் காணி விடுவிப்பு விடயங்களில்; நல்லாட்சியும் இல்ல, நாசமாப்போன ஆட்சியும் இல்ல என்ற கணக்கில்தான் இப்போது ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று சொல்வதைத் தவிர வேறென்ன கூறமுடியும்!

### உரிய தீர்வு கிடைக்க உழைக்க வேண்டும்

வடக்குப் போராட்டங்களுக்கு உரிய தீர்வைத் தரவேண்டும் எனக் கோரி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் கடந்த மாதத் தொடக்கத்தில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிதல், இராணுவ வசமுள்ள காணிகளை விடுவித்தல், வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவழங்க நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்களைப்பற்றி எழுதியதோடு சாத்தியப்பாடான தீர்வுகளையும் முன்மொழிந்துள்ளார். ஆகவே, அவற்றை உடன் ஆராய்ந்து தீர்வுகளை பெற்றுக்கொடுப்பது அரச தலைவரின் தலையாய கடன் என்பதை அவர் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதையும் அக்கடிதத்தில் உணர்த்தியுள்ளார் வடமாகாண முதலமைச்சர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# ஒவ்வொரு மருத்துவமனையும் குடும்பச் சூழலைக் கொண்டிருக்க வேண்டும்

## திருத்தந்தை பிரான்சிஸ்

உரோம் பம்பினோ ஜேசு சிறார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சிறார் குழு ஒன்று, ஏப்ரல் 11ஆம் திகதி மாலையில் வத்திக்கானில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்து உரையாடி, புகைப்படங்களையும் எடுத்துக்கொண்டது.

'குழந்தை இயேசு' என்று பெயர் கொண்ட இம்மருத்துவமனையின் தலைவர் மரியெல்லா எனோக், இத்தாலிய அரசின் ராய் தொலைக்காட்சியின் இயக்குனர் அந்தோனியோ காம்போ தல்ஓர்த்தே உட்பட, இம்மருத்துவமனையின் சில மருத்துவர்களும் செவிலியரும், நோயுற்ற சிறாரின் பெற்றோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

5 முதல் 18 வயது வரையுள்ள நோயுற்ற சிறார் அளித்த நன்றிக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட திருத்தந்தை, பம்பினோ ஜேசு மருத்துவமனை மனிதாபிமானத்திற்கு ஒரு சான்றாக உள்ளது என்று சொல்லி, அம்மருத்துவமனைப் பணியாளருக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்தார். மருத்துவமனை, வரவேற்கும் குடும்பச் சூழலைக் கொண்டிருக்க வேண்டுமெனவும், ஒவ்வொரு நோயாளிக்கும் ஒரு தனிப்பட்ட கதை உள்ளது எனவும், நோயைவிட இவை முக்கியம் எனவும் திருத்தந்தை கூறினார்.




மருத்துவமனைக்கு வருகின்ற ஒவ்வொரு நோயாளியின் தேவையின்மீது கவனம் செலுத்தும் இடமாக முதலில் மருத்துவமனை அமைய வேண்டுமென்றும், மருத்துவமனைக்குச் செல்வது நோயாளிக்கு அச்சத்தையூட்டும். ஆயினும் மருத்துவர்கள் மற்றும் செவிலியரின் அன்பான கவனிப்பு, அந்த அச்சத்தை அகற்றும் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

# ''நான் இனி,இவ்வுலகில் ஒரு சாதாரண திருப்பயணி, திருச்சபைக்காகச் செபிப்பது என் முக்கிய பணி'

## 90 வயதை எட்டியுள்ள முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற்

''வாழ்வின் இறுதி நிலையில் இருக்கும் நான், இனி இவ்வுலகில் ஒரு சாதாரண திருப்பயணி. திரு அவைக்காக செபிப்பது என் முக்கிய பணி'' என்று முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் நான்கு ஆண்டுகளுக்கு முன் மாசி 28ஆம் திகதி கூறினார். 2013ம் ஆண்டு மாசி 11ஆம் திகதி திருஅவையின் தலைமைப் பொறுப்பைத் துறப்பதாகக் கூறிய திருத்தந்தை, வத்திக்கான் பாப்பிறை இல்லத்திலிருந்து மாசி 28 மாலை கிளம்பி, திருத்தந்தையரின் கோடை விடுமுறை இல்லமான காஸ்தல் கந்தோல்போவின் மேல்மாடத்தில் தோன்றி, அங்கு கூடியிருந்த மக்களை திருத்தந்தை என்ற முறையில் இறுதி முறையாகச் சந்தித்தவேளையில் இவ்வாறு கூறினார்.

முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள், தன் தலைமைப்பொறுப்பைத் துறந்த 4ஆம் ஆண்டு நிறைவன்று, அவருக்காக, உலகின் பல நாடுகளிலும், சிறப்பான செபங்களை எழுப்பிவரும் பல்வேறு குழுக்கள், இச்செவ்வாயன்று தங்கள் செபங்களை வலைத்தளங்கள் வழியே பகிர்ந்துகொண்டனர் என்று Zenit கத்தோலிக்கச் செய்தி கூறுகிறது. மேலும், இவ்வாண்டு சித்திரை 16ம் திகதி, முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் தன் 90வது வயதை நிறைவுசெய்திருக்கும் வேளையில், அவருக்காக சிறப்பான செபங்களையும், நன்றியையும் கத்தோலிக்க வலைத்தளங்கள் வெளியிட்டன.



## பத்திமா நகரில் திருத்தந்தையின் பயணத்திட்டங்கள்

போர்த்துக்கல்லின் பாத்திமாவில் அன்னை மரியா காட்சியளித்ததன் 100ஆம் ஆண்டு சிறப்புக் கொண்டாட்டங்களையொட்டி, மே மாதத்தில் அத்திருத்தலத்திற்கு திருத்தந்தை திருப்பயணம் மேற்கொள்வது குறித்த முழு விவரங்களையும் திருப்பீடம் வெளியிட்டது.

மே மாதம் 12ஆம் திகதி வெள்ளியன்று பிற்பகல் 2.00 மணிக்கு உரோம் நகரிலிருந்து புறப்படும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மாலை 4 மணி 20 நிமிடங்களுக்கு Monte Real விமானத் தளத்தை அடைந்து, அங்கேயே போர்த்துக்கல் அரசுத் தலைவரை சந்தித்து உரையாடுவார்.

பின் அங்குள்ள சிறிய கோவிலைத் தரிசித்தபின், ஹெலிகாப்டர் வழியாக பாத்திமா நகர் சென்று, அன்னை மரியா காட்சி கொடுத்த திருத்தலத்தைத் தரிசித்து செபித்து பின், அனைவருக்கும் ஆசீர் அளிப்பார். அன்றிரவு செபமாலை வழிபாட்டிலும் கலந்துகொள்வார்.

13ஆம் திகதி சனிக்கிழமை அன்று போர்த்துக்கல் பிரதமரைச் சந்தித்து உரையாடியபின், ஜெபமாலையின் நமதன்னை பசிலிக்காவில் திருப்பலி நிறைவேற்றி நோயுற்றோரை ஆசீர்வதிப்பார். போத்துக்கல் நாட்டு ஆயர்களுடன் மதிய உணவருந்தியபின், உள்ளூர் நேரம் பிற்பகல் 3 மணிக்கு உரோம் நோக்கி திருத்தந்தை தன் பயணத்தை மேற்கொள்வார்.

## 100 வீதம் தலித் கிறிஸ்தவர்களுடன் இணைந்துள்ள இந்திய அவை

இந்தியக் கத்தோலிக்க திருஅவை நூறு விழுக்காடு, தலித் கிறிஸ்தவர்களுடன் இருப்பதாக, மும்பையில் இடம்பெற்ற தேசிய தலித் கிறிஸ்தவ அவைக் கூட்டத்தில் உரையாற்றிய கர்தினால் ஆஸ்வால்டு கிரேசியஸ் குறிப்பிட்டார்.

பல்வேறு கிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்த 45 தலைவர்களின் முன்னிலையில் உரையாற்றிய மும்பை கர்தினால் கிரேசியஸ் அவர்கள், இந்தியக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 90 இலட்சமாக இருக்கும் நிலையில், தலித் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 20 இலட்சம் என்பதை நினைவில் கொண்டு, அவர்களின் மத உரிமைகள் மதிக்கப்படுவதுடன், அவர்களின் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்குரிய அங்கீகாரமும் வழங்கப்பட வேண்டும் என்றார்.

ஏழ்மைக்கு எதிரான எந்த ஒரு திட்டமும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவும், அதுவும், தலித் மக்களிடமிருந்து துவங்குவதாகவும் இருக்கவேண்டும் என அழைப்பு விடுத்த கர்தினால் கிரேசியஸ் அவர்கள், கிறிஸ்தவ தலித் மக்களிடையே இறையழைத்தல்களை ஊக்குவிப்பதன் வழியாக, திருஅவைக்குள்ளும் சமூகத்திலும் மாற்றங்களைக் கொணர முடியும் என்றார்.

மாற்றங்களைக் கொணர விரும்புவோர், தங்கள் நடவடிக்கைகள் வழியாக இதனை ஆற்ற முடியும். அதாவது, தங்களுக்கு அடுத்திருப்பவர்களுக்கு உணவளித்தல், அவர்களைச் சந்தித்தல், அவர்களுக்குக் கல்வி வழங்குதல் போன்றவை வழியாக, சமூக மாற்றத்திற்கு உதவமுடியும் என, மேலும் உரைத்தார் கர்தினால் கிரேசியஸ். இந்தியாவில் இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவத்திற்கோ, இஸ்லாம் மதத்திற்கோ மாறும் தாழ்த்தப்பட்ட சாதியினர், அந்த சமூகத்திற்குரிய சலுகைகளை இழக்கவேண்டிய கட்டாயத்திற்கு சட்டத்தின் வழியாகவே தள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

## மனிதாபிமானம் நிறைந்ததொரு உலகைப் படைக்க இளையோர் முன்வருக


2019ஆம் ஆண்டு பனாமா நாட்டில் இடம்பெறவுள்ள உலக இளையோர் தினத்தை நோக்கிய பாதையில் இடம்பெறும் இவ்வாண்டு இளையோர்தினக் கொண்டாட்டங்கள், இளையோர் குறித்த உலக ஆயர் தயாரிப்போடு ஒத்திணங்கிச் செல்வதாக இருக்கவேண்டும் என அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மறை மாவட்ட அளவில் இவ்வாண்டு குருத்து ஞாயிறன்று சிறப்பிக்கப்படும் இளையோர் தினத்திற்கென, ஒலி-ஒளி செய்தி அனுப்பியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ்,'வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார்' என்ற அன்னை மரியாவின் வார்த்தைகள், இந்த இளையோர் தினக் கொண்டாட்டத்திற்கு தலைப்பாக எடுக்கப்பட்டுள்ளதன் முக்கியத்துவத்தை எடுத்தியம்பியுள்ளார்.

## அருளாளர் ஒஸ்கார் ரொமேரோ பெயரால் இடம்பெற்ற புதுமை

அருளாளர் ஒஸ்கார் ரொமேரோ அவர்களின் பரிந்துரையால் நிகழ்ந்துள்ள ஒரு புதுமையைக் குறித்த தகவல் தொகுப்பு, வத்திக்கானை அடைந்துள்ளது என்று செனிற் (Zenit) கத்தோலிக்க இதழ் கூறியுள்ளது.


பேராயர் ஆஸ்கர் ரொமேரோ அவர்களின் பரிந்துரையால், கருவுற்றிருந்த ஒரு பெண்ணுக்கு, கருப்பையில் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்ந்து, தாயும் சேயும் புதுமையான வழியில் உயிர் பிழைத்துள்ளனர் என்று கூறப்படுகிறது.



# புனிதர்களின் பாதையில்

## புனித பீற்றர் ஷானல்

*மறைசாட்சி (கி.பி. 1803 - 1841)*



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

பிரான்ஸ் நாட்டில் கெயே நகரில் 1803 ஆம் ஆண்டு புனித பீற்றர் ஷானல் பிறந்தார். புது நன்மை வழங்கிய நாளன்றே மறைபரப்புப் பணியில் ஈடுபட மாறாத ஆவல் கொண்டார். ஆனால் நாளடைவில் படிப்பதில் ஏற்பட்ட இடையூறுகளினால் அவ்வெண்ணத்தை உதறித்தள்ள முயன்றார். ஆனால் மரியன்னையிடம் மன்றாடினார். எண்ணத்தில் மீண்டும் பற்றுறுதி கொண்டார். 18-ஆம் வயதில் குருமடத்தில் சேர்ந்தார். குருப்பட்டம் பெற்று 4 ஆண்டுகள் கழிந்தபின் ''மேரிஸ்ட் குருக்கள்'' துறவற சபையில் சேர்ந்தார். 33ஆம் வயதில் தம் சபைத் தோழர் ஒருவருடன் ஓசியானியாத் தீவுக்கு மறைபரப்புப் பணிக்காகப் புறப்பட்டார். பசிபிக் பெருங்கடலையொட்டிய புத்தானாத் தீவை அடைந்தார். அங்கே கடுமையான வெயிலின் கொடுமைக்கு உள்ளானார்; உணவின்றி வருந்தினார். மறைபரப்புப் பணிக்குப்பின் வீடு திரும்புபோது முற்றிலும் வலிமையிழந்தவராகக் காணப்பட்டார். ஆனால் எப்போதும் மகிழ்ச்சியாகவும், புன்முறுவலுடனும் இருந்தார்.

''இவரை அணுகிவந்த அனைவருக்கும், இவரைக் கடுமையாகத் துன்புறுத்தியவர்களுக்கும்கூட நன்மைசெய்யச் சலிக்க மாட்டார்'' என இவர்தம் தோழர் இவரைப்பற்றி புகழ்ந்துரைக்கிறார். இதனால் இவரையறிந்த புத்தானா தீவினர் அனைவரும் ''உயர்ந்த உள்ளம்'' என்றே இவரை அழைத்தனர். இவர் செய்த முயற்சிகளுக்கு ஈடான ஞான அறுவடை சிறிதும் கிட்டவில்லை. ஆனால் தம் தலைவர் கிறிஸ்துவை முன்வைத்து முயற்சிகளை மேலும் பெருக்கினார். ''விதைப்பவன் ஒருவன், அறுப்பவன் மற்றொருவன்'' என்று அடிக்கடி கூறுவார்.

மரியன்னை பத்தியின் மாசற்ற வடிவம் இவர். மணிக்கணக்காக அன்னையின் மலரடிகளின் முன்னே மண்டியிட்டிருப்பார். தீவின் தலைவனுடைய மகன் அருள் தந்தை பீற்றரிடம் நெருங்கிய தோழமை கொண்டிருந்ததன் பயனாகத் திருமுழுக்குப்பெற விரும்பினான். எனவே தீவின் தலைவன் அடியாட்களை அனுப்பித் தடிகளால் தந்தை பீற்றரைக் கடுமையாக அடித்துக்கொன்றான். போதகரைக் கொல்லும்போது, கிறிஸ்துவ வேதமும் கொல்லப்படும் எனக் கருதினான். இவர் இறந்த இரண்டே ஆண்டுகளுக்குப்பின் புத்தானா தீவு முழுவதும் கிறிஸ்துவ மறையைத் தழுவியது. இப்போது, ஓசியானியாத் தீவுகள் அனைத்திலும் கிறிஸ்தவ மறை செழித்து வளர்ந்து வருகிறது. இப்புனிதரை இப்பகுதியினர் தங்களின் ''முதல் மறை சாட்சி'' என்று கூறி வாழ்த்துகின்றனர்.

# கலை இலக்கியச் சாளரம்

## தி. வினோதினி கவிதைகள்

கவிதைக் களம்

### பலிக்கடா

துருப்பிடித்த துப்பாக்கிகள்
தூசு தட்டப்பட்டன
மேற்குலகில்.

மேகக்கூட்டங்கள்
மின்னற் கீற்றுகளால்
கிழித்தெறியப்பட்டன
கீழைத்தேயத்தில்.

பூகோள அரசியல்
பூகம்பத்தின் புகைகள்
கசிந்து பரவியதால்
கண்ணீரில் கரைகிறது
கடைசி உலகம்.

கண் கட்டி விளையாட்டுகளில்
கலைக்கப்பட்ட மனிதர்கள்
சிதறிய சாம்பல்களாய்
தெருக்களில் அங்கும் இங்கும்

ஓயாத பூகம்பம் தீயாக மாறி
தேசமெல்லாம் எரிகையிலே
தெருவோர மக்களை
தத்தெடுக்க யார் உண்டு?
திடுக்கிட்ட மேற்குலகம்
தேடுகிறது வேறு வழி



### சூனியப் பெருவெளி

உயிரின் சங்கமம்
உணர்வின் சங்கமம்
அத்தனையும் அறியவைத்தாய்
அருகிருந்து உணர்ந்தபோது

உயிர்வலி உணர்வும்
உடலின் அடக்கமும்
இயல்பாய்ப் பரிசளித்தாய்
வனாந்தரத் தனிமையிலே

அமைதி தேடி அகல்கையிலே
அடங்கிக்கொண்டேன்
அலை கழன்ற ஆழியாய்

பின்னிரவில் முன்னிறுத்தும்
நட்சத்திர நீட்சியாய்
ஆழ் மன ஓடையிலே
ஆர்பரிக்கும் நிதர்சனங்கள்

நிதர்சனத்தின் விம்பங்களை
நிரந்தரமாய் நிலைக்கவிட்டு
நீ மட்டும் சென்றுவிட்டாய்
நீண்ட ரயிற் பாதையிலே

வருடுகின்ற நினைவோடும்
வளையாத வலியோடும்
நிசப்த நடையுடன்
நீண்ட வழிப் பயணமதில்

கண்களில் கண்ணீரில்லை
முகத்திலும் வலியில்லை
உள்ளம் மட்டும் அழுகிறது
ஊமையின் உணர்வுகளாய்
ஒரு சூனியப் பெருவெளியில்

### இன்றுவரை தேடுகிறோம்

கட்டிய கூட்டை
குரங்குகள் கலைத்தெறிய
ஊரிழந்து உறவிழந்து
உயிர்காக்க வழியிழந்து
கூடிழந்த குருவிகளாய்
கூச்சலிட்டுக்
கலைந்து போனோம்

கலை(ளை) இழந்து
நிலை இழந்து
நித்தமும் நிம்மதியிழந்து
நெடுந்தூரம் பறந்தலைந்து
அகதி என்ற நாமத்தோடு
முகாம்களில் முடக்கப்பட்டோம்

மூடப்பட்ட முகாம்களின்
வக்கிர வதைப்புகளில்
வலிதாங்கி விழி பிதுங்கி
மனம்சிதைந்து மகிழ்விழந்தோம்

கல்வியிழந்து கனவிழந்து
நிகழ்கால வாழ்விழந்து
நிச்சயமற்ற நிமிடங்களுடன்
நெருக்கமாய் நாமிருந்தோம்

கூடிவந்த குடும்பமிழந்து
எண்ணிக்கையில் பொலிவிழந்து
ஒருவர் பின் ஒருவராய்
களவாடப்பட்ட கலாசாரத்தில்

காணாமற்போனோரை
கண்டுகொள்ள வழியிழந்து
இன்றுவரை தேடுகிறோம்
ஊர் திரும்ப வாடுகிறோம்

### இரவுகளின் குழந்தைகள்

வேரறுந்த நம்பிக்கையைத்
தாங்கிய செடி

வேர்களைத் தேடும் மண்புழு
ஊர்க் கோடியில்
ஊளையிடும் நரிகள்

கொல்லைப்புற வேம்பிலிருந்த
ஆட்காட்டி கரைந்து
சொல்கிறது
யாரோ உலவுவதை

காத்திருந்த கண்கள்
கனத்துப் போகின்றன
தூக்கக் கலக்கத்தில்

அடுத்தநாளின் வரவை
அரவமின்றிச் சொல்கிறது
அதிகாலை விடிவெள்ளி

இரவுகளின் உலவல்
உனக்காக வைக்கப்பட்ட
ரொட்டித்துண்டை
தொட மறுக்கின்றன கைகள்
வாலைச் சுருட்டி
வரவேற்பதற்காய்
வாசலிற் காத்திருந்த
நாய்க்குட்டி விடியலைப்
பார்த்துக் குரைக்கிறது

பின்னிரவில் உரசலாம்
ஊருக்குள் சலசலப்பு
இன்றைய விடியற் செய்தியாய்

இரவுகளின் குழந்தைகளை
ஈன்ற அன்னைக்கு
ஒவ்வொரு இரவும்
மற்றுமொரு விடியலே

வினோதினி என்ற புனை பெயரில் எழுதிவரும் சர்மிலா திருநாவுக்கரசு அவர்கள் மன்னாரை வசிப்பிடமாகக் கொண்டவர். அண்மையில் "இராப்பாடிகளின் நாட்குறிப்பு" என்ற பெயரில் ஒரு கவிதை நூலை வெளியிட்டுள்ளார். மன்னார் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடாக வந்துள்ள இந்நூலில் இருந்து மேலே உள்ள கவிதைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# கொஞ்சம் சிரிங்க

**வாத்தியார்:** ஒரு நாட்டின் நல்ல குடிமகனுக்கு என்ன தேவை?
**மாணவன்:** ஊறுகாய் சார்...

...................................

**மனைவி:** காரணம் இல்லாமல் குடிக்கமாட்டேன் என்று சொன்னிங்களே இப்ப ஏன் குடிச்சீங்க?
**கணவன்:** ரொக்கெட் விடுறதுக்கு போத்தல் வேணும் என்று மகன் கேட்டான். அதான்....
**மனைவி:** ????

...................................

**மனைவி:** இன்றைக்கு எங்களுடைய கல்யாண நாள், கோழி அடிச்சு, குழம்பு வைக்கவா?
**கணவன்:** நான் செய்த தவறுக்கு கோழிக்கு ஏன் தண்டனை கொடுக்கிறாய்?
**மனைவி:** ????

...................................

**தொண்டர் 1:** நம்ம தலைவர் தன்னோட எல்லாச் சொத்தையும் கட்சிக்கே எழுதி வைச்சிட்டாரு..!
**தொண்டர் 2:** சந்தோஷமான விடயம்தானே..!
**தொண்டர் 1:** அட போப்பா... கட்சியை அவனோட மகனுக்கு எழுதி வைச்சிட்டாரு..!

...................................

**ஒருவர்:** தரகரே, நீங்க பெரிய விஷயத்தை மறச்சுட்டீங்க. இப்படிச் செய்யலாமா? **தரகர்:** ஏன்? என்ன ஆச்சு இப்போ?
**ஒருவர்:** பொண்ணு அஞ்சரை அடி உயரமுன்னு சொன்னீங்க சரி, மூணு அடி அகலம்ன்னு சொன்னீங்களா?



**கணவன்:** சாமிகிட்ட என்னமா வேண்டிகிட்ட?
**மனைவி:** அடுத்த ஜென்மத்திலும் நீங்கதான் என் புருஷனா வரணுமுனு வேண்டிக்கிட்டங்க. நீங்க என்ன வேண்டிகிட்டீங்க.
**கணவன்:** எனக்கு அடுத்த ஜென்மமே வேணாம்னு வேண்டிக்கிட்டன்.

...................................

**சேகர்:** என்னடா இவ்வளவு சோகமா இருக்கிறா?
**ராஜா:** என்னோட மனைவி ஒரு மாசம் என்கூட பேசமாட்டேன் என்று சொல்லிட்டா.
**சேகர்:** அதுக்கு சந்தோஷம்தானே படனும்.
**ராஜா:** எப்படிடா? இன்னையோட அந்த ஒரு மாசம் முடியுதே!

...................................

**மோகன்:** ரொம்பநாள் கழிச்சி உன் வீட்டுக்கு வந்திருக்கேன் வெறும் டீ மட்டும்தானா மச்சி.
**ராஜி:** பின்ன என்ன செய்யணும்.
**மோகன்:** கடிக்க ஏதாவது ....
**ராஜி:** நாய் இருக்கு. அவுத்துவிடவா...

...................................

**தகப்பன்:** என்னடா அம்மாவை எதிர்த்து பேசினியாம் .... உனக்கு என்னடா எவ்வளவு துணிச்சல்?
**மகன்:** போங்கப்பா, இதுக்கெல்லாம் நீங்க பொறாமைப்பட்டா எப்படி!

# மன்னா விளம்பரப் பலகை

"வாழ்க்கையில் கடந்தகாலம் சென்றுவிட்டது. வருங்காலம் சந்தேகம் நிறைந்தது. எனவே இருக்கும் காலத்திலேயே செயலாற்றிக்கொள்"

உன் மனம் வலிக்கும்போது சிரி, பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்கவை!

........................

நீ கீழே விழுந்துவிட்டால் உடனே எழுந்துவிடு.... இல்லை என்றால் இந்த உலகம் உன்னைப் புதைத்துவிடும்...

........................

தண்டனை கொடுப்பதற்கு தாமதம் செய். ஆனால் மன்னிப்புக் கொடுப்பதற்கு யோசனைகூட செய்யாதே.

........................

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை.

குறை சொல்பவர்களுக்கு நன்றி சொல்லுங்கள். ஏனென்றால். உங்களை நீங்களே செதுக்கிக்கொள்வதற்கு அவர்கள்தான் உளி கொடுக்கின்றனர்.

தோல்விக்கே பலம் அதிகம், வெற்றி சிரித்து மகிழ வைக்கும். தோல்வி சிந்தித்து மகிழ வைக்கும்.

........................

தன்னை அறிந்தவன் ஆசைப்படமாட்டான். உலகை அறிந்தவன் கோபப்படமாட்டான். இந்த இரண்டையும் அறிந்தவன் கஷ்ரப்படமாட்டான்.

........................

நீ வெற்றிக்காகப் போராடும்போது வீண்முயற்சி என்று சொல்வார்கள். நீ வெற்றி பெற்றபின் விடாமுயற்சி என்பார்கள்.

மன்னிப்பு என்பது தவறுக்காக மட்டும் கேட்கப்படுவது அல்ல, சமாதானத்திற்காகவும்தான்!

# மருத்துவக் குணங்கள் நிறைந்த பேரீச்சம்பழம்



- வைட்டமின் "ஏ" குறைவினால்தான் கண் பார்வை மங்கலாகும். இதைக் குணப்படுத்த பேரீச்சம் பழமே சிறந்த மருந்தாகும்.
- மாலைக் கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், பேரீச்சம் பழத்தை தேனுடன் கலந்து ஊறவைத்துச் சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் கிடைக்கும். இதனால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.
- பேரீச்சம் பழத்துடன் பாதாம் பருப்பு சேர்த்து பாலில் கலந்து கொதிக்க வைத்துச் சாப்பிட்டால் நரம்புத் தளர்ச்சி நீங்கி, ஞாபக சக்தி கூடும். கை, கால் தளர்ச்சி குணமாகும்.
- பேரீச்சம் பழத்தில் உள்ள மக்னீசியம், தமனிகளில் ஏற்படும் வீக்கத்தைக் குறைத்து, இதய நோய்கள் வரும் அபாயத்தைக் குறைப்பதாகக் கூறுகின்றன.
- பேரீச்சம் பழத்தை கர்ப்ப காலத்தில் உட்கொண்டு வந்தால், பிரசவம் முடிந்தபின் உடல் எடையை குறைக்க உதவியாக இருக்கும்.
- பேரீச்சம் பழத்தில் உள்ள பொட்டாசியம், இதயச் செயல்பாட்டை மென்மையாக்கி, இரத்த அழுத்தத்தைச் சீராக வைத்துக்கொள்ளும். எனவே பேரீச்சம் பழம் சாப்பிட்டு வந்தால், இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளலாம்.
- தினமும் பேரீச்சம் பழத்தை உட்கொண்டு வந்தால் மூளையில் செயல்பாடு மேம்படும். அதாவது ஞாபக சக்தி, ஒரு முகப்படுத்தும் தன்மை, கூர்மையான புத்தி, எதையும் எளிதில் கற்றுக்கொள்ளும் திறன் போன்றவை அதிகரிக்கும்.
- பேரீச்சம் பழத்தில் உள்ள அதிகப்படியான இரும்புச் சத்து, உடலில் இரத்த அணுக்களின் அளவை அதிகரித்து, இரத்த சோகை வரும் அபாயத்தைக் குறைக்கும். எனவே உங்கள் உடலில் இரத்தத்தின் அளவு சீராக இருக்க, தினமும் 3 பேரீச்சம் பழத்தை உட்கொண்டு வாருங்கள்.
- சளி இருமலுக்கு பேரீச்சம் பழத்தின் கொட்டைகளை நீக்கி பாலில் போட்டு காய்ச்சி பருகி வந்தால் சளி, இருமல் குணமாகும்.
- நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எலும்புகள் பலம் இழந்து காணப்படும். இவர்களுக்கு கல்சியம் இரும்பு சத்து தேவைப்படுவதால் தினமும் இரண்டு பழம் வீதம் சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்கும்.
- அதிக வேலைப்பளு, மன உளைச்சல் நீண்ட பட்டினி இருப்பவர்கள், அதிக வெப்பமுள்ள பகுதிகளில் வேலை செய்பவர்கள், நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்படுவார்கள். இவர்கள் பேரீச்சம் பழத்துடன் பாதாம் பருப்பு சேர்த்து பாலில் கலந்து கொதிக்கவைத்துச் சாப்பிட்டால் நரம்புத் தளர்ச்சி நீங்கி, ஞாபக சக்தி கூடும்.
- முதியோருக்கு உடல் ரீதியான இன்னல்களைக் குறைக்கும். புண்கள் ஆறும். மூட்டு வலி நீங்கும். பேரீச்சம் பழத்தை பசும் பாலில் வேகவைத்து அருந்தி வந்தால் இதய நோய்கள் வராது.

# சமையல் குறிப்பு

## குலாப் ஜாமூன்



### தேவையானவை:

பால் பவுடர் - 2 ½ கப்
பால் - தேவையான அளவு (கலப்பதற்கு)
நெய் - 2 மேசைக்கரண்டி
சக்கரை - 5 கப்
பேக்கிங் பவுடர் - சிறிது
மைதா மாவு - 2 மேசைக்கரண்டி
எண்ணெய் - அரை கப் (பொரிப்பதற்கு)

### செய்முறை :

முதலில், பால் பவுடருடன் மைதா மாவு, பேக்கிங் பவுடர், நெய் சேர்த்து, தேவைக்கேற்ப பால் சேர்த்து பிசைந்து கொள்ளவும்.

பிசைந்த மாவை சிறு உருண்டைகளாக உருட்டி வைக்கவும். ஒரு பாத்திரத்தில் 5 கப் சக்கரையைப் போட்டு, அத்துடன் 5 கப் தண்ணீர் ஊற்றிக் கரைத்து அடுப்பில் வைத்து ஒரு கம்பி பதம் வரும்வரை பாகு காய்ச்சவும்.

மற்றொரு அடுப்பில் பாத்திரத்தை வைத்து நெய் அல்லது எண்ணெய் ஊற்றிக் காயவிடவும். காய்ந்ததும் உருட்டி வைத்துள்ள உருண்டைகளைப் போட்டு சிவக்கப் பொரித்தெடுத்து சக்கரைப் பாகில் போடவும். அனைத்து உருண்டைகளையும் போட்ட பிறகு, 5 நிமிடங்கள் கழித்து பாகு இருக்கும் அடுப்பை அணைக்கவும்.

இப்போது ருசியான குலாப் ஜாமூன் தயார். குறைந்தது 3-4 மணி நேரம் வரை குலாப் ஜாமூன் பாகில் ஊறவேண்டும்.

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

### தொடர் 16 -

### 3.2.4. ஒப்புரவு

**304. ஒப்புரவு என்பது என்ன?**

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் தங்கள் பாவங்களை அருள்பணியாளரிடம் அறிக்கையிட்டு, பாவமன்னிப்புப் பெற்று, இறைவனோடும் அயலாரோடும் ஒப்புரவாகிட உதவும் ஓர் அருளடையாளம்.

**305. அருள்பணியாளர்களிடம் ஏன் பாவத்தை அறிக்கையிட்டு பாவமன்னிப்பு பெறவேண்டும்?**

பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் மனம் மாறவும் பாவத்திலிருந்து விடுபட்டு இறைவனோடு ஒப்புரவாகவும் இறைவாக்கினர்கள் அழைப்பு விடுத்தனர்.

புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு யோவானும், இயேசுக் கிறிஸ்துவும் இதே நற்செய்தியை விடுத்து, மனிதரோடும் இறைவனோடும் ஒப்புரவாக அழைப்பு விடுத்தனர். அதைத் தொடர்ந்து பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தை இயேசுக் கிறிஸ்து தம் திருத்தூதர்களுக்கு (திருச்சபைக்கு) அளித்தார். “தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாது இருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா” (யோவா. 20:21-23).

திருத்தூதர்களின் வழியாக வந்த ஆயர்களும் ஆயர்களின் உடனுழைப்பாளர்களான அருள்பணியாளர்களும் பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தைக் கிறிஸ்துவிடமிருந்தே பெற்றுக்கொள்கின்றனர்.

எனவேதான் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுகிறவர்கள் இறைவனின் இரக்கத்தையும், மன்னிப்பையும் பெற்று, இறைவனோடும், திருச்சபையோடும், தம் அயலாரோடும் ஒப்புரவாகிறார்கள் என்றும் இவ்வருளடையாளத்தின் பணியாளர்கள் ஆயரும் அருள்பணியாளரும் மட்டும்தான் என்றும் இரண்டாம் வத்திக்கான் சங்கமும் திருச்சபைச் சட்டமும் கூறுகின்றன (திரு.11, திச 956, ஒப்புரவு அருளடையாளச் சடங்குமுறை, முன்னுரை 9).

**306. அருள்பணியாளர் பாவமன்னிப்பு கொடுக்கும்போது ஏன் ஓர் ஊதா நிற தோள்பட்டையை (Stole) அணிந்துகொள்கிறார்?**

பாவங்களிலிருந்து மனிதனை விடுவிக்கத் தமக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்று காட்டுவதற்காக தோள்பட்டையை அணிந்துகொள்கிறார்.

மனம் வருந்துதலையும் மனமாற்றத்தையும் வெளிப்படுத்த ஊதா நிறம் பயன்படுத்தப்படுகிறது.

**307. பாவப்பொறுத்தல் ஆசி வழங்குகையில் அருள்பணியாளர் ஏன் சிலுவை அடையாளம் வரைகிறார்?**

மனிதருடைய பாவங்களை மன்னிப்பதற்காக இயேசு சிலுவையில் இறந்தார். அவருடைய பேறுபலன்களை முன்னிட்டு பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன எனக் குறிப்பதற்காக.

**308. ஒப்புரவு அருளடையாளத்தில் எத்தனை வகை கொண்டாட்டங்கள் இருக்கின்றன? விளக்கவும்.**

மூன்று:

**அ) தனியாக ஒருவரை ஒப்புரவாக்கும் சடங்குமுறை:**

இது தனியொருவர் அருள்பணியாளரிடம் சென்று தனிப்பாவ அறிக்கை செய்து பாவ மன்னிப்புப் பெறும் முறை ஆகும். இது ‘சாதாரண முறை’ எனப்படுகிறது.

**ஆ) பொது ஒப்புரவுக் கொண்டாட்டத்தில் தனிப் பாவ அறிக்கை:**

இது இறைமக்கள் கூட்டத்தில் (தவக்காலம், திருவிழா நாள்கள்) நடைபெறுகிற திருச்சடங்கு. முதலில் பொதுப் பாவ அறிக்கை செய்தல். பின் ஒவ்வொருவராக அருள்பணியாளரிடம் தனி பாவ அறிக்கையில் ஈடுபட்டு, பாவ மன்னிப்பு பெற்றுக்கொள்ளும் முறையாகும்.

**இ. பொதுப் பாவ அறிக்கையும் பொதுப் பாவ மன்னிப்பும்:**

இயற்கையினாலோ வேறு எந்த காரணத்தினாலோ ஏதாவது ஆபத்துக்கள், விபத்துக்கள் நிகழும்போது இறைமக்களுக்கு பொதுவான பாவமன்னிப்பு வழங்கப்படுகின்ற சடங்கு முறை ஆகும். இதற்கு சில நிபந்தனைகள் உண்டு. போதிய அருள்பணியாளர் இல்லாமை, நீண்ட காலம் காத்திருக்கும் கட்டாயம், அருளடையாள அருளையும் நற்கருணையையும் நீண்ட காலம் பெறமுடியாத நிர்ப்பந்தம், பின் வாய்ப்புக் கிடைக்குமேயானால் தனி பாவ அறிக்கை செய்யப்படும் என்ற தனிமனிதனின் உறுதிப்பாடு.

***ஒப்புரவு :** உள்ளத்தைக் கடினப்படுத்துவதைவிட பாவத்தை அறிக்கையிடுவதே மனிதனுக்கு நல்லது – திருத்தந்தை புனித கிளமெண்ட் I.*

### 3.2.5 நோயில் பூசுதல்

**309. நோயில்பூசுதல் என்பது என்ன?**

சாகும் நிலையில் இருக்கிற நோயாளிமேல் அருள்பணியாளர் நோயாளிகளின் எண்ணெய் பூசி, அந்த அருளடையாளத்தை நிறைவேற்றுவதற்குரிய வார்த்தைகளைச் சொல்வதனால் அவர்களுடைய ஆன்மாவுக்கும் உடலுக்கும் துணையையும் ஆறுதலையும் வழங்குகின்ற ஓர் அருளடையாளம்.



‘நோயில் பூசுதல்’ இதற்கு முன் ‘அவஸ்தைப் பூசுதல்’ என்ற பெயரைப் பெற்றிருக்கிறது.

**310. அருள்பணியாளர் நோயில்பூசுதல் வழங்கும்போது நிறைவேற்றுகின்ற சில சடங்குகள் என்ன?**

- தொடக்கச் சடங்கு: இறைவாழ்த்துடன் தொடங்குதல்:
- **இறைவார்த்தை வழிபாடு:** வாசகமும் மன்றாட்டும், (தேவையானால் எண்ணெய் மந்திரித்தல், போற்றுதல் மன்றாட்டு.
- **அருளடையாளக் கொண்டாட்டம்:** திருஎண்ணெய் பூசுதல் (நெற்றியிலும் கையிலும்), மன்றாட்டு.
- **முடிவு/ நிறைவுச் சடங்கு:** ஆண்டவர் கற்றுத்தந்த இறைவேண்டல், இறுதி ஆசி.

**311. நோயில் பூசுதல் அருளடையாளத்தை என்னென்ன சூழ்நிலைகளில் வழங்கலாம்?**

நோயில் பூசுதல் என்ற அருளடையாளத்தை வழங்குவதற்கான சில வழிமுறைகளை 1972 டிசம்பர் 7இல் “நோயாளிகளுக்கான பூசுதலும் அவர்களின் அருள்பணி நலனும்” எனும் தலைப்பில் ஒரு புதிய திருவழிபாட்டுப் பேராயம் தந்திருந்தது. அவை பின்வருமாறு:

அ) ஒருவர் மிகவும் நோய்வாய்ப்பட்டிருக்கிறார் என்பதை விவேகமாக உணர்ந்திருத்தல்.

ஆ) முன்பு நோயில்பூசுதல் பெற்றவர் அதன் பிறகு நலமடைந்தால் அல்லது இன்னும் அதிகமாக நோய்வாய்ப்பட்டிருந்தால்.

இ) வயதானவர்கள் நோய் ஆபத்தினால் பாதிக்கப்படாமல் இருந்து, அவர்களின் உடல்நிலை தளர்ந்திருந்தால்.

**குறிப்பு:** நோயாளிக்கு ஒரு தடவைக்குமேல் இப்பூசுதலை வழங்கலாம் என்பது தெளிவு.

### 3.2.6 குருத்துவ திருநிலைப்பாடு

**312. குருத்துவம் என்பது என்ன?**

திருச்சபையின் பணியாளர்களுக்கு திருநிலைப்பாட்டினை அளித்து, அவர்கள் இறை பணிக்கு உரியவற்றைத் தகுந்த முறையில் நிறைவேற்றுவதற்கு வேண்டிய அதிகாரத்தையும் வரங்களையும் கொடுக்கிற ஓர் அருளடையாளம். கிறிஸ்துவின் குருத்துவத்தில் பொது குருத்துவமும் தனிக் குருத்துவமும் அடங்கும்.

**1313. கிறிஸ்துவின் பொதுக் குருத்துவத்தில் பங்குகொள்கின்ற பொதுநிலையினரின் சிறப்புப் பணிகள் எவை?**

அ) அருளடையாளக் கொண்டாட்டங்களில் கீழ்வரும் பணியாற்றுகின்றனர்.

- அசாதாரண நற்கருணைப் பணியாளர்.
- வாசகர்
- பீடத் துணைவர்
- பீடப் பணியாளர்
- விளக்கவுரையாளர்
- திருப்பலிக்கு, அருளடையாளக் கொண்டாட்டங்களுக்குத் தயாரிப்பவர் (திருவழிபாட்டுப் பணி, மறைக்கல்விப் பணி)
- கோவிலுக்குள் இறைமக்களை வரவேற்பவர்.
- உண்டியல் எடுக்க உதவுபவர்
- ஞாயிறு திருப்பலி நடைபெறாத இடங்களில் ஞாயிறு இறைவார்த்தை வழிபாடு நடத்துபவர்.
- திருவழிபாட்டுக் குழுவின் உறுப்பினராகச் செயல்படுபவர்
- பாடல் குழுவினர்

**ஆ) அருளடையாளக் கொண்டாட்டங்களுக்கு புறம்பே கீழ்வரும் பணியாற்றுகின்றனர்.**

- புனித வாழ்க்கை வாழ்தல்
- தியாக வாழ்க்கை வாழ்தல்
- பொறுப்புணர்வுடன் வாழ்தல்

**314. திருச்சபையால் வழங்கப்படும் பணி குருத்துவத்தைச் சார்ந்த திருநிலைப்பாடுகள் யாவை?**

ஆயர், அருள்பணியாளர், திருத்தொண்டர் என்போர்

**315. மேற்சொன்ன திருநிலைப்பாடு வழங்கப்படும்போது பொதுவாக என்னென்ன சடங்குகள் பின்பற்றப்படுகின்றன?**

அ) முதன்முதல் அந்தந்த திருநிலைப்பாட்டிற்கு ஏற்றவாறு ஒவ்வொருவரும் நிறைவேற்றவேண்டிய பணியின் தன்மையும் பொறுளும் விளக்கிச் சொல்லப்படுகின்றன. அதனால் உண்டாகும் கடமைகளும் நினைவுபடுத்தப்படுகின்றன.

ஆ) குறிப்பிட்ட திருநிலைப்பாட்டைப் பெறுபவருக்கு அதற்குரிய சிறப்பு மன்றாட்டு வழியாக தூய ஆவியாரின் ஆசி வழங்கப்படுகிறது.

இ) பின் அந்தந்த திருநிலைப்பாட்டிற்குத் தொடர்புடைய பொருள்களும் உடைமைகளும் வழங்கப்படுகின்றன.

**குருத்துவம் :** *“ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் குருத்துவத்தில் அருள்பொழிவு செய்யப்பட்டவரே.”*

**316. ஆயர், அருள்பணியாளர், திருத்தொண்டர் திருநிலைப்பாட்டுச் சடங்குகளை விளக்கவும்.**

**ஆயர் :**

1. திருப்பண்டம் பெறுவோரை முன் கொணர்தல்.
2. திருத்தூதரக ஆணையை வாசித்தல்.
3. இறைமக்களின் ஒப்புதல்.
4. அறிவுரை வழங்குதல்.
5. ஆய்வு (வினாக்கள்+பதில்கள்)
6. புனிதர்களின் மன்றாட்டுமாலை.
7. முடிவு மன்றாட்டு
8. தலைமீது கைகளை வைத்தல்.
9. அருள்பொழிவு வேண்டல்.
10. கிறிஸ்மா தைலம் தலையில் பூசுதல், நற்செய்தி நூல் அளித்தல்.
11. மோதிரம், தலைச்சீரா, செங்கோல் அளித்தல், ஆயருக்குரிய இருக்கையில் அமர்த்துதல்.
12. சமாதான முத்தம் அளித்தல், நன்றிப் பாடல் (Te Deum)

**திருநிலைப்பாட்டுச் சடங்குகள்: அருள்பணியாளர்**

1. திருப்பண்டம் பெறுவோரை முன் கொணர்தல்.
2. குருப்பட்டம் அளிக்க முதன்மை குரு/அதிபர் வேண்டுதல்.
3. இறைமக்களின் ஒப்புதல்
4. அறிவுரை வழங்குதல்.
5. ஆய்வு (வினாக்கள் + பதில்கள்)
6. கீழ்ப்படிதல் வாக்குறுதி
7. புனிதர்களின் மன்றாட்டுமாலை
8. முடிவு மன்றாட்டு
9. தலைமீது கைகளை வைத்தல்.
10. அருள்பொழிவு வேண்டல்
11. திருத்தைலம் பூசுதல் (கைகளில்) திருவுடை அணிவித்தல்.

**திருத்தொண்டர்**

1. திருப்பட்டம் பெறுவோரை முன் கொணர்தல்
2. திருத்தொண்டர் பட்டம் அளிக்க அதிபர் வேண்டுதல்.
3. ஆயரின் ஏற்பும், இறைமக்களின் ஒப்புதலும்.
4. அறிவுரை வழங்குதல் (மணமானவருக்கும் மணமாகாத வருக்கும் தனித்தனியாக)
5. ஆய்வு (வினாக்கள் + பதில்கள்)
6. கீழ்ப்படிதல் வாக்குறுதி
7. புனிதர்களின் மன்றாட்டுமாலை
8. முடிவு மன்றாட்டு
9. தலைமீது கைகளை வைத்தல்
10. அருள்பொழிவு வேண்டல்
11. திருவுடை அணிவித்தல்: நற்செய்தி நூல் அளித்தல்

### 3.2.7 திருமணம்

**317. திருமணம் என்பது என்ன?**

சமுதாயத்தில் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்கின்ற ஒப்பந்த குடும்ப வாழ்வை அருளடையாளம் வழியாக ஆண்டவர் இயேசு மேன்மைப்படுத்தினார். எனவே ஓர் ஆணும் பெண்ணும் இறப்பு வரையிலும் கணவனும் மனைவியுமாக இணைந்து, கூடி வாழ்ந்து அன்பு வழியில் நடக்கவும் தங்கள் பிள்ளைகளைக் கத்தோலிக்க நம்பிக்கையில் வளர்க்கவும் வேண்டிய வரங்களை அவர்களுக்குத் தருகின்ற ஓர் அருளடையாளம்.

**318. திருமணத்துக்கு உரிய சடங்குகள் என்ன?**

- மணமக்களுக்கு அறிவுரை வழங்குதல்
- மணமக்களின் பிரமாணிக்கத்தைப்பற்றி வினவுதல்.
- மணமக்கள் இருவரும் கைகளைச் சேர்த்துப் பிடித்து மன ஒப்புதலை வழங்குதல்.
- ஒப்புதலுக்குப்பின் ஆசி வழங்குதல்.
- மாங்கல்யம் / மோதிரம் புனிதப்படுத்தப்படுதல், இதை அணிவித்தல்.

**319. மாங்கல்யம் / மோதிரம் குறித்துக் காட்டுவது என்ன?**

கணவன் மனைவிக்கு இடையே உள்ள இணைபிரியா அன்பைக் குறிக்கிறது.

(அடுத்த இதழிலும் தொடரும்)

**மன்னாவுக்கு**

**பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar

பணம் பெறுபவர் பெயர் : The Editor, ‘MANNA’

வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.177

## யோசுவா அதிகாரம் 1 முதல் 24 வரை

உங்கள் விடைகளை மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 07 | | | 02 | ❖ | 12 | 16 | | | |
| | ❖ | 27 | 33 | | | 10 | 24 | | 11 |
| 23 | | | | 15 | | | ❖ | | 28 |
| | 20 | ❖ | | | 09 | | ❖ | | |
| | 32 | 17 | | | 29 | 06 | | | ❖ |
| 08 | | 26 | 22 | ❖ | | | | 03 | |
| ❖ | 18 | 01 | | | | ❖ | | | 19 |
| | | | | 34 | 14 | | | | |
| | 30 | ❖ | 05 | | | 31 | 25 | | |
| 13 | | | | ❖ | 21 | | | 04 | ❖ |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(—— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அவர் அவர்களை மாடியில் ஏற்றி அங்கிருந்த ......... தட்டைகளுக்குள் —— வைத்தார்.
5. ஏனெனில் ஆண்டவர் உங்களிடம் ......... ஒப்படைத்துவிட்டார்.
6. .......... உங்களுக்குக் —— கீழ்ப்படிந்தீர்கள்.
7. ஒரு பெரும் கல்லை —— மரத்தின் ........... நாட்டினார்.
8. கீழே ஓடிய நீர் ......... நிலக் கடலாகிய சாக்கடல்வரை ஓடி மறைந்தது.
9. ஏனெனில் அவரது ....... கோட்டைச் சுவரோடு இணைந்திருந்தது.
10. இது எப்ராயிம் மலைநாட்டில் ......... மலைக்கு வடக்கே உள்ளது.
13. அப்போது பெண்கள் —— ஆகியோரும் ....... இருந்தனர்.
15. இவ்வாறு ......... நாள்கள் செய்தனர்.
16. ஆகவே அந்த இடம் இந்நாள்வரை ......... என்று அழைக்கப்படுகின்றது.
17. கிழக்கே யோர்தான் ........ எல்லையாக அமைந்துள்ளது.
23. எனவே மக்களின் நெஞ்சம் ......... இழந்து தண்ணீர்போல் ஆனது.
25. உங்கள் கடவுளாகிய —— மீது ........... கூர்வதில் மட்டும் கருத்தாயிருங்கள்.
27. யோசுவா ........ வாயிலில் பெருங்கற்களை வையுங்கள்.
34. கிபயோன் குடிமக்கள் ....... போல் தந்திரமாகச் சென்றார்கள்.

### வலமிருந்து இடம்

2. அவரது ......... நாடு முழுவதும் பரவிற்று.
3. அவர் அவர்களுக்கும் —— இடையில் .......... வைத்தார்.
4. அதன் ......... அனைத்தும் உங்களுக்குச் சொந்தம்.
20. ஆண்டவர் .......... நடுவில் —— கொண்டோம்.
26. இந்தத் திருச்சட்ட ........... உன் முன்னின்று அகற்றாதே.
29. நாட்டில் போரின்றி ....... நிலவிற்று.
30. இஸ்ரயேல் மக்களில் ........ குலங்களுக்கு —— தரப்படவில்லை.
31. அது இன்று ............. உள்ளது.
34. .......... ஏனெனில் அவர் ............... கடவுள்.

### மேலிருந்து கீழ்

1. ஆனால் .............. முழுவதற்கும் —— காப்பாற்றிக் கொண்டனர்.
2. இதோ நகரினின்று எழும்பிய .......... விண்ணை நோக்கிப் போவதைக் கண்டனர்.
3. உன்னத கடவுளாகிய ஆண்டவரே ..........
5. கதிரவன் .......... வானில் நின்றது.
6. ........... ஆண்டவர் உங்களிடையே வியத்தகு செயல்கள் புரிவார் என்றார்.
10. இவ்வெல்லை —— மேற்காக ......... நதிவரை ஏறிக்கடலில் முடிவடைகின்றது.
11. எபூசியர் .......... மக்களுடன் இன்றும் வாழ்கின்றனர்.
12. ஏனெனில் அவர் அறியாமல்தான் மற்றவரைக் ............... விட்டார்.
14. எல்லா இஸ்ரயேல் —— வறண்ட .......... வழியாக நடந்தனர்.
15. யோசுவா —— காலேபுக்கு ......... வழங்கி எபிரோனை உடைமையாக அளித்தார்.
19. .......... போல் கரைகளைத் தொட்டு ஓடியது.
27. குதிரைகளின் ............ கால் நரம்புகளை வெட்டினார்.
28. தங்கள் மூதாதையரான —— இலசேமிற்குத் ........... என்று பெயரிட்டார்கள்.
32. மாதத்தின் பதினான்காம் நாள் ........ எரிகோ —— கொண்டாடினர்.
33. உங்கள் கடவுளாகிய ஆண்டவர் அதை உங்கள் ........ கொடுப்பார்.

### கீழிருந்து மேல்

3. அதைக் கேள்விப்பட்டவுடன் எங்கள் ......... கலக்கமுற்றது.
4. நான் முற்றிலும் ...... கடவுளாகிய ஆண்டவரைப் பின்பற்றினேன்.
6. இவ்வாறு ஆண்டவர் —— வாக்களித்த .......... முழுவதையும் —— கொடுத்தார்.
8. இஸ்ரயேலர் ........... செய்தனர்.
9. .......... கொண்டு துணிந்து நிற்பீராக என்றனர்.
13. நீங்கள் ....... பயிரிடாத —— செய்தீர்கள்.
14. உங்களுக்கு வேண்டிய உணவைத் ....... செய்யுங்கள்.
15. அவர் ....... மன்னனைத் தூக்கிலேற்றினார்.
18. யோசுவா எல்லா ................ நாட்டையும் தாக்கினார்.
19. நாங்கள் அவர்கள் ............. ஓடுவோம்.
21. உங்கள் கடவுளாகிய ஆண்டவர் —— யோர்தான் ........ உங்கள் —— செய்துள்ளார்.
22. ......... இடிந்து விழுந்தது.
23. ஏனெனில் அவர்களை ............ கையில் ஒப்படைத்துள்ளேன்.
24. இஸ்ரயேலரின் —— விடக் ......... மழையால் இறந்தவர்கள் அதிகம்.
25. .......... என்பவன் ஆனாக்கின் தந்தை.
30. ஆண்டவருக்கு எதிராக ............. இந்தத் துரோகம்?

## அதிர்வுகள் ..... 10ஆம் பக்கத் தொடர்ச்சி

### *யாழ். ஆயர் தீர்வுகளை முன்வைக்க அழைப்பு*

யாழ். மறைமாவட்ட மேதகு யஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆயர் அவர்கள் பாதுகாவலன் பத்திரிகையில் 2017ஆம் ஆண்டுக்கான இயேசுவின் உயிர்ப்புவிழா செய்திக் குறிப்பில் சொல்லப்பட்ட விடயங்களை நாட்டின் ஜனாதிபதி உட்பட வடமாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் கொள்வது இத்தருணத்தில் மிகமிக அவசியமானது. "...இவை (மேற்கூறப்பட்ட பிரச்சினைகளைக் காட்டுகிறார்) தொடர்பாக சுமூக நடவடிக்கைகள் நடைபெறாமையால் இன்று பல இடங்களிலும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப்போராட்டங்கள் நீண்ட நாட்கள் எடுத்து மக்களை இன்னும் வேதனைப்படுத்தாமலும் மக்கள் விரக்தியுற்று வேறு முடிவுகளுக்குப் போகாமலும் இருக்கத்தக்கவிதமாக அரசு வேகமாகச் செயற்பட்டு முடிவுகளைக் காணவேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்..." என்று மிக அழுத்தமாக குறிப்பிட்டுள்ளார்.

"...அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குமுன் உடனடியாக இயல்பு வாழ்வை முழுமையாக ஏற்படுத்துங்கள். மக்கள் குடியிருப்புக்களில் இருந்து இராணுவத்தை முழுமையாக அகற்றுங்கள். அவர்களுக்கு (இராணுவத்திற்கு) அரச காணிகள் நிறையவே உண்டு. போராட்டம் முடிந்தமையால் அவர்கள் தள்ளி இருப்பதே சிறந்தது. காணாமல்போனோர் என்ற விடயத்திற்கு முழுமையான முடிவு காணுங்கள். உண்மையை வெளிக்கொணர்ந்து மக்கள் ஏற்கும் விதமாக அறியப்படுத்துங்கள்... இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாது. அதேவேளை உயிரோடு இருப்பவர்களைக் காலம் காலமாக மறைத்தே வைத்திருக்க முடியாது. எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவு உண்டு. மனித உயிர் சம்பந்தமான இப்பிரச்சினைக்கு இனியும் காலம் தாழ்த்தாது முடிவு காணுங்கள்..." என மேலும் கூறியிருப்பது கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும் மேற்கூறப்பட்ட பிரச்சினைகளுக்கு நடைமுறைக்குச் சாத்தியமான தீர்வைக்காண உதவும் ஒன்றாகவே பார்க்கப்பட வேண்டும். கேள்வி, இவர்கள் பார்ப்பார்களா? தீர்வுகாண முன்வருவார்களா? என்பதுதான்!


### *வெந்த புண்ணில் வேல் பாச்சக்கூடாது*


போரினால் ஏற்பட்ட வடுக்களை இன்னுமின்னும் வலிகளாக மாற்றாமல், கொதிநிலை ஆக்காமல்; அவற்றைப் போக்குகிற, ஆற்றுப்படுத்துகிற பணியினைச் செய்ய நம்முடைய அரசியல்வாதிகள் முன்வர வேண்டும் என்ற கருத்தை 2017 பங்குனி 30ஆம் திகதி மாங்குளத்தில் அமைந்துள்ள 'உயிரிழை' என்ற முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றவர்களுக்கான அலுவலகத் திறப்புவிழாவில் கலந்து உரையாற்றும்போது வவுனியா மாவட்ட மருத்துவமனையைச் சார்ந்த உளநல மருத்துவ நிபுணர் எஸ். சிவதாஸ் குறிப்பிட்டது நம் ஆழ்ந்த கவனத்திற்குரியது. இழப்புக்களைச் சந்தித்து, பல்வேறு வகையில் துன்புறும் மக்களின் துன்பங்களைப் போக்க ஆவன செய்வதை விட்டுவிட்டு அவர்களின் வேதனைகளை அரசியலாக்கி இன்னுமின்னும் அதிகமாக்கக் கூடாது என்பதை ஆட்சியாளர்கள் உணரவேண்டும் - மக்களின் பிரதிநிதிகள் ஆட்சியாளர்களுக்கு உணர்த்தவும் வேண்டும்.

### *முழுஆற்றலையும் சக்தியையும் பயன்படுத்துகிறார்களா?*

அரசியல்வாதிகள் குறிப்பாக வடகிழக்கு அரசியல்வாதிகள் உணர்ச்சிவசப்பட்ட அரசியலுக்கு அப்பால், தங்கள் தனிப்பட்ட கொள்கைகளுக்கு அப்பால், தங்கள் தனிப்பட்ட அரசியல் இலாபங்களுக்கு அப்பால்; மக்கள் நலத்தினை முன்வைத்து மக்களின் இன்றைய அடிப்படைப் பிரச்சினைகளான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதியினைக் கண்டறிதல், இராணுவம் வைத்திருக்கும் மக்களின் வாழ்விடங்களை பெற்றுக்கொடுத்தல், அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவற்றுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க இவர்கள் தங்கள் முழு ஆற்றலையும் சக்தியையும் தந்திரோபாயங்களையும் பயன்படுத்தி தீர்வுகளை உடன்பெற்றுக் கொடுக்க ஆவனசெய்ய வேண்டும். இன்னொரு பக்கத்தில் இல்லை என்று அல்ல, அவர்கள் செய்கிறார்கள்! ஆனால், தேர்தல் காலங்களில் ஆசனங்களைப் பெறுவதற்கு தங்கள் முழுமையான ஆற்றலையும் சக்தியையும் பயன்படுத்தியதைப்போல மேலே சுட்டிக்காட்டிய மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க முயல்கிறார்களா என்பதுதான் இங்கு கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டியது! நம் அரசியல்வாதிகள் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட சிறுமி வேண்டிநிற்கும் மனிதாபிமான வேண்டுதலை நினைவில் கொண்டு செயற்பட்டால், அதுவே போதும்!

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 175 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:





**முதலாம் பரிசு:**
அ. மேரி யசிந்தா,
தாழ்வுபாடு வீதி,
மன்னார்.

**இரண்டாம் பரிசு:**
நி. கிளேயறா,
பெரிய பண்டிவிரிச்சான்,
மடு.

**மூன்றாம் பரிசு:**
செ. புஸ்பாஞ்சலி,
பாப்பாமோட்டை,
திருக்கேதீஸ்வரம்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 77 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 66 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 175ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. அ. மொறின், கொக்குப்புடையான், சிலாவத்துறை.
02. யோ. யூடிற் டலிமா, தோமஸ்புரி, வங்காலை.
03. F. கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
04. நோ. மெறிக்ஷன், பெரிய பண்டிவிரிச்சான், மடு.
05. அ. ஆக்காஷ், கொக்குப்புடையான், சிலாபத்துறை.
06. திருமதி. புஸ்பா சேவியர், உவர்மலை, திருகோணமலை.
07. P. மேரி மொட்வீனா, பீரீஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
08. செ. டெலிஸிற்ராஸ், தாமரைக்குளம், அடம்பன்.
09. வி. தாசன் டலீமா, த.ம. கிராமம், தலைமன்னார்.
10. அ. அபிஷேக், கொக்குப்புடையான், சிலாபத்துறை.
11. அ. ருஷாந்தினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
12. S. லிசா சிமிர்னா, கறுக்காக்குளம், வட்டக்கண்டல்.
13. ஜெ. ஜெனவிம், புதுக்கமம், மன்னார்.
14. செல்வி. வயலட் யோண், யாழ்ப்பாணம்.
15. செல்வி. வி. சியாமி அனுன்சிக்கா, சின்னப்பண்டிவிரிச்சான்
16. செல்வி. அமங்களா அல்போன்சன், பெற்றா, மன்னார்.
17. ராணி அரசரட்ணம், தபாற்கந்தோர் வீதி, மன்னார்.
18. ர. மீரா, 50 வீட்டுத்திட்டம், ப.மு.கிழக்கு, பள்ளிமுனை.
19. J. சுஜாதா, பங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
20. அ. றொக்சன், உயிலங்குளம், மன்னார்.
21. A. வேஜின் செலினி, குமாணாயங்குளம் ஆட்காட்டிவெளி.
22. N. தவமலர், பாடசாலை வீதி, முதலியார்குளம்.
23. S.C.C. நவரத்தினராஜா, முதலியார்குளம்.
24. டெபோறா மோகன்ராஜ், தபாற்கந்தோர்வீதி, மன்னார்.
25. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
26. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
27. கெ. ஜன்ஷன், பொன்தீவுகண்டல், முருங்கன்.
28. கெ. சுவீற்ஷன் சுமித், பொன்தீவுகண்டல், முருங்கன்.
29. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள் நகர், வங்காலை.
30. சி. மேரி ஆன் சபீனா, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
31. N. செபமாலை மரியம்மா பீரீஸ், வங்காலை.
32. நி. மேரி றொசிற்றா குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
33. P. அனற் ஜீவிதா. பாப்பாமோட்டை, திருக்கேதீஸ்வரம்.
34. பி. அனற்லீன், பாப்பாமோட்டை, திருக்கேதீஸ்வரம்.
35. உ. சுவர்ணாத், சமயபுரம், உயிலங்குளம்,
36. ச. கனிஸ்ரா, குருவில், வட்டக்கண்டல்.
37. ஐ. அலோஜிகா, பாலைப்பெருமாள்கட்டு, குருவில்.
38. E.A. ஜான்சி, ஒலிமடு, நானாட்டான்.
34. பி. அனற் செறோன், பாப்பாமோட்டை, திருக்கேதீஸ்வரம்.
35. பா. தர்ஷினி, உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்.
36. S. ஆனந் டில்ஷான், மொறாய்ஸ், வங்காலை.
37. ச. லூக்காஸ் பெர்னாண்டோ, முத்தரிப்புத்துறை.
38. R. ஜெகநாதன், இல: 161 மடுக்கரை, நானாட்டான்.
39. B. நிஷாந்தினி, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
40. S. அனற் சஞ்சிகா, கறுக்காக்குளம், வட்டக்கண்டல்.
41. என்.சி. யூலியானி றோச், ப.மு.கிழக்கு, பள்ளிமுனை.
42. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
43. வி. வேஜின் டிலைக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
44. K. தர்ணிக்கா, மன்னார்.
45. K. ஆன்றிசானா பிகிறாடோ, ப.கிழக்கு, பள்ளிமுனை.
46. சி. நோயல் கிறிஸ்ரி றோச், பள்ளிமுனை, மன்னார்.
47. N. ஜனனி றெவல், பெரியபண்டிவிரிச்சான், மடு.
48. அ. பீற்றர், பியன் மனோ பெரேரா, பள்ளிமுனை.
49. றொசாணி, நானாட்டான்.
50. நர்மதா, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002002978

## நீங்காத நினைவுகள்

### 32ம் ஆண்டு, 05ம் ஆண்டு நினைவு





**திரு. கு.ம. இராஜநாயகம்பிள்ளை** **திருமதி. இ. மேரிப்பிள்ளை**

மலர்வு : 06 - 04 - 1916 மலர்வு : 02 - 04 - 1932
உதிர்வு : 02 - 04 - 1985 உதிர்வு : 27 - 04 - 2012

**“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கைகொள்வோர் இறப்பினும் வாழ்வார்”**

எம்மைப் பிரிந்துபோன அன்புத் தெய்வங்களே!
நிதம் விழியில் விரியும் உங்கள் நினைவில்
இதயம் எரிந்து வேகுகின்றோம்.
கண் இமைகள் சுடர் சிந்துகின்றோம்.

தூக்கிச் சுமந்த உங்கள் கைகளும் - எம்
துக்கம் தணித்த உங்கள் தோள்களும்
தூங்கவைத்த உங்கள் தாய்மடியும்
இனித் தூரமாகிப் போனதே,
துயரம் நெஞ்சை வாட்டுதம்மா!

கருவாய் சுமந்து உருவாய் வளர்த்து
எம்மை உயர்த்திவைத்த எம் அன்புத் தீபங்களே!
இனி உங்கள் நினைவைச் சுமந்து
காலம் முழுவதும் நீங்கள் காட்டிய நல்வழி தொடர்ந்திடுவோம்.

***உம் பிரிவால் துயருறும்:***
***அன்புப் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,***
***பூட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவுகள்.***

# இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் உயிர்ப்பு விழாச் செய்தி

(மூன்றாம் பக்கத்தின் விரிவு)

விசுவாசம் என்னும் கொடையை எம் மத்தியில் பற்றி எரியச் செய்த புனித யோசேவ்வாஸின் ஒப்பற்ற பணி எமக்குள் இன்னும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. அதேவேளை இக்காலமானது குருக்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர் ஆகிய நாம் எமது பணியின் அர்ப்பணத்தை இலங்கையின் அப்போஸ்தலரான புனித யோசேவ்வாஸின் பாதச் சுவடுகளில் மீள்அர்ப்பணிக்கத் தேவையான நேரமாக அமைகின்றது.

உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்குத் தோன்றி, சமாதானத்தை அவர்களுக்குக் கொடையாக அளித்தார். உண்மையான சமாதானம் என்பது நீதியிலிருந்து வெளிப்படுவதாகும். எம் நாட்டு மக்கள் நீதியையும், உண்மையையும் நிலைநாட்ட சரியான வழிகளைத் தேடுகின்ற இந்த நேரத்திலே நாம் கிறிஸ்துவின் உயிர்ப்பைக் கொண்டாடுகின்றோம். எம் தாய்நாட்டில் ஒற்றுமையையும், ஒப்புரவையும் மக்கள் மத்தியில் வலுவடையைச் செய்ய பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாம் ஒருவர் மற்றவரை மதித்து, எம் மத்தியில் காணப்படும் அற்ப வேறுபாடுகளைத் தவிர்த்து, மற்றவர்களுடைய மனிதாபிமானத்தைப் பாதுகாத்து மதிப்பளிக்கின்றபொழுதுதான் இவற்றைச் செய்ய முடியும். சமாதானத்தின் கொடைக்காக கடவுளுக்கு நன்றி கூறி மகிழ்கின்ற இவ்வேளையில், வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகள் இல்லாமலும், பல்வேறு பொருளாதார ஏற்றத்தாழ்வுகளாலும் துன்புறும் ஒவ்வொருவரையும் நினைத்துக்கொள்வோம். பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறுவிதமான திட்டங்கள் இருக்கின்றபோதிலும், அதிகளவான எமது மக்கள் வறுமையில் சூழப்பட்டுள்ளதை நாம் காணுகின்றோம்.

எமது கிறிஸ்தவ சீடத்துவம் என்பது எப்போதும் தேவையில் இருப்பவரைப் பராமரிக்க அழைப்பதோடு, துன்புறுபவர்களில் இயேசுவின் முகத்தைக் கண்டுகொள்வதை எமது கடமை எனவும் எடுத்துக் கூறுகின்றது. ஆகவே உயிர்ப்பின் மகிழ்ச்சியானது எமது சீடத்துவத்தின் தன்மையை ஆழமாகக் கண்டுகொள்ள அழைப்பு விடுக்கின்றது. நாம் எம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரின் நோவுகளையும் நீக்க எம்மால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும். இதனால் அவர்கள் இயேசுவில் நம்பிக்கை கொள்வார்களாக. அவர்தம் சீடர்களுக்கு அருளிய சமாதானத்தின் கருவிகளாக நாம் மாறுவோமாக.

# திருத்தந்தையின் உயிர்ப்பு விழாச் செய்தி

(முதலாம் பக்கத்தின் விரிவு)

உயிர்ப்புப் பெருவிழா ஞாயிறன்று, நண்பகல் 12 மணிக்கு, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தின் மேல்மாடத்திலிருந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கிய Urbi et Orbi அதாவது, ‘ஊருக்கும் உலகுக்கும்’ என்ற உயிர்ப்பு விழா சிறப்புச் செய்தி:

அன்பு சகோதர சகோதரிகளே, உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்! “இயேசு உயிர்த்துவிட்டார், அவர் உரைத்தது போலவே உயிர்த்துவிட்டார்” என்று சீடர்கள் கூறிய அற்புதச்செய்தியை, திரு அவை, இன்று உலகெங்கும் எதிரொலிக்கிறது. அடிமைத்தனத்திலிருந்து எபிரேய மக்கள் விடுதலைபெற்றதைக் கொண்டாடும் பாஸ்காத் திருவிழா, இந்நாளில் நிறைவைப் பெறுகிறது. தன்னுடைய உயிர்ப்பினால், கிறிஸ்து நம்மை பாவத்திலிருந்தும், சாவிலிருந்தும் விடுவித்து, நித்திய வாழ்வின் வழியைத் திறந்துள்ளார்.

பாவங்கள் ஆதிக்கம் செலுத்தும்போது நாம் வழிதவறிச் செல்கிறோம். ஆனால் நல்லாயனான இறைவன், நம்மைத் தேடி வருகிறார். நம்மை விடுவிப்பதற்காக சிலுவை மரணம் வரை தன்னையேத் தாழ்த்துகிறார்.

வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும், உலகம் என்ற பாலை நிலத்தில் வழிதவறிச் செல்லும் சகோதர சகோதரிகளை, உயிர்த்த ஆயன் தேடி வருகிறார். தீமையின் பாரத்தால் நசுக்கப்பட்டிருக்கும் நம்மை, தன் தோள்களில் சுமந்து செல்கிறார். சமுதாயத்தின் விழிம்பு, தனிமை ஆகிய சிக்கலான பாதைகளில் காணாமல்போனவர்களை, உயிர்த்த ஆயன் தேடிச் செல்கிறார். இறைவனோடு மீண்டும் நட்புறவு கொள்வதற்கு ஆயன் அழைத்துச் செல்கிறார்.

மனிதத்தன்மையற்ற கடுமையான தொழில், மனித வர்த்தகம், ஒதுக்கப்படுதல், சுரண்டப்படுதல், தீயபழக்கங்களுக்கு அடிமையாதல் என்ற பழைய மற்றும் புதிய அடிமைத்தனங்களுக்கு உள்ளாகும் மக்களின் சுமைகளை, அவர் சுமந்து செல்கிறார்.

பாவம், மரணம் என்ற இருளை ஒழித்த இயேசு, நாம் வாழும் காலத்தில் அமைதியை அளிப்பாராக! அனைவருக்கும், உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்!

# ‘களங்கம் சுமந்த கல்வாரி நாயகன்’


## நானாட்டான் திருப்பாடுகளின் காட்சிப் பதிவுகள் சில













# ‘சிலுவையில் இரட்சணியம்’ உடக்குப் பாஸ்

## பேசாலை திருப்பாடுகளின் காட்சிப் பதிவுகள் சில











## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**- மன்னா நிர்வாகம்.**



## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம்** : கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்


உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப் பெற ஏன் நீங்கள் வழிசெய்யக்கூடாது?

ஒரு வருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா - ரூபா 800.00
வெளிநாட்டுச் சந்தா - ரூபா 3,500.00

**எம்மோடு தொடர்புகொள்ளுங்கள் :**
077 - 7420811, 023 - 2250789

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. பறுணாந்து பிலிப்பு பொன்னுக்கோன்**
(குழந்தையேசுபுரம், மன்னார்)

மலர்வு : 30 - 03 - 1938
உதிர்வு : 23 - 05 - 2016

**"என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதிநாளில் உயிர்த்தெழச் செய்வேன்" (யோவான் 6:39**

எம் குடும்பத்தலைவனே!
எம் வாழ்வின் வழிகாட்டியே!
உம் பிரிவால் எம் கண்ணீரும் காயுமுன்னே
ஆண்டொன்று வந்ததையா.
எல்லோர்க்கும் நல்லவராய் - பண்புடனே
இவ்வுலகில் நீர் வாழ்ந்த வாழ்வும்,
புன்னகைத்த உம் வதனமும்
எம் மனதில் என்றும் நிலைத்திடுமே!
நீங்கள் என்றும் ஆண்டவன் சந்நிதியில்
இன்புற்று அமைதிபெற நிதமும் நாம்
வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## 40ம் நாள் நினைவஞ்சலி



**திரு. சந்தியோகு கியூபட் பறுநாந்து**
(கிராம சேவையாளர், 8ம் வட்டாரம், பேசாலை)

மலர்வு : 16 - 07 - 1967
உதிர்வு : 17 - 03 - 2017

**"என்னிடம் ஒப்படைத்தவர்கள் என் மாட்சியைக் காணுமாறு அவர்களும் நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு இருக்க வேண்டும் என விரும்புகின்றேன்" (அரு. 17-24).**

ஏற்ற பணிகளை, ஏறுநடையுடன் எளிதாக்கி,
எக்காரியத்திலும் செயல்வீரனாய் ஏகிச்
செயற்பட்டவரே.

ஆண்டுகள் பலகோடி சென்றாலும்
ஆறாதையா உம் பிரிவுத் துயர்!
ஆண்டவனை வேண்டுகின்றோம் -
உம் ஆன்மா அவர்பாதம் சாந்தியடைய!

**பிரிவால் நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 07 1985



உதிர்வு 30 04 2007

**செ. அன்ரனி அரவிந்தன்**
(பல்கலைக்கழக புகுமுக மாணவன்)
(சின்னக்கடை, மன்னார்)

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் இலக்கணமாய்
கனவுகள் ஆயிரம் கொண்டு இலட்சியங்கள் பல தொகுத்த
நினைவில் திகட்டாத உன் எழிலுருவம் தீரவில்லையடா!
நீ எம்மைவிட்டு பிரிந்து பத்தாண்டு கடந்தாலும் - உன்
நினைவோ எம்மைவிட்டு ஒருபோதும் பிரிவதில்லை
எம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் அரவிந்தா
உன் விண்ணுலகு வாழ்விற்காக
இறைவனிடம் இரந்து நிற்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு அம்மா, அப்பா, தங்கைகள், தம்பி குடும்பம்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 06 1939



உதிர்வு 02 05 2014

**திரு. பெஞ்சமின் அமிர்தநாதன் (விமலதாஸ்)**
(ஓய்வுபெற்ற கிராம சேவை உத்தியோகத்தர், மன்னார்)

தந்தையே..... வாழ்க்கை தந்த உம் பெருமையினை
எந்தக் கவிதையால் சொல்லிவிடடியும் அப்பா....
ஆண்டுகள் மூன்றைக் கடக்கின்றது
உங்கள் நினைவுகள் நெருங்குகின்றது
எங்களில் இளமையாய் உம் நினைவலைகள்.
மூன்றாண்டு போனாலும் மூவுலகிலும் உம்போல்
யாரையும் காணமுடியாதையா!
இறைவனின் சந்நிதியில் நீங்கள் இன்புற்று இளைப்பாறுங்கள்

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 05 1956



உதிர்வு 07 04 2016

**திரு. செபஸ்ரியன் பீலிக்ஸ் ஜோர்ஜ் rej pa hNf h** (சின்னக்கடை, மன்னார்)

ஓராண்டல்ல ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் எம்மை
விட்டகலுமோ உங்கள் அன்பு முகம்?
நம்பமுடியவில்லையே அப்பா உங்கள் பிரிவை?
சென்று வருகிறேன் என்று தலையசைத்து சென்ற நீங்கள்,
காலைத் திருப்பலியும் நிறைவாகக் கண்டு,
வங்கிக் கடமைகளையும் நிறைவேற்றிய பின்பு,
வீடுவர நினைத்த வேளை கணப்பொழுதில் உயிர் பிரிந்ததே!
நினைக்க நினைக்க ஆறவில்லையே நெஞ்சம்
வாழ்ந்த காலம் போதுமென்றா விரைந்து சென்றீர்கள்?
மறக்க முடியவில்லையே அப்பா, மாறுமோ எம் துயரம்?
உங்கள் ஆன்மா இறையில் இணையப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, மகள், உறவினர், நண்பர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 02 1932



உதிர்வு 25 04 2016

**திருமதி. றீற்ரா மரியநாயகம்**
(குருநகர், யாழ்ப்பாணம்)

**"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது" (திபா. 115:6).**

அன்பின் பிறப்பிடமே. எம் குடும்பச் சுடர் ஒளியே...
அன்போடு அம்மா என்றழைக்க நீங்களில்லையே...
காலங்கள் பல கடந்து சென்றாலும்
இன்று எங்கள் உணர்வுகளோடும்,
நினைவுகளோடும் கலந்து வாழ்கின்றீர்.
ஓராண்டுகள் அல்ல ஓராயிரம் ஆண்டுகள் மறைந்த
சென்றாலும் ஒரு கணமாவது உங்களை நினைக்காது
எங்கள் மன ஓரவிழிகள் உறங்குவதில்லை...!

**பிரிவால் நினைந்துருகும், குடும்பத்தினர், உறவுகள்.**

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 11 1949



உதிர்வு 01 04 2016

**திருமதி. ஆசீர்வாதம் பிலோமினா**
(நெழுக்குளம், வவுனியா)

ஓராண்டு ஓடினாலும் கலங்கித்தவிக்கும் எங்கள் இதயங்கள்
கண்களில் இன்னும் கண்ணீர் ஓயவில்லையே அக்கா!
'கணீர்' என்ற சத்தம் இன்று மங்கிப்போனதே
ஓடித்திரிந்த கால்கள் இன்று முடங்கிப் போனதே
எம் தேவைக்காய் உம் தேகம் உருக்கிய மெழுகுவத்தியே.
பாசக் கூட்டின் பறவை ஒன்றை இறை இரக்கத்தின்
வெள்ளியிலே இரக்கத்தின் ஆண்டவர் அழைத்திட்டார்!
அன்புக் கணவரும் ஆருயிர் மைந்தனும் வரவேற்க
மண்ணுலகில் எம்மைத் தவிக்கவிட்டுச்சென்றீர்கள்.
மறப்போமோ நீங்கள் காட்டிய தாய் அன்பை!

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்புச் சகோதரிகள், பெருமக்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 29 08 1924



உதிர்வு 18 03 2017

**திருமதி. றோஸ் மாகிறேற் செல்வரெத்தினம் பிரான்சிஸ்**
(சின்னக்கடை, மன்னார்)

எம் பாசமிகு அம்மாவை 92 வருடங்களாக உடல், உள, ஆன்ம நலன்களால் நிறைவாக ஆசீர்வதித்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். இவ்வுலகில் வாழ்ந்தபோது இறைபற்று மிக்கவராய், பொறுப்பு மிக்க மனைவியாய். பாசமிகு தாயாய், அன்பான அக்காவாய், அன்ரியாய், பாசமிகு அம்மம்மாவாய், மம்மாவாய் வாழ்ந்து உங்களுக்கென்றிருந்த கடைமைகளை செவ்வனே நிறைவேற்றினீர்கள். உங்களைக் காணாது நாங்கள் கலங்குகின்றோம். இறைவனின் சந்நிதியில் நீங்கள் இன்புற்று இளைப்பாற இறையருள் வேண்டி நித்தமும் செபிக்கிறோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரங்கள், உற்றார், உறவினர்கள்.